
# குன்றின் குரல்

விலை
ரூ 10

ஆண்டு 11 செப்டம்பர் 92 இதழ் 3

இன்றைய
மாணவர்
உலகம்



மாற்றாந்தாய் மடியில்
மலையகக் கல்வி

மலையகக் கல்வியும்
வரலாற்றுப் பின்னணியும்

அனைத்து மனிதர்களும்
அறிவு ஜீவிகளே

சிறுகதைகள்

தியாக பூமியிலே......
பெரியசாமி பீ.ஏ ஆகிவிட்டான்

# குன்றின் குரல்

ஆண்டு 11

இதழ் 3

செப்டம்பர் ' 92

ஆசிரியர் -

அந்தனி ஜீவா

ஆசிரியர் குழு -

வண. மரிய அந்தனி
திருமதி. வசந்தி சிவகாமி
செல்வி. க. மேனகா பீ.ஏ. (சிறப்பு)

இணை ஆசிரியர் -

ஜே. ஜேஸ்கொடி

பொறுப்பாசிரியர் -

பெ. முத்துலிங்கம்

வெளியீடு -

தோட்டப் பிரதேசங்கட்கான
கூட்டு செயலகம்

அச்சுப் பதிவு -

லங்கா வெளியீட்டகம்
கொழும்பு.

முகவரி -

குன்றின் குரல்
30, புஸ்பதான மாவத்த,
கண்டி.

## அறிவு ஜீவிகள் ஒன்றுபட வேண்டும்

"இலங்கையிலுள்ள பாடநூல்கள், பாடத்திட்டங்களில் தோட்டத் தொழிலாளர்களின் வருகை, அவர்கள் பட்ட துன்பங்கள், இலங்கை பொருளாதாரத்துக்கு அவர்கள் ஆற்றிவரும் பங்கு, வாழ்க்கை நிலை, அரசியற் பழிவாங்கல்கள், புவியியற் சூழல், தேயிலை ஆராய்ச்சி போன்ற விடயங்களை இணைப்பதற்கு சகல கல்விமான்களும் குரலெழுப்ப வேண்டும். இது ஒரு சமூகக் கடமையாகும். இது மலையக மக்கள் தன்னைப்பற்றி அறிவதற்கு மட்டுமன்றி, இலங்கையிலுள்ள பிற இன மக்கள் இவர் களை சரியாக மதிப்பிடவும் வழிவகுக்கும். இதன் மூலம் இன்று நிலவி வரும் மலையக மக்கள் மீதான "இன அந்நியத்தன்மை" ஓரளவு நீக்கப்படலாம்."

இவ்வாறு மலையக பட்டதாரியும், விரிவுரையாளருமான திரு. எஸ். இராஜேந்திரன் என்பவர் தமது ஆய்வுக்கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இது எத்தகைய உண்மையை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது என்பதனை நாம் அறிய முடிகிறது.

பாட நூல்களைப் பார்க்கும் போது ஏனைய சமூகத்தவர்களின் தலைவர்கள், அறிஞர்களைப்பற்றி எல்லாம் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் மலையக தலைவர் களைப்பற்றியோ, இலக்கிய முன்னோடி களைப்பற்றியோ குறிப்புக்கள் இல்லை.

வடக்கிலே பிறந்த ஆறுமுக நாவலரையும், கிழக்கிலே பிறந்த சுவாமி விபுலானந்த அடிகளாரையும் நமது மாணவர்கள் அறிந்து வைத்திருக்கும் அளவிற்கு மலையகத்தின் நிர்மாணச் சிற்பி கோ. நடேசய்யர் அவர்களைப்பற்றிய தகவல்கள், அவர் ஆற்றிய பணிகள் மாணவ மணிகளுக்கு மாத்திரமல்ல, மலையகத்து ஆசிரியர்களுக்கே தெரியாது.

இதனை எல்லாம் கருத்திற் கொண்டு மலையக அறிவு ஜீவிகள் ஒன்று கூடி பல திட்டங்களை வகுத்து செயற்பட முன்வர வேண்டும்.

மலையக கல்வி முன்னோடிகளைப் பற்றி, இலக்கிய முன்னோடிகளைப் பற்றி, தொழிற்சங்க முன்னோடிகள், சமுதாய பணியாளர்கள் பற்றிய வரலாறுகளை நூலுருவில் அச்சில் கொண்டு வர வேண்டும்.

மலையகத்தில் உள்ள அறிவு ஜீவிகள் அனைவரும் ஒன்றுபட்டு மலையகக் கல்வி, கலை இலக்கிய வளர்ச்சிகளை அறிய பல பணிகளை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும்.

'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்று பார்த்துக் கொண்டிராமல் உடனடியாக இதனை செயற்படுத்த வேண்டும்.

ஆசிரியர்

# ஒரு நிமிஷம் ஒரே பார்வையில்

மலையகத்தின் இன்றைய குறை வளர்ச்சி நிலைக்கான அடிப்படைக் காரணிகளில் ஒன்றான இவ்விதழ் மலையகக் கல்வியைப்பற்றிய கட்டுரைகளை உள்ளடக்கிய சிறப்பிதழாக வெளிவருகின்றது. மலையகம் அல்லது தோட்டக்காடு எனக்கூறும் போது, பின்தங்கிய பிரிவினர், கல்லாதோர் என்றே பெரிதும் கருதப்படுவதுண்டு. தமிழ் மொழியில் மட்டுமல்லாது சிங்கள மொழியில், 'கந்துக்கரே' 'வதுகரே' எனக் கூறும் போதும் இவ்வாறே அடையாளம் காணப்படுவதுண்டு. இவ்வாறே கருதப்படுகின்றமை முற்றிலும் யதார்த்தமானதே. மலையகத்தை பொறுத்தமட்டில் ஏனைய சமூகத்தைச் சார்ந்த அறிவு ஜீவிகள், கல்விமான்கள், கற்றோர், என்போருடன் ஒப்பீடு செய்யக் கூடிய பிரிவினர் எழுபதுகளின் இறுதிவரை ஒப்பீட்டளவில் இல்லையென்றே கூறலாம். ஆங்காங்கே ஒரு சில கற்றோர் தோன்றிய போதிலும் ஓர் வர்க்கத் தட்டினராக தோன்றவில்லையென்றே கூறலாம். இவ்யதார்த்த நிலை மலையகம் என்றால் கல்வியறிவு அற்ற பிரிவினர், பின்தங்கிய பிரிவினர் என்ற மனோ பாவத்தை ஏனைய சமூகத்தினர் மத்தியில் உருவாக்கியுள்ளது. எவ்வாறாயினும் எழுபதுகளின் இறுதியுடன் இவ்யதார்த்த நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியதுடன் தற்போது அறிவுஜீவிகள் என்ற வர்க்கத்தட்டினரை மலையகம் பிரசவித்துக் கொண்டிருக்கின்றது. மலையகம் பிரசவித்த அறிவுஜீவிகளில் அன்னையை மறந்து விட்டு சுயநலம் கருதி வேறிடம் தேடி ஓடியுள்ள, ஓடும் ஓடுகாலிகள் மத்தியில் தாம் அன்னையின் வளர்ச்சியை பிரதான பணியாகக் கருதி தமது தாயகத்திலேயே தம் பணியை மேற் கொண்டுள்ள அறிவுஜீவிகள் இருக்கின்றார்கள் என்பதனை இவ்விதழின் கட்டுரைகள் வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை மலையகம் குறைவளர்ச்சி நிலையில் இருக்கின்றமைக்கு, அவர்களின் கல்வி நிலையே பிரதான காரணம் என்பது மறுக்க முடியாத காரணம். அவ்வாறாயின் அந்நிலை நீக்குவது அத்தியாவசியமாகும். நிலவும் நிலையினை அகற்ற, அல்லது மாற்ற வேண்டுமாயின் அதனை செய்ய முற்படும் பிரிவினர் முதலில் நிலவும் யதார்த்தினை நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும். இதனடிப்படையில் "குன்றின் குரல்" நிலவும் மலையகக் கல்வியை மாற்ற வேண்டுமாயின், அதனைப் பற்றிய ஆய்வினை மேற் கொண்டது. அதன் விளைவே இங்கு காணப்படும் ஆய்வுக் கட்டுரைகளாகும்.

இங்கு காணப்படும் கட்டுரைகளின் ஆசிரியர்களில் ஒருவரைத் தவிர ஏனையோர் அனைவரும் மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்டோர் என்பதனை 'குன்றின் குரல்' பெருமையுடன் கூறவிழைகின்றது. மலையகத்தை சார்ந்த தற்போது, கொழும்பு பல்கலைக்கழக, கல்வித்துறைத் தலைவர் சோ. சந்திரசேகரம் அவர்கள் தமது ஆய்வுக் கட்டுரையின் மூலம் இலங்கையின் தேசிய கொள்கை வகுப்போர், மலையக கல்விக்கு எந்தளவு முக்கியத்துவத்தை அளித்து வந்தார்கள் என்பதனை ஆதார பூர்வமாக நிரூபித்துள்ளார். ஓர் குறைவளர்ச்சி சமூகத்தைச் சார்ந்த ஒருவர் பல்கலைக் கழகமொன்றின் கல்வித்துறை தலைவராக இருந்து கொண்டு தம் சமூகத்தின் குறை வளர்ச்சிக்கான காரணிகளை கல்வி வரலாற்று ரீதியாக எடுத்துகாட்டுகின்றமை ஓர் வரலாற்று முக்கியத்துவமாகும். திரு. சோ. சந்திரசேகரம் அவர்கள் ஏனைய சமூக, பொருளாதார காரணிகளை ஆராயாது தனியே கல்வி வளர்ச்சி என்ற ரீதியில் இவ்விடயத்தைப் பற்றி ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். திரு. சோ. சந்திரசேகரம், அவர்கள் குன்றின் குரலை பிரசுரிக்கும் நிறுவனமான தோட்ட பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகம் நடாத்திய ஆங்கிலக் கருத்தரங்கில் சமர்ப்பித்த கட்டுரையின் தமிழாக்கமே "சமகால மலையக நிலைப்பாடும், அதன் வரலாற்று பின்னணியும்" என்ற கட்டுரையாகும். திரு. சோ. சந்திரசேகரத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆங்கிலக் கட்டுரையை குறிப்பிட்ட கருத்தரங்கின் போது ஆய்வு ரீதியாக ஆராய்ந்த, திரு. எல். சாந்திகுமார் அவர்களே இதனை தமிழாக்கம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வளரும் இக்கட்டுரையைத் தொடர்ந்து மலையத்தின் இளம், அறிவுஜீவிகளான திரு . சு. முரளீதரன், செல்வி. க.மேனகா, கோ. சேனாதிராஜா போன்றோர். மலையகக் கல்வியை ஆய்வுரீதியாக நோக்கியுள்ளதுடன், எதிர்பார்க்கும் நிலைக்கு மலையக கல்வியை கொண்டு வரவேண்டுமாயின், களைய வேண்டிய தளைகளைப்பற்றியும் குறிப்பிடபட்டுள்ளமை சிந்திக்கத் தூண்டுவதாக அமையும் என்பதில் ஐயமில்லை. இவற்றுடன் மலையகத்தை பிறப்பிடமாகக் கொள்ளாவிட்டாலும் மலையகத்தின் விடிவிற்காகவும், வளர்ச்சிக்காகவும் குரலெழுப்பி வரும் வட, கிழக்கு அறிவுஜீவிகள் மத்தியில் கிழக்கு மாகாணத்தைச் சார்ந்த திரு. செ. யோகராஜா அவர்கள் பொதுவாக மாணவர் உலகம் என்ற கட்டுரையில் தமிழ் மாணவர்களின் மனோநிலையை படம் பிடித்து காட்டியுள்ளதுடன், மலையகத்தை மறந்தோடும் அறிவுஜீவிகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

இவற்றுடன், சாரல் நாடனின் நூல் விமர்சனக் கட்டுரையும், மலையகத்தின் அறிவுஜீவிகள் வெளியேற்றத்தை குறிப்பிடும், நூரளை சண்முகநாதனின் சிறுகதையும், (இச் சிறுகதை எழுபதில் எழுதியது என்பது குறிப்பிடத்தக்கது.) புதைக்குழிக்கு கூட உரிமையில்லாத நிலையை பிரதிபலிக்கும் திரு. எம். நாமதேவனின் சிறுகதையுடன் மலையகத்தின் தேவைகளை பிரதிபலிக்கும் கவிதைகளும் இவ்விதழில் வெளிவந்துள்ளது. அதேவேளை அறிவுஜீவிகள் என்றால் யார் என்பது பற்றிய க்ராம்சியின் வியாக்கியானத்தை தாங்கிய கட்டுரையும் வெளிவந்துள்ளது.

இம்முறையும் வாசகர்களிடமிருந்து சிறப்பான விமர்சனங்கள் எம்மை வந்து சேரும் என்ற எதிர்பார்ப்புடன் .........

பொறுப்பாசிரியர்.

# மலையகத்தில் கல்வி

## செல்வி க. மேனகா

மனிதன் பூரண வளர்ச்சி பெறுவதற்கு கல்வி இன்றியமையாதது என்பது இன்று அனைவரும் அறிந்த உண்மையாகும். இதனால் கல்வி அனைத்து மக்களுக்கும் பொதுவானது என பறைசாற்றப் படுகின்றது. ஆனால் உலகின் அனைத்து நாடுகளினதும் வறிய மக்கள் இக்கல்வியைப் பெறுவதில் சம சந்தர்ப்பத்தை பெறவில்லை என்பதை அண்மைய ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை நிரூபித்துள்ளது. இப்பின்னணியுடன் இலங்கை வறிய மக்களின் கல்வி நிலையை குறிப்பாக மலையக மக்களின் கல்வி நிலையை நோக்குவோமாயின் மலையகம் எந்தளவு தூரம் பின்தங்கியுள்ளது என்பது நன்கு புலனாகலாம். மேலும் இக்கட்டுரை அரச பாடத்திட்டத்திற்கமைய பாடசாலைகளில் கற்பிக்கப்படும் கல்வி எந்த நிலையில் உள்ளது என்பதையே ஆராய்கின்றது.

கல்வியின் முன்னேற்றம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றதுடன் குறிப்பிட்ட நாட்டுக்குள்ளேயும் வேறுபட்டிருக்கும் நிலையைக் காணமுடியும். இவ்வேறுபாடு நாட்டில் காணப்படும், வர்க்க தட்டுகளுக்கு ஏற்பவும், இனங்களுக்கேற்பவும் வித்தியாசப்படுகின்றது. எவ்வாறாயினும் இலங்கையில் எழுத வாசிக்கத் தெரிந்தோர் விகிதத்தை தாய்லாந்து தவிர ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து அந்நாடுகளை விட இலங்கை முன்னணியில் திகழ்கிறது.

| | 1970 | 1985 |
|---|---|---|
| இலங்கை | 78% | 87% |
| இந்தியா | 34% | 43% |
| பாக்கிஸ்தான் | 21% | 29% |
| பிலிப்பைன்ஸ் | 82% | 86% |
| மலேசியா | 67% | 72% |

(இலங்கை சமூக பொருளாதார பெறுபேறுகள் 1990 தரவுகளைப் பயன்படுத்தி வரைந்த அட்டவணை)

மேலே காட்டப்பட்டுள்ளவாறு எழுத வாசிக்கத் தெரிந்தோர் விகிதத்தில் இலங்கை ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து முன்னணியில் திகழ்ந்தாலும் இலங்கைக் குள்ளே இருக்கும் ஒரு பகுதியான மலையகத்தில் எழுத வாசிக்கத் தெரிந்தோர் விகிதம் மிகக் குறைவாகவே உள்ளது. இந்நிலைமை தீவுக்குள்ளேயே இன்னுமொரு தீவா எனும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

மலையகத்தில் கல்வி நிலை இவ்வாறு பின்தங்கியிருப்பதற்கு அவர்களின் வாழ்நிலை, சூழல் என்பதோடு அரசியலும் ஓர் காரணமாகும். நாட்டின் ஏனைய பகுதிகளில் கற்பதற்காகக் காணப்படும் வசதிகளுடன் மலையகத்தில் காணப்படும் கற்பதற்கான வசதிகளுடன் ஒப்பிடுகையில் இப்பின் தங்கிய நிலைமைக்கான காரணத்தை அடையாளம் காணலாம்.

நகர, கிராமப் புறங்களோடு தோட்டத் துறை மக்களில் எழுத வாசிக்கத் தெரிந்தோர் விகிதம் தோட்டத்துறை மக்களாகவே இருக்கும்.

| 1987 தரவின்படி | வயது 5 - 9 | வயது 10 - 13 | வயது 14 - 18 |
|---|---|---|---|
| நகரம் | 86% | 98% | 94% |
| கிராமம் | 85% | 98% | 95% |
| தோட்டம் | 66% | 85% | 72% |

| 1987 தரவின்படி | வய்து 17 -25 | வயது 46 - 55 | 55க்கு மேல் |
|---|---|---|---|
| நகரம் | 96% | 90% | 84% |
| கிராமம் | 94% | 81% | 72% |
| தோட்டம் | 69% | 56% | 46% |

(இலங்கை சமூக பொருளாதார பெறு பேறுகள் 1990 தரவுகளைப் பயன்படுத்தி வரைந்த அட்டவணை)

தோட்டத்துறை அமைப்பு முறையை எடுத்து நோக்கின் ஒரு குடும்பத்தில் தாய், தந்தை இருவரும் மலையில் வேலை செய்ய வேண்டிய நிலை. இவர்களுக்கு தாகத்தைத் தீர்க்கவோ அல்லது களைப்பாறவோ அவர்கள் தொழில் புரியும் இடத்தில் சிற்றுண்டிச்சாலை போன்ற வசதியின்மையால் அவர்களின் பிள்ளைகளே தேநீரை அவா களுக்குக் கொண்டு சென்று கொடுக்க வேண்டிய நிலை. இப்படியான காரணங் களுக்காகவும், பெண் பிள்ளைகளின் வயது வந்து விட்டது என்ற காரணத்திற்காகவும் பாடசாலையிலிருந்து நிறுத்தி விடுகின்றனர். நம் பெற்றோர், பெண் பிள்ளைகளுக்கு வயது வந்ததும் தன்னோடேயே மலையில் வேலைசெய்ய வேண்டும் என அத்தாய் விரும்புகிறாள். இதனாலேயே தோட்டப் புறத்தை கிராம, நகர பாடசாலை செல்லா தோர் விகிதத்துடன் ஒப்பிடுமிடத்து தோட்டப் புறத்திலேயே பாடசாலை செல்லதோர் விகிதம் அதிகமாகக் காணப்படுகிறது. 1987ன் தரவின்படி வயதடிப்படையில் பாடசாலை செல்லாதோர் விகித்ததை ஒப்பிடின்.

| | 10-13 | 14-18 | 19-25 | 36-45 | 46-55 |
|---|---|---|---|---|---|
| நகரம் | 3 | 6 | 4 | 5 | 10 |
| கிராமம் | 3 | 4 | 6 | 10 | 19 |
| தோட்டம் | 15 | 29 | 34 | 33 | 44 |

(இலங்கை சமூக பொருளாதார பெறுபேறுகள் 1990 தரவுகளைப் பயன்படுத்தி வரைந்த அட்டவணை).

ஒரு மாணவனின் பாடசாலை வாழ்க்கை பாலர் பாடசாலையிலேயே ஆரம்ப மாகின்றது. ஏனைய இடங்களில் உள்ளது போல பாலர்களுக்குரிய வசதி வாய்ப்புடை யதாக பாலர் பாடசாலைகள் தோட்டப் பகுதியில் இல்லை. பாலர் பாடசாலை, கூச்ச நிலை போக்கல், பாடசாலை ஒழுங்கு என்பவற்றிற்கான ஒரு இடமாக அமை கின்றது. இவ்வாசனையே அறியாத மலையக மாணவர்கள் பாடசாலைக்கு அனுமதிக்கும் போது ஒரு திடீர் சூழ்நிலை மாற்றத்திற்கு உள்ளாகின்றார்கள். இந்நிலை இவர்களை பாரதூரமான மனோவியல் பாதிப்பிற்கு உட்படுத்துகின்றது. இம் மனோவியல் பாதிப்பானது இவர்களை நீண்ட கால ஓர் பின்னடைவிற்கு இட்டுச் செல்கின்றது. இதுவே இம்மாணவர்கள் 5ம் வகுப்பு புலமைப் பரீட்சையிலும் சித்தியடையாமைக்கு வழி வகுக்கிறது. சித்தியடைந்த மாணவர்களில் சிலருக்கு அவர்களின் பெற்றோரின் வருமானம் சுட்டிக் காட்டப்பட்டு புலமைப் பரிசில் நிராகரிக்கப்படுகின்றது. இப்பெற்றோரின் சம்பளம் நிரந்தரமற்றது என்பது கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. மலையக சமூகத்தின் வளர்ச்சிக் குறலை கூட கவனத்தில் கொள் ளாது புள்ளி சலுகைகளும் மறுக்கப் படுகின்றது. ஆரம்ப காலத்தில் கொண்டு வரப்பட்ட மசோதாக்களிலோ, வெள்ளைய றிக்கையிலோ மலையக மக்களை கவனத்தில் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

# மலையகக் கல்வியைப் பாதிக்கும் அரசியல் பிரச்சினைகள்

எஸ். இராஜேந்திரன்

மலையகக் கல்வியைப் பாதிக்கும் அரசியல் ரீதியான பிரச்சினைகளை முதலில் நோக்குவோம். இலங்கையின் கல்வி கொள்கையானது மாறி மாறி பதவிக்கு வருகின்ற அரசாங்கத்தின் கொள்கையோடு இணைந்ததாக மாற்றியமைக்கப்படுவது யாவரும் அறிந்த உண்மையாகும். இதன் காரணமாக இலங்கை நாட்டுக்கென நிரந்தரமான ஒழுங்கமைக்கப்பட்ட கல்விக் கொள்கையொன்று இல்லை. 1984ல் கொண்டு வரப்பட்ட கல்வி வெள்ளையறிக்கை பல கல்விமான்களால் எதிர்க்கப்பட்ட போதிலும் அது கவனத்தில் கொள்ளப்படாது நடைமுறைப் படுத்தப்பட்டது. ஏற்கனவே மிக தாழ் நிலையிலிருந்து பெருந் தோட்டத்துறை பாடசாலைகள் கொத்தணி முறையால் எவ்வித பலனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பல பாடசாலைகள் சிங்கள கொத்தணிக்குக் கீழ்கொண்டுவரப்பட்டன. இதனால் அவை ஒதுக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றன. தமிழ் மொழி மூல கொத்தணி தலைமைப் பாடசாலைகளும் போதிய வசதிகளின்றியே காணப்படுகின்றன.

மலையகக் கல்வியைப் பாதித்துள்ள இன்னொரு விடயம் இனவாதமாகும். மலையகப் பகுதியின் கல்வி நிருவாகம் மத்திய, ஊவா மாகாண சபைகளுள்ளேயே பெருமளவு உள்ளடங்குகிறது. இந்த மாகாண கல்வி நிறுவன அமைப்புகளில் மலையகத் தமிழர்களுக்கு எவ்வித நிர்வாக பலமும் கொடுக்கப்படவில்லை. இந்த உண்மையை 'மலையக அரசியல்வாதிகளே' ஒப்புக் கொண்டுள்ளனர்.

கோட்டக் கல்வி அமைப்புகளில் இந்நிலையே காணப்படுகின்றது. உதாரணமாக முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ் மொழி மூல பாடசாலைகளைக் கொண்ட வலப்பனை கோட்டக் கல்வி அலுவலகத்தில் கல்வியதிகாரி ஒருவர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ் மொழி மூல மத்திய மகா வித்தியாலயம் என்ற தரத்துக்கு ஒரு பாடசாலைகூட தரமுயரவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும். இப் பகுதியில் சிங்கள மொழிமூல மத்திய மகா வித்தியாலயங்கள் நான்கு காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மலையகக் கல்வியைப் பாதிக்கும் இன்னொரு முக்கிய விடயம் 'தொழிற்சங்க அரசியலாகும்' மலையகத்தில் உள்ள எந்த ஒரு நேர்மையான கல்விமானும் இதன் தாக்கத்துக்கு உட்படாமலில்லை. ஆசிரியர் நியமனம், பதவியுயர்வு, பாடசாலைக் கட்டிடம் அமைத்தல், மலசல கூடமமைத்தல் போன்ற சகல அம்சங்களிலும் இந்த அரசியல் செல்வாக்குக் காணப்படுகிறது. இதில் வேடிக்கை என்னவெனில் 'கற்றவர்கள்' என்று கூறிக் கொள்ளும் ஒரு கூட்டம் இந்த இழி செயல்களுக்குத் துணை போவதாகும். மலையக மக்களின்பால் கருத்துக் கொண்டுள்ள ஆசிரியர்கள் பலர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனினும் அண்மைக் காலத்தில் பல ஆசிரியர்கள் இதைத் துணிந்து கண்டித்து வருகின்றனர். புதிய ஆசிரியர் அமைப்புகளை உருவாக்கவும் முயன்று வருகின்றனர்.

பொதுவாகக் கல்வி முறை அச் சமூகத்தை பிரதிபலிப்பதாகவே அமைய வேண்டும், ஆனால் இலங்கையிலுள்ள ஏனைய சமூகங்களினது கலாச்சார வாழ்க்கை முறைகள் கல்வியில் புகுத்தப் பட்டுள்ளது. ஆனால் மலையக மாணவர் களைப் பொறுத்த வரை அவர்களுடைய கலாச்சார வாழ்நிலைக்குப் புறம்பாக ஏனைய சமூகங்களினது கலாச்சார வாழ்நிலை தொடர்பாக போதிக்கப்படுவதும் இவர்கள் கல்வியில் பின் தங்கியிருப்பதற்கு இன்னொரு காரணமாகக் கூறலாம்.

ஆரம்ப காலங்களை விட தற்போது கல்வியின் முக்கியத்துவம் மலையக மக்களால் உணரப்பட்டுள்ளது. தற்போது நம் பெற்றோர் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்கின் றார்கள். பாடசாலைப் பாடங்களை வீட்டில் வந்து கற்க இவர்களுக்குத் தனியான அறை இல்லாவிடினும் ஏதோ ஒரு மூலையில் பல இரைச்சல்களுக்கு மத்தியில் தங்கள் பாடங்களை இயன்றளவு கற்கின்றனர். இவ்வாறு பல கஷ்டங்களுக்கு மத்தியில் கல்வி கற்கும் இவர்கள் 10 ம் வகுப்பு இறுதிப் பரீட்சையில் பூரண சித்தியடைய முடியாத நிலையில் உள்ளனர். இதே வேளை அரை அடிமை வாழ்க்கை அமைப்புக் கொண்ட தோட்ட அமைப்பு முறையிலிருந்து விடுபடவேண்டும் என்ற உணர்வு நிலவுவதால் தான் இவர்கள் நகர்ப்புறம் நோக்கி வேலைக்காக நகரும் சூழ்நிலையேற்படுகின்றது. எனினும் படித்து விட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருப்போர் எண்ணிக்கை மலையகத்தில் இன்று அதிகரித்து வருகின்றது.

யதார்த்த நிலைமை இவ்வாறிருக்கும் போது இந்நிலையை மாற்றுவதற்கான ஒரு முன்னெடுப்பை இது வரை எடுக்காமைக்கு காரணம் மலையகத் தலைமைகள் மலையகக்கல்வியின் யதார்த்த நிலையை புரிந்து கொள்ளவில்லை என்றே சந்தேகிக்கத் தோன்றுகின்றது. சமூக வளர்ச்சிக்கு சமூகத்தில் தோன்றும் அறிவு ஜீவிகளின் எண்ணிக்கையே ஒரு காரணமாக அமைகின்றது. இந்நிலையில் தேசிய கல்வி நீரோட்டத்தில் இணையும் வகையில் மலையகத்திற்கென கல்வித் திட்டத்தை வகுக்காது நிலவும் யதார்த்தத்தை எவ்வாறு மாற்றியமைக்க முடியும்?

✡

நூல் : சமகால சமூகப்பார்வைகள்

## ஆண்டாண்டு காலமாய்
## மாற்றாந்தாய் மடியில்
## மலையகக் கல்வி !

# எண்பதுகளிலா அதன் உண்மை ஆரம்பம்?

சு. முரளிதரன்

இலங்கைக் கல்விக்கு ஒரு நீண்ட வரலாறு இருக்கின்றது. 16ம் நூற்றாண்டுக்கு முந்திய 2000 வருடங்களை முதற் கட்டமாகக் கொள்ளலாம். இக்காலப்பகுதியில், பௌத்த சமய வருகைக்கு முன் பிராமணர்கள் கடைப்பிடித்த கல்விமுறைகளும் பௌத்த சமய எழுச்சிக்குப் பின் பிக்குமார்களின் செல்வாக்குக்குட்பட்ட கல்வி முறைகளும் பிரதான இடங்களை வகிக்கின்றன.

இரண்டாம் கட்டமென குறிப்பிடக்கூடிய 16ம் நூற்றாண்டிலிருந்து சுதந்திர காலம் வரை தொடர்ந்த அந்நியர்களின் செல்வாக்குக்குட்பட்டிருந்த காலம். இக்காலத்தே கிறிஸ்தவமதச் செல்வாக்கு இலங்கைக் கல்வியைப் பாதித்தமை தொடக்கம் விஞ்ஞான தொழில் நுட்பக் கல்வி போதனா முறைமைக்குள் கொண்டுவரப்பட்டமை வரை மிக முக்கியமான பல அம்சங்களைப் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஏற்படுத்தியிருந்தனர். இவ்வாறு இவர்களால் ஏற்படுத்தப்பட்டுப் படிப்படியாக வளர்ச்சியடைந்த முறைசார்ந்த கல்வி, மூன்றாம் கட்டமாகக் கொள்ளப்படக் கூடிய 1948க்குப் பின்னரான கல்வி வளர்ச்சியின் அடிப்படையாக அமைந்து இன்று வரை தொடர்கின்றது.

இவ்வாறு நீளும் இலங்கைக் கல்விவரலாற்றில் மலையகத் தமிழ் மக்களின் கல்வி எங்கே ஆரம்பமாகின்றது, இன்று வரையிலான அதன் வளர்ச்சிப் போக்கு எவ்வாறிருக்கின்றது என்பதைப் பிரித்துப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுவதற்கு ஓர் அடிப்படைக் காரணம் அன்றிலிருந்து இன்றுவரை மலையகக்கல்வி மாற்றாந்தாய் மனப்பாங்கில் வளர்க்கப்பட்டமையே. இம்மக்களின் சரீர உழைப்பை மட்டுமே பிரதானமாகக் கருதும் அமைப்புக்குள் கண்துடைப்பாகக் கல்வி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையை மேலோட்டமாக மலையகக் கல்வி வரலாற்றைப் பார்க்கும் போது உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

1815ல் கண்டி இராச்சியம் கைப்பற்றப்படுகின்றது. 1824ல் கோப்பிப் பயிர்ச் செய்கையோடு இம்மக்களின் வரலாறு தொடங்கப்படுகின்றது. 1830ல் இம்மக்களின் கல்வி வரலாறு ஆரம்பமாவதாகக் கொள்ளப்படலாம். இக்காலம் தொடக்கம் 1977 வரையான காலப்பகுதியை ஆய்வாளர்கள் பலர் மூன்று கட்டங்களாகப் பிரித்து நோக்குகின்றனர்.

### 1830 – 1920

கண்டிச் சிங்களவர்கள் பெருந்தோட்டங்களில் தொழிலாளராகப் பணிபுரிய மறுத்தமை காரணமாக தென்னகத்திலிருந்து தமிழர் தொழிலாளராக வரத் தொடங்குகிறார்கள். குடிவரவு அதிகரிப்போடு சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தமையால், இவர்களுக்குப் பாடசாலைகள் அமைக்க வேண்டிய தேவையேற்பட்டது. இதற்காக இருவகை நிலையில் பாடசாலைகள் எழுந்தன. சுயமாக அமைக்கப்பட்ட பாடசாலைகள் இதில் முதலாவதாகும்.

இந்தச் சுயமாக அமைக்கப்பட்ட பாடசாலைகளின் கர்த்தாக்கள் கங்காணிமார்களாகும். இந்த வகைப் பாடசாலைகளிலும் கூட இரு விதமான பிரிவுகள் காணப்பட்டன. கங்காணிமார்களினதும் தோட்ட உத்தியோகத்தினரினதும் பிள்ளைகள் நகரப் பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்காக ஆங்கில அறிவையும் கணித அறிவையும் வழங்கும் பாடசாலைகளும் மாலை நேரங்களில் லயன் அறைகளிலும் விறாந்தாக்களிலும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஒழுக்கம், சமயம் ஆகியவற்றைப் போதிக்கும் பாடசாலைகளுமே அவை. இந்த இடத்திலேயே தொழிலாளர்கள் பிள்ளைகளுக்குப் பாரபட்சம் காட்டும் நிலை தோன்றியதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. 1904ல் மலையகத்தில் இயங்கிய 179 பாடசாலைகளில் 120 இவ்வாறான சுயமாக அமைக்கப்பட்டவைகளாகவே இருந்தன.

இரண்டாவது வகையாகக் கருதப்படக் கூடியது மிஷன்மார்களினால் மலையகத்தில் அமைக்கப்பட்ட பாடசாலைகளாகும். 1842ல் சீடோசன் என்னும் கிறிஸ்தவ மதகுரு கண்டிக்கு அண்மையிலுள்ள கோப்பித் தோட்டத்தில் ஒரு பாடசாலை ஆரம்பித்ததைத் தொடர்ந்து இவ்வகையான பல பாடசாலைகள் எழுந்தன. ஆனாலும் இப்பாடசாலைகள் போதிய நிதி பலமின்மையாலும் அரசாங்க ஆதரவின்மையாலும் குறுகிய காலத்துக்குள் செயலிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டன.

1854ல் தமிழ் கூலி மிஷன் என அழைக்கப்பட்ட தமிழ்த்திருச்சபை மிஷன் தொழிலாளர் பிள்ளைகளுக்கும் உத்தியோகத்தர் பிள்ளைகளுக்கும் வெவ்வேறான பாடசாலைகளை அமைத்து 400 தோட்டப் பாடசாலைகளை மலையகமெங்கும் நடத்தியது. அதனைத் தொடர்ந்து புரட்டஸ்தாந்து, மெதடிஸ்ட் நிறுவனங்களும் இந்து சமய, தனியார் நிறுவனங்களும் பாடசாலைகளைத் தோற்றுவித்தன.

## 1870 – 1948

இந்த இரண்டாங்கட்டம் மலையகக் கல்வியில் பல முக்கியமான அம்சங்களை ஏற்படுத்த வேண்டிய பகுதியாகக் கருதப்பட்டாலும் பெரும் திருப்பம் ஏற்படாமல் நகர்ந்து போனதாகும்.

இக்காலப் பகுதியில் அரசினால் கல்வித் தொடர்பாக பல சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1869ல் அரசு தோட்ட உரிமையாளர்கள் பாடசாலைகளை கட்டாயமாக அமைக்க வேண்டும் எனக் கோரியது. இதற்கு அவர்கள் பெருமளவு உடன்படாவிடினும் பாடசாலைகள் அமைத்தல் மேலும் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைத் தருவிப்பதற்கு ஒரு கவர்ச்சிகரமான அம்சமாக இருக்குமெனக் கருதி இவ்வாறு செய்தனர்.

1907, 1920, 1939, 1947 முதலான ஆண்டுகளில் அரசு கல்வி தொடர்பான பல முக்கிய அம்சங்களை முன்வைத்து சில கல்விச் சட்டங்களை அமுல்படுத்தியது. பாடசாலைக் கட்டடங்களை அமைத்தல், தளபாடங்களை வழங்குதல், கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல் நேரசூசிகைகளை அமைத்துப் பாடசாலைகளை நிர்வகித்தல், தகுதியான ஆசிரியர்களை நியமித்தல் முதலியன சட்டத்தின்பாற் கொள்ளப்பட்டன. என்றாலும் மலையகத்தைப் பொறுத்தவரையில் இவைகள் சரியாக அமுல்படுத்தப்படவே இல்லை.

## 1948 – 1977

சுதந்திரத்திற்குப் பின்னலான மூன்றாம் கட்டம். 1943ல் கன்னங்கராவின் இலவசக் கல்வித் திட்டமுட்பட்ட பல சிபார்சுகள் இப்பகுதியில் இலங்கையெங்கும் வெற்றிகரமாகச் செயற்படத் தொடங்கியது. ஆனால் அவரின் அறிக்கையில் தோட்டப் பாடசாலைகள் குறித்துச் சரிவர ஏதும் கூறப்படவில்லை என்பதும் அவரால் அமைக்கப்பட்ட கல்விக்குழுவில் இம்மக்களின் சார்பாக ஒருபிரதிநிதியும் இல்லை என்பதும் வருத்தத்துக்குரிய விடயங்களாகும்.

1947 இல் தோட்டப் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டதென்றாலும் குடியுரிமை பறிக்கப்பட்ட இம்மக்கள் குறித்து அது தீவிரமாகக் கொள்ளப்பட்டுச் செயற்படுத்தப்படவில்லை. இவ்வாறு 1948 லிருந்து தொடர்ந்து 30 ஆண்டு காலப்பகுதியில் மலையகக் கல்வியானது சீந்துவாரின்றிப் புறக்கணிக்கப்பட்ட நிலையிலிருக்க, தேசியக் கல்வித்துறையானது எழுச்சியுற்று அதனைச் சார்ந்த மக்களின் வாழ் நிலையை மேம்படுத்திக் கொண்டிருந்தது.

1970 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. இதன் ஆட்சிக்காலத்தில் 1972, 1975 களில் காணிச் சுவீகாரிப்புச் சட்டம் அமுலாக்கல் தொடர்பாகத் தோட்டங்கள் தேசியமயமாகின. அதனைத் தொடர்ந்து தோட்டப் பாடசாலைகளும் தேசியமயமாக்கப்பட்டன.

## 1980க்குப் பின்

1981ல் அனைத்துத் தோட்டப் பாடசாலைகளும் தேசியமயமாக்கப்பட்டு விட்டன. எண்பது வரை தடுமாறிக் கொண்டிருந்த மலையகக் கல்வியின் சரியான அஸ்திவாரம் பலகாலம் கழித்து இடப்பட்டு இப்பகுதியிலேயே ஆரம்பமாவதாகக் கொள்ளப்படலாம். 150 வருட காலத் தேக்கநிலைக்குப்பின் ஏனைய பிரிவினரால் அனுபவிக்கப்பட்ட தேசியக் கல்வி நீரோட்டத்துக்கு மலையகக் கல்வி கொண்டுவரப்பட்ட பின் நிகழ்ந்த முக்கிய அம்சங்களை இனி நோக்கலாம்.

தோட்டப் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டு, கல்வி அமைச்சுக்குக் கீழ் கொண்டு வரப்பட்டமை பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய விடயம். தேசியமயமாக்கப்பட்ட பின் பல காரணிகள் நிமித்தம் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டன. 1948ல் 993 தோட்டப் பாடசாலைகள் இருந்தன. 1981ல் 639 ஆக எண்ணிக்கை குறைந்தது. இது பாடசாலை செல்வோர் தொகையிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும். பாடசாலைகள் தேசியமயமானாலும் அதற்கு முன்னர் இருந்த நிலைமைகளே தொடர்ந்தும் காணப்படுகின்றன. ஆசிரியர் பற்றாக்குறை – பல வகுப்புகளுக்கு ஓராசிரியர், நிலம், நீர் போன்ற அடிப்படை வசதிகள் இன்மை, தளபாடங்கள் – கற்பித்தல் உபகரணங்கள் இன்மை போதிய மேற்பார்வை இன்மை, மாணவர்களின் பெருந்தொகையான இடைவிலகுதல் முதலான தோட்டப் பாடசாலைகளுக்கே உரித்தான முனைப்பான குணாம்சங்களிலிருந்து இன்னும் பூரணமாக விடுபட முடியாத நிலை தொடர்கின்றது.

1977 இல் மலையகத் தமிழ் மக்களுக்கு நீண்ட காலமாக ஒரு பிரதிநிதி இல்லாத குறையை திரு. தொண்டமான் பாராளுமன்றத்துக்குச் செல்வதன் மூலம் தீர்த்து வைத்தார். இவருக்கான நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி பாடசாலைகளுக்கே செலவிடப்பட்டமை கருத்தில் கொள்ள வேண்டிய அம்சமாகும். 1978 ல் இவர் அமைச்சர் ஆனதும் இம்மக்களின் நம்பிக்கை அதிகமாகியது.

1980ல் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு அப்பகுதியில் படித்த வாலிபர்களே ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 402 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. இதனை முழுமையாக இந்திய வம்சாவழி இளைஞர்கள் அனுபவிக்காவிட்டாலும் தகுதியுள்ள பெரும்பாலானோர் ஆசிரியர்களானார்கள். யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் தோட்டப் பாடசாலைகளில் பலவித சிரமங்களுக்கு முகம் கொடுத்து தம்மால் இயன்ற அளவுக்குக் கடமையாற்றிக் கொண்டிருந்தாலும், இந்தப் புதிய ஆசிரியர்களின் நுழைவினால் கல்வியோடு கூடுதல் ஐக்கிய நிலை ஏற்படுத்திக் கொண்டார்கள் எனலாம். தம்மவர்கள் ஆசிரியர்கள் என்பது அவர்களில் இவ்வளவுகாலம் தொழிலாளர்களாக மட்டும் கருதும் மனப்பாங்கிலின்று சற்றே வெளிவரச் செய்ததோடு, ஆசிரியர் -பெற்றோர் இருவழித் தொடர்பை ஏற்படுத்தியது.

1981ல் ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கம் இலவசப் பாடநூல் விநியோகத்தைத் தொடங்கியது. பெருந்தோட்டப் பகுதியின் பாடசாலைகளுக்கு பெரிதும் மாற்றத்தை ஏற்படுத்தக் காரணமாக

அமையக் கூடியதாக இருந்தது. பிள்ளைகளின் கல்விச் செலவில் பிரதானமாக இருந்த புத்தகக் கொள்வனவு சுமை குறைந்தமை பாடசாலைத் தொகையைச் சிறிது அதிகரித்து, இடைவிலகுவோர் தொகையையும் குறைத்திருக்கும் எனலாம். இக்கூற்றின் மெய்ப்பாடு குறித்து ஆய்வு செய்தல் அவசியமாகும். என்றாலும் பாடநூல் விநியோகம் ஆசிரியர்கள் கற்பித்தலை இலகுவாக்கிக் கொள்ளவும், பெற்றோர்களுக்கும் தமது பிள்ளை கற்க வேண்டியது குறித்துத் தெரிந்து கொள்ளவும் இதனால் ஆசிரிய - பெற்றோர் உறவு பலப்படவும் காரணமாக அமைந்ததெனக்கூறலாம்.

1982 இல் முன்வைக்கப்பட்ட கல்வி வெள்ளை அறிக்கையைப் பார்க்கும் போது, மலையகப் பிள்ளைகள் குறித்து எவ்வித பட்சமான அம்சங்களையும் கொண்டிருக்கவில்லை. இதில் குறிப்பிட்டபடி பாலர் வகுப்புகள் பாடசாலைகளில் இல்லாமல் ஆண்டு ஒன்றிலிருந்து தொடங்கப்படுவதாக இருந்தது. தோட்டங்களில் முன்பாடசாலை (Pre-School) வசதிகள் இல்லை எனவே கூறலாம். அவ்வாறான நிலையில் பாலர் வகுப்புகள் அற்றுப் போவது சரியான அடிப்படையை ஏற்படுத்த முடியாத அபாயத்தைக் கொண்டிருந்தது.

மேலும், மூன்று ஆண்டிலிருந்து ஆங்கிலப் பாடப் போதனை பற்றிக் கூறப்பட்டாலும் தோட்டப் பாடசாலைகளில் தனி ஒரு ஆசிரியரே அனைத்துக் கருமங்களையும் மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கையில் ஆங்கில ஆசிரியர்கள் அங்கு நியமித்தல் குறித்து ஏதும் கூறப்படவில்லை.கொத்தணிப் பாடசாலைகள் வெள்ளை அறிக்கை சிபார்சுபடி அமைக்கப்பட்டாலும் பல தோட்டப் பாடசாலைகள் சிங்கள தலைமைக்கு உட்பட்டு, தனித்துவச் செயற்பாடுகள் தடைப்பட்டன. இவ்வாறான சில பாதகமான அமசங்களைக் கொண்டதாக வெள்ளை அறிக்கை காணப்பட்டது.

1983 இது குறித்து விரிவாக சொல்லத் தேவை இல்லை. இலங்கைத் தமிழ் மக்கள் குறிப்பாக இந்தியத் தமிழர்கள் எதிர்காலமே வெறிச்சோடிப் போய் பௌதீக, உளச்சேதங்களுக்கு உட்பட்ட பகுதியாகும். 1983ல் பாடசாலைக் கட்டிடங்கள், ஆசிரியர் விடுதிகள் சேதமாக்கப்பட்டன. சில பாடசாலைகள் நீண்ட காலமாக அகதிகள் முகாம்களாக இயங்கின. மலையகத்தில் பணிபுரிந்த வடக்கு-கிழக்கு ஆசிரியர்கள் இடம்பெயரவோ அல்லது திருப்திகரமான சேவையை ஆற்ற முடியாத நிலையையோ ஏற்படுத்தியமை, மலையகப் புத்திஜீவிகள் (அதிபர்கள், சமூக சேவையாளர்கள், கல்விமான்கள்) வெளியேற்றம் நிகழ்ந்தமை முதலான பல நிலைமைகள் நல்ல திசையில் திரும்பிக் கொண்டிருந்த மலையகக் கல்வியில் பெருவீழ்ச்சியை ஏற்படுத்தின எனலாம். இதனால் ஏற்பட்ட மந்தநிலை 1984 முழுதும் ஓரளவு நீடித்தது.

1985ல் மீண்டும் மலையகக்கல்வி புதிய பாதையில் பயணத்தை ஆரம்பிக்க சர்வதேச உதவி நிறுவனங்கள் உதவத்தொடங்கின. மலையக மக்களின் வாழ்நிலை, அவர்களின் பின்னடைவான கல்விநிலை என்பன உதவி வேண்டப்படுகின்ற இலக்குக் குழுவாக அங்கீகரிக்கப்பட காரணமாகி சீடா, ஜீடி இஸெட், நோராட் போன்ற நிறுவனங்கள் உதவி செய்யத் தொடங்கின. சீடா, நுவரெலியா, களுத்துறை பகுதிகளில் பாடசாலைக்கட்டிடங்கள் அமைத்தல், ஆசிரியர் விடுதிகள் அமைத்தல், உபகரணங்கள் வழங்குதல், சேவைக்கால ஆசிரியப் பயிற்சி வழங்குதல். முதலான நடவடிக்கைகளை ஆரம்பித்து 350 பாடசாலைகளை அபிவிருத்தி செய்யத்தொடங்கியது.

இந்த சீடா நிறுவனம் செய்த மற்றுமொரு முக்கியமான பங்களிப்பு பெருந்தோட்டப்பகுதியில் நிலவும் ஆசிரியர்ப் பற்றாக்குறையை நிவர்த்திக்க க.பொ.த (சாதாரண) பரீட்சையில் சித்திபெற்ற இளைஞர்களுக்கு ஒருவருடகால சேவைமுன் பயிற்சியை வழங்கி ஆசிரியநியமனங்கள் வழங்கியமையாகும். இதனால் ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவு நீங்கியது மட்டுமல்லாமல் படித்த மலையக இளைஞர்கள் தொழில் வாய்ப்புக்காக வெளியேறாமல் தமது பகுதியிலேயே தொடர்ந்துமிருக்க வாய்ப்பை ஏற்படுத்தியது. மேலும் மலையகத்தில் தொழிலாளர் குழுவாக மட்டும் பிரதானப்படுத்தப்பட்டிருந்த இந்தியத் தமிழர், அரசாங்க ஊழியர்களாக மாறுவதற்கும் இது வழிவகை செய்து சமூக உயர்வை ஏற்படுத்த காரணமாகியது.

ஜெர்மன் உதவி நிறுவனமான ஜி.டி. ஐ.செட் நிறுவனமும் கொட்டகலை, ஹட்டன், தலவாகொல்லை முதலான பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு கட்டிடம், ஆசிரியப்பயிற்சி, கற்பித்தல் உபகரணங்கள் என்பவற்றை வழங்கு வதோடு, பத்தனையில் ஸ்ரீபாத கல்வியல் கல்லூரியையும் அமைத்து பெருந் தோட்டப்பகுதிகளில் பணி புரிவதற்கான ஆசிரியர்களை தயார் செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வாறு நுவரெலியா, கண்டி மாவட்ட பாடசாலைகளில் பல துரிதமாக பௌதிக வளங்களை பெற்று முன்னேற இவ்வெளிநாட்டு நிறுவனங்கள் உதவுகின்ற வேளையில் ஏனைய பாடசாலைகள் இவ் வசதியை அனுபவிக்காமலும் இதற்கேற்ற வகையில் அரசாங்கத்தின் ஊட்டத்தை பெறாமலுமிருக்கின்றமையால், மலையகத்துக்குள்ளும் ஒரு சீரான பரவலுக்குட்படாத கல்வி வளர்ச்சி காணப்படும் நிலையை உருவாகியுள்ளது.

1984, 1987 ஆண்டுப்பகுதிகளும் இவ்வாறு நகர்ந்து செல்ல, 1988ல் நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் பல தமிழ் மாகாணசபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, மத்திய மாகாணசபையில் தமிழர் ஒருவர் கல்வியமைச்சராகின்றார். இந்நிலைமை மலையகக் கல்வி அபிவிருத்தியில் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தாவிடினும் மலையகக்கல்வியில் அரசியல் செல்வாக்கு அதிகமாக வழிவகுத்தது. அவ்வப்பகுதி மாகாணசபை உறுப்பினர்கள் தனது செயற்பாட்டுக்கு முக்கிய ஸ்தலமாக பாடசாலைகளை பயன்படுத்த தொடங்கினர். அதிபர்கள், கல்வி அதிகாரிகள் நியமனம், ஆசிரிய இடமாற்றம் முதலானவற்றில் இவர்கள் பெருமளவு அக்கறை கொண்டுள்ளனர்.

1988, 1989 காலப்பகுதியில் ஜேவிபியினர் செயற்பாடு காரணமாக நகர்ப்பகுதிகளில் இடைநிலை, உயர்கல்வி பெறுவோர் பல சிரமங்களுக்கு உள்ளானாலும் தொடர்ந்து மலையகக்கல்வியின் மெதுவான வளர்ச்சி வீதம் காணப்படலாயிற்று.

எண்பதுகளின் இறுதியில் அரசாங்கம் மேற்கொண்ட இலவச மதியவுணவுத்திட்டம், ஜனசவிய பயிலுனர் ஆசிரியர் நியமனம் என்பனவற்றை மலையகமும் அனுபவிக்கக் கூடியதாயிற்று.

இலவச மதியவுணவு திட்டம் பாடசாலைக்கு மாணவர் வரவை கூட்டியதோடு மந்த போசனை நிலையை ஓரளவு களைய முயற்சி எடுத்தது. அது மட்டுமல்லாமல் இவ்வுணவு விநியோகம் பெற்றோர்களைப் பாடசாலையோடு கூடுதல்

## தமிழகத்தில் 'மக்கள் மன்றம்'

தமிழகத்தில் கோத்தகிரி, கூடலூர், குன்னூர், போன்ற இடங்களில் குடி ஏற்றி உள்ள மலையக மக்களிடையே 'மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம்' என்ற அமைப்பு பணியாற்றி வருகிறது. இந்த அமைப்பில் இருந்து "மக்கள் மன்றம்" என்ற பெயரில் கடந்த ஐந்தாண்டுகளாக பத்திரிகை ஒன்று வெளியிடப்படுகின்றது.

மக்கள் மன்றத்தில் இங்கிருந்து அங்கு சென்று குடியேறியுள்ள மக்களைப் பற்றிய பல தகவல்கள் இடம் பெற்றுள்ளன. இந்த அமைப்பில் முக்கியஸ்தர்களாக முன்னாள் ஹைலண்ட்ஸ் கல்லூரி அதிபர் திரு. இர. சிவலிங்கம், மலையகத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு. சு. திருச் செநதூரன் மற்றும் எம். சந்திர சேகரன், வீரா. பாலச் சந்திரன், செல்வராஜ் போன்றவர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்களால் "ஜனநாயக தொழிலாளர் சங்கம்" என்ற புதிய தொழிற் சங்கம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதன் தலைவராக மலையக மக்கள் மறுவாழ்வு மன்ற பொதுச் செயலாளரான திரு. இர. சிவலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**"மக்கள் மன்றம்"**
**த. பெ. எண். 2758,**
**கோயம்புத்தூர்-11,**
**தமிழ் நாடு.**

என்ற முகவரிக்கு தொடர்பு கொண்டால் 'மக்கள் மன்றம்' பத்திரிகையை பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. ஜேஸ்கொடி.

ஈடுபாட்டை ஏற்படுத்தியதெனலாம். ஆனால் தனியாசிரியர் பாடசாலைகளில் ஆசிரியர் இந்த உணவு விநியோகத்தையும் மேற் கொள்ள வேண்டியிருந்தமையால், அவரால் கல்வி நடவடிக்கையில் பூரணமாக ஈடுபட முடியாமலிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பின் உணவு முத்திரையாக இது மாற்றப்பட்ட பின் பாடசாலை மாணவர்கள் கூட்டுறவுகளை நாடி அவசிய மானவற்றைப் பெற்றுக்கொள்கிறார்கள். என்றாலும், இதற்காக அவர்கள் அனுபவிக்கும் சிரமத்தை மலையமெங்கும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஏனெனில் ஏனைய பகுதிகளை விட மலையகத்தில் கூட்டுறவு கடைகள் மிகக்குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. தோட்டங்கள் தோறும் கூட்டுறவு கடைகள் இருக்குமாயின் இத்திட்டம் மாணவர்களுக்கு பெரிதும் பயனளிக்கக்கூடியதாக இருக்குமெனலாம் பயிலுனர் ஆசிரியர் நியமனம் பெருமளவு படித்த மலையக வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பை தேடித் தந்ததோடு தோட்டப்பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாட்டையும் ஓரளவுக்கு குறைக்க முன்வந்தது. ஆனால் இவர்களின் தகுதியும், உயர்கல்வி வாய்ப்பை நாடாமல் க.பொ.த (சாதாரண) தரத்தோடு தொழில்வாய்ப்பை பெற்றுக் கொண்டமையும் எவ்வாறு மலையகத்தின் எதிர்கால நிலைமையில் மாற்றங்களை விளைவிக்கப்போகின்றன என்பதையும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இவ்வாறு மலையகத்தின் ஆரம்பக் கல்வியே சரியான முறையில் அமுல் நடத்தபட முடியாமல் இருக்கையில் உயர் கல்வி பற்றிப் பேசுவது பொருத்தமாகாதென்றும், இத்தகு சவால்களுக்கு மத்தியிலும் மாணவர்கள் சிலர் கல்வித்தாகத்தோடு உயர் கல்வியைத் தொடர்ந்து பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர் என்பது, மலையகத்துக்கு போதுமான வசதி வாய்ப்புகள் இருக்குமாயின் கல்வியில் ஏனையப் பிரதேசங்களுக்கு நிகராக செயற்படமுடியுமென்பதை காட்டுவதாக இருக்கின்றது.


மலையகத்தில் போதியளவு கணித ஆசிரியர்களில்லை. எனவே க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் கணிதங் காரணமாக அதிகமானோர் சித்தியடைய முடியாமலிருக்கின்றது. இது அவர்களின் உயர்கல்வி வாய்ப்பை தடைப்படுத்தும் பிரதான காரணியாக இருக்கின்றதென்பதை குறிப்பிட்டே ஆகவேண்டும். உயர்கல்விக்கு தகைமை பெற்றாலும் மலையகத்தில் தமிழ்மொழி மூலமாக க.பொ.த உயர்தரம் படிக்க காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகும். தமிழ் மத்திய மகா வித்தியாலங்கள் இன்று வரை ஒன்று கூட அமைக்கப்படவில்லை. பட்டதாரி ஆசிரியர்கள் போதுமானதாக நியமிக்கப் படவில்லை. இவ்வாறு பல பாதக காரணங்களை அடுக்கிக் கொண்டு போகலாம். இக்குறைபாடுகளை அரசு கருத்திற் கொண்டு பல்கலைக்கழக தெரிவில் இம்மக்களுக்கு எவ்வித சலுகையும் வழங்குவதில்லை. எனவே சனத்தொகை விகிதாசாரப்படி 9% இருந்தாலும் பல்கலைக்கழகத்தில் இந்திய வம்சாவளித் தமிழர் 1% வீதமேயும் இல்லை.

இன்று வரை தொடரும் மலையக கல்வியின் மந்தமான வளர்ச்சிப்போக்கு அடிப்படைக் காரணம் இந்த மக்களின் சமூகநிலை எனக் கொள்ளப்படலாம். இம் மக்களின் சமூகநிலை ஓர் எழுச்சியோடு மாற்றியமைக்கப்படுமாயின் கல்வியிலும் துரித அபிவிருத்தி ஏற்படும் நிலை ஏற்படக் கூடியதாக இருக்கும்.

இந்தோனேஷியத் தலைநகரான ஜகார்த்தாவிலும், தாய்லாந்து தலைநகரான பாங்கொக்கிலும் இந்திய வம்சாவளிகள் தம் சுய முயற்சியிலும் சொந்தச் செலவிலும் நடுத்தரப் பள்ளிக் கூடங்களைக் கட்டிக் கொண்டனர். வட ரொடீஸியாவில் அரசாங்கத்தின் அனுசரணையோ உதவியோ இல்லாமல் பள்ளிக் கூடங்களை நிர்மாணித்துக் கொண்டனர்.

சிறுகதை

# தியாக பூமியிலே.... !



## எம். நாமதேவன்

"நேரமாச்சு பெட்டிய தூக்குங்கப்பா" முத்தையா கங்காணி அவசரப்படுத்தினார்.

"ஐயோ......... என் மவராசன் போறீங்களே........ இனி எப்ப ஒங்க மொகத்த பாக்கப்போறோம்" இரண்டு நாட்களாக நித்திரை விழித்து அழுது துவண்டுபோன மருதாயி பாட்டி கடைசி ஒப்பாரி வைத்தாள்.

"அப்பா எங்கள விட்டுட்டுப் போறீங்களே.........! இது மகள்மார் புலம்பல். "தாத்தா, தாத்தா.....ஐயோ தாத்தா..." பேரக் குழந்தைகள் கத்தினார்கள்.

ஊ....ஊ.....ஊ.....சங்கொலி எழுந்தது. "சேகண்டிய அடிங்கடா.....ஏய் தப்புக்காரன் முன்னால் போ....... நெருப்புச்சட்டி இங்கிட்டு வாப்பா......." கங்காணி ஓடி ஓடி கட்டளையிட்டுக் கொண்டிருந்தார்.

"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க................."

திருவாசகம் ஓதிக்கொண்டு இளவட்டங்கள் இரண்டு முன்னே செல்ல பின்னால் பிரேதப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஆறுபேர் நடந்தார்கள். அதைத்தொடர்ந்து முப்பத்தைந்து பேர்வரை ஊர்வலமாகச் சென்றார்கள். அதிலே சில கிராமத்துச் சிங்களவர்களும் இருந்தார்கள்.

மேட்டு லயத்திலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் சிறிய ஒற்றையடிப்பாதையில் இறங்கியது. அந்த முந்நூறு ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை அரசாங்கம் பொறுப் பேற்றதோடு பிரித்துக்கொடுத்த காணியில் புதிதாக பல வீடுகள் முளைத்துவிட்டன. அதனால் பெரிதாக இருந்த அந்த ரோடு இன்று இருவர் மட்டும் விலகிக்கொள்ளும் சிறிய பாதையாகிவிட்டது.

வளைந்து வளைந்து இறங்கிய பாதையில் ஊர்வலம் மிகவும் அவதானமாகச் சென்று கொண்டிருந்தது. "பத்தரமாக போங்கப்பா......" முத்தையா கங்காணி சத்தம் போட்டுக் கொண்டார்.

லயத்திலிருந்து முந்நூறுயார் தூரத்தில் இருந்த முச்சந்தி வந்ததும் பெட்டியை மூன்றுதரம் சுற்றி தலைப்பாகம் மயானத்தை நோக்கி நிறுத்தி கொள்ளிமுட்டி உடைக்கப்பட்டதும் ஊர்வலம் நகர்ந்தது.

இன்னும் முந்நூறு யார் தூரம் சென்றால்தான் புதிதாக வெட்டப்பட்ட பெரிய பாதையை அடையலாம். அங்கிருந்து இன்னும் அரைமைல் தூரத்தில் தான் மையம் புதைக்க புதிதாக ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

"எல்லாருக்கும் பெரிய மனுஷனா இருந்தவரும் போயிட்டாரு........." கூட்டமாகச் சென்றவர்களில் ஒருவர் இப்படிச் சொல்லிக் கொண்டார். ஆமாம் பெட்டிக்குள் இருந்த பிரேதம்...........?

மருதைவீரன் தாத்தா தனது ஐந்தாவது பரம்பரையையும் கண்டவர். அந்த காட்டு பங்களா தோட்டத்துக்கு அவர்வந்து எண்பத்தைந்து வருடங்களாகி விட்டன. வேட்டையாடுவதற்காக வெள்ளைக்காரன் காட்டுக்குள் கட்டியிருந்த பங்களாதான் காட்டுபங்களா. காலப்போக்கில் அந்தக்காட்டுப்பகுதியும் துப்பரவு செய்யப்பட்டு தேயிலைத் தோட்டமாகியவுடன் அதற்கு காட்டுபங்களா என்ற பெயரையே வைத்து விட்டார்கள்.

காடுவெட்டி கொட்டை போட்டு கன்றுநாட்டு முள்ளுக்குத்தி கவ்வாத்து வெட்டி கானுவெட்டி கட்டடம் போட்டு............அப்பப்பா......... மலைவேலை ஸ்டோருவேலை என்று இன்னும் எத்தனையோ வேலைகள். அவர் கைபடாத வேலையும் இல்லை. அந்தத் தோட்டத்தில் அவர் கால்படாத இடங்களும் இல்லை. அவ்வளவு வேலையும் அவருக்குக் கை வந்த கலை.

வெள்ளைக்காரன் காலத்தில் அவர்தான் அந்தத்தோட்டத்து பயில்வான் என்றும் சொல்வார்கள். மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்து போனவர்.

அந்தத்தோட்டத்து சூப்பிரண்டனாக இருந்தவர்கள் மருதைவீரன் தாத்தாவிடம் தான் வேலை கற்றுக்கொண்டார்கள் என்றால் பிறகு சொல்லத் தேவையில்லை.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் பென்சனாகி விட்டார். அதோடு அவர் வேலை போதுமென்று விட்டார்கள் போலும். அதன் பின் முடிந்தளவு வேலைகளைச் செய்து வீட்டுக்கு ஏதாவது வருமானத்தைத் தேடினார். இருபது வருடங்களுக்கு முன் தோட்டங்களெல்லாம் அரசுடமையாக்கப் பட்ட போது அந்தக் காட்டுபங்களா தோட்டமும் எடுக்கப்பட்டது.

கிராம விஸ்தரிப்புக் கொள்கையில் தோட்டம் துண்டு துண்டாக்கப்பட்டது. பலகோடி ரூபா வருமானத்தைக் கொடுத்த நிலங்கள் பாழாக்கப்பட்டன.

கிராமத்தவர் தோட்டத்துக்குள் குடியேற்றப்பட்டார்கள். மருதைவீரன் தாத்தா வேதனை பட்டார்.

அவர் கைபட்டு பொன்கொழித்த பூமியைப் பார்த்து கண் கலங்கினார். அவர் போல் எத்தனை பேர் அந்த மண்ணில் வியர்வையைக் கொட்டியிருப்பார்கள். எத்தனை பேர் கண்ணீரைச் சிந்தியிருப் பார்கள் எத்தனை பேர் உயிரையே கொடுத்திருப்பார்கள்.

அத்தனை பேரையும் அவர் உள்ளம் உயர்வோடு எண்ணியது. ஒரு தேயிலைக் கன்று பட்டு மடிந்தாலும் தன் வீட்டு கோழிக்குஞ்சு செத்தது போல் நினைத்தவர் அவர். இன்று......... அவர் நெஞ்சு

வெடித்து விடும்போலிருந்தது."ஐயோ......... நாசமாப்போக. அந்தத் தேயில மரத்த துண்டு துண்டா வெட்டி அடுக்கினானுகளே பாவிக ..........

காணி பெற்றுக்கொண்டு கிராமத்தவர்கள் வீடுகட்ட தேயிலைச் செடிகளை வெட்டிக் கொத்துவதைக் கண்ட அவர் மனம் பொறுக்க முடியாமல் ..........."ஏ ஐயா...அந்தக்கன்னுகள எங்கப்புள்ள குட்டிகளப் போல பார்த்தோம் இப்பிடிவெட்டி வேர்வேரா புடுங்கு நீங்களே...ஒங்கள இதுக என்னாய்யா பண்ணிச்சி அதுக்கு எங்கள கொல்லுங் கய்யா" என்று கிராமத்துச் சிங்களவன் ஒருவனிடம் சண்டைக்கே போய் விட்டார் தாத்தா.

அப்படி இந்த மலையகத்தின் மண்ணோடு மலைகளோடு பயிர்களோடு தன் உடல் உயிர் அத்தனையையும் உற வாகவே பிணைத்துக் கொண்டவர் மருதைவீரன் தாத்தா. தோட்டத்திலேயே வயதில் மூத்தவர் அவர். இன்று ....... அவர் உடல் தான் ஊர்வலத்தில் போய்க் கொண்டிருக்கிறது.

"கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்........"

திருவாசகத்தின் வரிகள் நேரஞ் செல்லச் செல்ல சத்தமாகக் கேட்டன. ஊர்வலம் இப்போது பெரிய பாதையில் சென்று கொண்டிருந்தது. "குழிவெட்டி முடிச்சிருப்பாங்களா?" செத்தவீட்டு வெத்திலையை வாய் நிறைய குதப்பிக் கொண்டே சின்னத்தம்பி அண்ணன் கேட்டார். அவருக்கு வயது அறுபது . தோட்டத்தில் பல பேருக்கு புதைகுழி வெட்டிப் பழக்கப்பட்டவர்."இப்ப பொதகுழிக்கு ஒதுக்கியிருக்கிறாங்களே...... அந்த எடத்துல தான் என் கொந்தரப்பு இருந்திச்சி. ஒரு புல்லு விட மாட்டேன். பொத பொதன்னு மண்ணு. இப்ப காடாக்கெடக்கிறதப்பாத்து வயித்தெரிச்சலா இருக்கு......" என்று பக்கத்தில் வந்து கொண்டிருந்த அந்தோனிமுத்துவிடம் சொன்னார். மருதைவீரன் தாத்தா மீது வைத்த அன்புக்காக இப்போது நடக்க முடியாமல் நடந்து வந்தார் அவர்.

அந்தோனிமுத்தண்ணே அந்தத் தோட்டத்தில் முன்பு சலவைத் தொழிலாளி. செத்தவீடு,கலியாண வீடு, சடங்கு வீடுகளுக்கு முன்பு அவர் தான் 'மாத்து" கொடுப்பது வழக்கம். "அந்தோனி முத்தண்ணே ஸ்திரிகை போட்டாத்தான் ஷேர்ட்மடிப்பு ஸ்டைலா இருக்கும்". அன்றைய இளவட்டங்கள் இப்படிச் சொல்வார்கள். இப்போ அந்தோனி முத்தண்ணே மாத்து கொடுக்க வழியில்லை. கேத வீட்டுக்காரங்களே தேடிக்கொள்ள வேணடியது தான். செத்தவீட்டு மற்றைய வேலைகளைச் செய்ய பரியாரி டவுன்ல இருந்து தான் வரணும்.

"ஏம்பா..... மையம் பொதைக்கிற எடம் இப்போ கொலனிக்காரங்களுக்கு போல பிட்டனிக்கு ஒதுக்கியிருக்காமே....... குழிவெட்டவுடுவாங்களா.........?" சின்னத்தம்பியண்ணன் தான் கேட்டார்.

மழைக்கருக்கலாக இருந்ததால் ஊர்வலம் சற்று விரைவாக நடந்தது. "ஆமாணே அப்படித் தான் கதையா இருக்கு" பக்கத்தில் வந்த ராமு சொன்னான். "ஆராச்சிகிட்ட காயிதம் வாங்கியிருந்தா நல்லது........இல்லாட்டி கரைச்சல் தான்". அநுபவப்பட்ட சின்னத்தம்பி அண்ணே சொன்னார்.

"செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப்பணிந்து" திருவாசகத்தின் கடைசி வரியும் முடிய பிரேத ஊர்வலம் புதைகுழியை நெருங்கிக் கொண்டிருந்தது.

"குழிய மூணுதரம் சுத்தி வைங்கடா தம்பிகளா...." முத்தையா கங்காணி சொன்னார். அவ்வாறே மெதுவாக பெட்டி இறக்கப்பட்டு குழியின் அருகில் வைக்கப் பட்டது. கங்காணி சொன்னார் "எங்கப்பா ஆராச்சி வாறேன்னு சொன்னாரே இன்னம் காணலியே இந்த மனுஷன் வராட்டி என்னா செய்யிறது" அவருக்குமனம் நிம்மதியில்லை. அப்போது எங்கிருந்தோ சில காடையர்கள் திமுதிமுவென அங்கே ஓடி வந்தார்கள். கையில் சில பொல்லுகள். அங்கே நின்றவர்கள் பயந்து செய்வதறியாது திகைத்தார்கள்.

"ஏய் உம்பலா மொனவத கரன்னே...? மெத்தன வளலண்ட பே....பலயல்லா மெத்தனின்" அந்தக் காடையர்களில் தடி யனாக இருந்த ஒருவன் அடித் தொண்டையில் கத்தினான்.

"ஐயா செத்தபொணத்த குழியில வச்சிகிட்டு நிக்கிறோம். இந்தநேரம் வந்து கொழப்பம் பண்றீங்களே இது நாயமா" மனதில் பயம் கவ்வினாலும் முத்தையா கங்காணி தான் சற்று தைரியமாகக் கேட்டார். செத்த வீட்டு காரியத்தை முடித்து வைக்க வேண்டிய பொறுப்பு அவர் தலையிலே இருந்ததனால் கேட்க வேண்டிய நிலையும் கூட.

"உம்ப கவுத யக்கோ...? கட்ட வாப்பங்...." அதே தடியன் கங்காணி அருகில் வந்து சட்டையைப் பிடித்து உலுக்கினான். கூடி நின்ற மற்றவர்கள் "ஐயா..ஐயா....அவர ஒன்னும் செஞ்சுப் புடாதீங்கய்யா... விட்டுடுங்க.." என்று கெஞ்சினார்கள். ஊர்வலத்தில் வந்த சிங்களவர்களுள் ஒருவர் சமாதான நோக்கோடு கூறினார் "மல்லி.... கருணாகரலா மே மினிசுண்ட உதவ் கரண்ண..... அபே கிராம சேவக மாத்த யாட்ட கியலயி தியென்னே......" "தமுச தமுசகே வெட பலனவா ஒய்....." காடையர் கூட்டத்தில் நின்ற இன்னொரு முரடன் அந்த கிராமத்துச் சிங்களவரை முறைத்துப் பார்த்தவாறு ஏசினான். அவ் வேளை, ஆராச்சி அவசர அவசரமாக அங்கே ஓடி வந்தார். அவரைக் கண்டதும் தான் முத்தையா கங்காணிக்கு மூச்சு விடவந்தது. மற்றவர்களுக்கும் தைரியம் வந்தது போலிருந்தது.

"மொக்கத மெத்தன கலபல....? என்னா கங்காணி சங்கதி.....? எனக்கு ஒரு வேல இருந்தது... அதுதுங் கொஞ்சங் பிந்தி போனங்.." ஓடியோடி வந்த களைப்பில் மூச்சிரைக்க தனக்குத்தெரிந்த தமிழில் ஆராச்சி பேசினார்.

"ஐயா....,ஒங்ககிட்ட கடதாசி வாங்கித்தானே நாங்க இங்க பொணத்த பொதைக்க கொண்ணந்தோம்..... இவுங்க எல்லாரும் வந்து இங்கன கரைச்சல் பண்றாங்க நீங்க தான் இவுங்களுக்கு சொல்லனும்......" என்று அழாக்குறையாக முத்தையா கங்காணி கூறினார். காரியத்தை முடித்துவிடுவதில் அவர் காட்டிய அக்கறை தெரிந்தது.ஆராச்சிக்கு விளங்கிவிட்டது.

"மே மெத்தன கிசி கலபல ஒனநே.....மமதுமய் அவசர துன்னே" அவர் அங்கு நின்ற காடையர்களிடம் தன்னுடைய மொழியிலேயே பேசினார். "ஆராச்சி மாத்தயா! "மே இடம் வென்கரல்லா தியன்னே அபே கொலனி மினிசுண்ட போல பிட்டனியட்ட" காடையர்களில் இன்னொருவன் கூறினான்.

ஆராச்சிக்கு கோபம் வந்து விட்டது.

"மம துமய் மே பெத்தட்ட கிராம சேவக.... மட்ட ஒக்கொம தன்னவா..... மட்ட தமுசே கியலா தெண்ட ஒன நே..." என்று சத்தமாகக் கூறினார். பிணத்தை வைத்துக் கொண்டு இதென்னடா பெரிய சங்கடமாய் விட்டதே என்று கங்காணி தலையில் அடித்துக் கொண்டார். கூட்டத்தில் நின்றவர்கள் என்ன நடக்கப்போகுதோ என பயந்து போய் நின்றார்கள். "மே.....

கங்காணி, நீங்க இத சுருக்கா பொதச்சி போடுங்க.....நாங் இங்கன நிக்கிறது... இவங்க என்னா செய்யுறது பாப்பம்."என்று கூறவும் முத்தையா கங்காணி அவசரப படுத்தினார்.

"எங்கப்பா......பாியாாி இங்கிட்டு வா...." என்றதும் அவன் நின்றவர்களை விலத்திக்கொண்டு முன்னால் வந்தான். "வாய்க்காிசி போடுங்களேன்.......என்று இழுத்தான். பொியவருக்கு அதையாவது செய்து விடுவோம் என்று யோசித்த கங்காணி "சாி..சாி.... சுருக்கா காாியத்த முடிப்பா.....இங்க நின்னா வேற என்னமாவது கலவரமாயிரும்." என்று மளமளவென காாியங்களை முடிக்கச் செய்தார்.

வேற சாத்திர சம்பிரதாயங்களை மருதை தாத்தாவுக்கு செய்து கொண்டிருக்க நேரம் இல்லை. ஒருவாறு பிரேதப்பெட்டி குழிக்குள் இறக்கப்பட்டது. "மேக்க அப்பே கம......,அப்பே இடம...., பலமு.... அப்பிகொரண்ணங் வெட....., வரன்பங் அபியமு....." அந்த தடியன் ஆத்திரத்தோடு சொல்லித்திரும்பிச்செல்ல மற்றவர்களும் முறைத்த வண்ணம் அவனைப் பின் தொடர்ந்தனர்.

அவசர அவசரமாக குழியை மூடி விட்டு அனைவரும் திரும்ப அதுவரை பொறுத்திருந்த வானம் 'சோ"வெனப் பொழியத் தொடங்கியது.

மறுநாள்,மருதைவீரன் தாத்தாவை புதைத்த இடத்தில் 'மூணாங்குழி' மூடி பால் ஊத்த முத்தையா கங்காணி,தாத்தாவின் மகன்மார் மற்றும் சிலரோடு புதைகுழி நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

"கங்காணியாரே...,நேத்து இந்தப்பயலுக என்னா இப்படி செஞ்சி புட்டானுங்களே..... ஏதாவது கொழப்பம் கிழப்பம்..." என்று இழுத்தார் தாத்தாவின் மூத்த மகன். முடிந்துபோன இனக்கலவரத்தின் போது பக்கத்து தோட்டத்தில் அவர் இருந்த லயத்தை சிங்களக் காடையர்கள் நெருப்புவைத்துக் கொளுத்தி விட்டார்கள். அந்தப்பயம் அவரை பயம் கொள்ளச் செய்தது.

"ஆராச்சி மாத்தையா நம்ம கூட இருந்து சமாளிச்சிட்டாரு....... அதனால பயப்பட வேண்டியதில்லை... எதுக்கும் அரச்சத்தம் கொறச்சட்டம் கேட்டா கொஞ்சம் கவனமாகத்தான் இருக்கனும்...." என்றார் கங்காணியார் பதிலுக்கு.

"தாத்தா புண்ணியஞ்செஞ்சவரு..... .பொணத்த புதைக்கிறவரைக்கும் மழையே இல்லியே. ஆனா ராத்திாி பேஞ்ச மழையில குழி எறங்கிப் போயிருக்கும்." தாத்தாவின் மீது மாியாதை வைத்துள்ள அந்தோனிமுத்து கூறினார். எல்லாரும் கையில் சாமான்களோடு நடந்தார்கள். காக்காய்க்கு காட்டுச்சோறு, இளநீர், பால், பூஜைப் பொருட்கள், தாத்தா விரும்பும் கறுப்பு சுருட்டு இன்னும் சில.

அனைவரும் குழியை நெருங்கினார்கள் அங்கே, குழி தோண்டப்பட்டுக் கிடந்தது. பிரேதப்பெட்டி உடைத்து எறியப் பட்டிருந்தது.

அனைவரும் வாயடைத்துப் போய் ஓடிச்சென்று குழியை எட்டிப்பார்த்தனர். ஆண்டாண்டு காலமாக தனது உதிரத்தை வியர்வையாக்கி உழைத்த அந்தத் தியாக பூமிக்கு உள்ளே........மருதை வீரன் தாத்தா அனாதையாகக்கிடந்தார்.

●

## மலையகம் தழைத்தோங்க.......

எங்கே உண்மை என் மலை நாடே
ஏனோ மௌனம் சொல் நாடெ
உழைப்பு செல்வம் வீணாக லாமோ
உழைப்பில்லா மனிதன் உறிஞ்சி வாழ்வதேனோ

பீறிட்டு உதிர்கின்ற குரல கேளாயோ
பித்தம் பிடித்தவர் பிதற்றல் பாராயோ
பாராளத் தகுந்த உழைப்பாளர் பாரீர்
பாதகம் புாிந்திடும் பொய்மைகளை அகற்றி

காலம் நம்மை குறை கூறு முன்னே
காவியம் எம்மை கடிந்துரைக்கும் முன்னர்
வாய் சவடாலாக சூழ்ச்சியை வாழ்த்துதல் விடுத்து
தாய் வழி வந்த மலையகம் தழைத்தோங்க.

**வி. ஆர். ஜே. மதிவாணன்**
(லெனின்)

## நிகழ்வுகளின் அர்த்தங்கள்

அன்று
அறியாப் பருவத்தே
வேடிக்கைப் பார்த்த
நிகழ்வுகள்
இன்றைய
வேரூன்றிய
வேதனைகள்

நாட்டின் முதுகெலும்பாய்
உழைத்திடும்
உழைப்பாளாின்
சொத்துக்களை
துண்டாட முனைந்த
துக்கமான
நிகழ்வுகள்

பறிபோகின்ற நிலத்தை
பாதுகாக்க
பக்கத்து
தோட்டத்திலிருந்து
பாய்ந்து வந்த
பாட்டாளித் தோழனின்
மார்பில்
பாய்ந்த குண்டுகளி
பலி தீர்த்த
நிகழ்வுகள்

இரத்தம் சிந்தி
உயிர் நீத்து
இரட்சிக்கப்பட்ட
ஏழாயிரம்
ஏக்கர் நிலம்- இன்று
ஏறெடுத்துப் பார்க்க
கொலனிகளாய்
மாறிவிட்ட
நிகழ்வுகள்
நாளை எமக்கு
நாட்டில் இடம் இல்லை
என்பதற்கான அர்த்தங்கள்.-

**இராகலை, டியநிலை ஆசீர்.**

# இன்றைய மாணவர் உலகம்
# சில அவதானிப்புகள்

### செ. யோகராசா, எம். ஏ.

பாடசாலை மாணவர் தொடக்கம் பல்கலைக் கழக மாணவர் வரை - கல்லூரி மாணவர் தொடக்கம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர் வரை, நீண்ட காலமாக மாணவர் சமுதாயத்துடன் தொடர்பு கொண்டுள்ளவரென்ற விதத்தில் இன்றைய மாணவரின் நோக்குகளும் போக்குகளும் பற்றிய முக்கிய அவதானிப்புகள் சிலவற்றை எடுத்துரைப்பதற்கு இத்தகையதொரு வெளியீட்டினைப் பயன்படுத்துவது பொருத்தமானதென்று கருதுகிறோம்.

இன்றைய மாணவர் பலரும் அடிப்படைக் கல்வி குன்றிய நிலையிலேயே உயர் கல்வி கற்பதற்கு வருகிறார்கள். (எடுத்துக் கட்டாக தமிழில் சாதாரண கடிதம் எழுதத் தெரியாத நிலை அல்லது ஒரு கூட்டத்தில் நன்றியுரை கூறத் தெரியாத நிலை) இத்தகையோருள் ஒரு சிலர் தவிர, ஏனையோர் தமது அடிப்படைக் கல்வி அறிவினை பூர்த்தி செய்யாத நிலையிலும் கூட, உயர் கல்வியை அல்லது பயிற்சியை 'நிறைவு' செய்து வெளியேறிவிடுகின்றனர்.

கல்வியோ - பயிற்சியோ பெறும் மாணவர் - குறிப்பாக, கலைத் துறை மாணவர் - மேலதிக வாசிப்பில் நாட்டம் செலுத்துவது குறைவு. வட பகுதிக் கல்வி நிறுவன நூலகரொருவருடன் உரையாடிய போது, தமது நூலகத்துக்கு வந்து நூல் இரவல் பெறும் மாணவர் மிகச் சிலரே என்று தெரிவித்தமை இங்கு நினைவு வருகிறது. கிழக்குப் பகுதிப் பயிற்சிக் கல்லூரி ஒன்றிற்கு அண்மையிலே சென்ற போது, அங்குள்ள புத்தக அலுமாரிகள் பலவும் நீண்ட காலமாக திறக்கப் படாதிருந்ததை உணர முடிந்தது; கூடவே, ' கதவந் திறக்க, நாவுக்கரசர் வருவாரா?' என்று எண்ணினேன்.

மேற்கூறியவாறான ஏழ்மை நிறைந்த அறிவுச் சூழலில் ஆய்வு வேலைகள் செய்வது எங்ஙனம்? பயிற்சி மாணவர், பல்கலைக்கழக மாணவர் - ஆகியோருக்கு சிறு ஆய்வுக் கட்டுரைகள் எழுதித் தரும்படி கேட்பது வழக்கம். வட பகுதிப் பயிற்சிக் கல்லூரிகள் சிலவற்றை நீண்ட காலமாக அவதானித்து வந்த போது, அங்கு பழைய ஆய்வுக் கட்டுரைகள் பலவும் மறு பிறப்புகள் பல எடுப்பதை அறிய நேர்ந்தது. தொலைக் கல்விப் பயிற்சி பெறும் வட பகுதி மாணவர் பலரும், 'மொடியூல்' எழுதும் வாரங்களில் பேயறைந்த முகத்தினராய் எனக்குத் தென்பட்டதுண்டு. சாவகச்சேரி ஒருவரின் மொடியூல் சங்கானை வரை விநியோகமாவதுண்டு.

இத்தகு நிலையிலே, படிக்கும் முறை பற்றியோ விடை எழுதும் முறை பற்றியோ, தேர்வுக்குத் தயார் படுத்தும் முறை பற்றியோ அறியாதிருப்பது வியப்புக்குரியதன்று.

இன்னுமொன்று : மாணவர் மத்தியில் (ஏன் ஆசிரியர் மத்தியிலும் கூட) வெகு வேகமாகப் பரவி, இன்று புற்று நோய் போல் ஆகிவிட்ட விடயம், வழுக்கள் பற்றியதாகும். எழுத்து, சொல், வாக்கிய வழுக்கள் ஒருகால கட்டத்தில் மலையக மாணவர் மத்தியிலேயே ஆதிக்கஞ் செலுத்தின இன்றோ, தமிழ்ப் பகுதி முழுவதும் அரசோச்சுகின்றன. ஆரம்ப வகுப்புத் தொடக்கம், பல்கலைக் கழகம் வரை எல்லை விரிந்துள்ளது !

மாணவர் மத்தியிலே கலை, இலக்கிய நாட்டம் குன்றி வருவது கண்கூடு; அதுவும் விஞ்ஞானம் பயிலும் மாணவர்களுடன் ஒப்பிடும் போது கலை மாணவர் மத்தியிலே ஆர்வம் மிகு குறைவு. கிழக்குப் பகுதி உயர் கல்வி நிறுவனமொன்றிலே அண்மையில் ஒரு மாணவரிடம் மலரொன்றிற்கு கட்டுரை எழுதும்படி கேட்டுவிட்டு, கேட்டவர் தலை நிமிர்ந்த போது, அம் மாணவர் 'காணாமல் போய் விட்டார்'. மாணவர் இத்தகைய முயற்சிகளில் பெற்றோர் கூட பொதுவாக விரும்புவதில்லை. சில வருடங்களுக்கு முன்னர் எனக்கேற்பட்ட ஒரு அனுபவம் : க.பொ.த. (உ.த) படிக்கும் மாணவர் ஒருவரைப் பேச்சுப் போட்டிக்குத் தயார் படுத்தி அனுப்பி, பரிசு கிடைத்த பின்னர், அது வழங்கப்படும் தினம் பற்றி அறிவிக்கச் சென்ற போது, பெற்றோர் எனக்கு 'வாழ்த்துப்பா' பாடி வழியனுப்பி வைத்தனர்.

தமது நிறுவனங்களிலுள்ள மன்றங்கள், சங்கங்கள் என்பனவற்றை மாணவர் தாமே முன் வந்து நடத்த வேண்டுமென்ற ஆர்வமும் மங்கி வருகிறது. நிர்வாகக் குழுவினர், பொறுப்பாசிரியர்களே நடத்த வேண்டுமென்று எதிர்பார்ப்பதையும், ஏனைய மாணவர் எவ்வித ஒத்துழைப்பு மின்றித் திரிவதையும் அண்மையிலே கூட கிழக்குப் பகுதி நிறுவனமொன்றிலே அவதானிக்க முடிந்தது.

சமூக உணர்வு, பொறுப்புணர்வு என்பனவும் மாணவருலகிலே குன்றி வருகிறது. சிறந்த எடுத்துக்காட்டு, மலையக 'மாணவ ஆசிரியர்கள்'. இவர்கள் பலரும் ஆசிரியரானவுடன் தமது குடும்ப ஏழ்மை நிலையை மறந்து விடுகின்றனர். உல்லாசப் பறவைகளாகின்றனர். உலகஞ் சுற்றும் வாலிபராகின்றனர். ஆங்கில வகுப்புக்கு ஓடுகின்றனர். அல்லது ஜீ.ஏ.கியு. வகுப்பை நாடுகின்றனர். ஒரு சிலர், சங்க கால அகத்திணை மரபு வாழ்க்கையினை - அறிந்தோ - அறியாமலோ - நடைமுறைப் படுத்தவும் முற்படுகின்றனர். பெற்றோர் தொழில் பற்றிக் கூற தயங்குகின்றனர்; வெட்கப்படுகின்றனர். வீட்டின் ஏழ்மை, ஏனைய சகோதரர் நிலை பற்றியெல்லாம் சற்றேனும் சிந்திக்காது கருமமே.

உணர்வுக்கு இடமேது? அண்மையிலே, ஆசிரியர் கருத்தரங்கொன்று நடந்த போது வருகை தந்த ஆசிரியர் சிலரின் கோலங் கண்டு, கருத்தரங்கு நடத்திய கல்வி அதிகாரியொருவர் 'கல்யாண வீடுகளுக்குச் செல்வது போல் ஆசிரியர் பாடசாலை களுக்குச் செல்லக் கூடாது' என்று உரையாற்றும் போது குறிப்பிட்டதும் இங்கு கவனத்திற்குரியதன்றோ!

இவ்வாறே குரு பக்தி என்பதும் மாணவர் குழாத்திடமிருந்து விடைபெற்று விட்டதென்றே கூற வேண்டும். எவ்வித தயக்கமுமின்றி ஆசிரியர் பலரும் இதனை ஏற்பர். ஆதலின், அனுபவச் சான்றுகள் வேண்டியதில்லை.

க.பொ.த. சாதாரண வகுப்பில் சித்தி பெற்ற மாணவரொருவர் உயர் வகுப்புக் கற்கை நெறியினை எவ்வாறு தெரிந்து கொள்கின்றார்? பெறுபேறு ஒருபுறமிருக்க, தமது உண்மைத் தகுதி அறிந்தோர் அரிது; பெற்றோர் பேராசை அயல் வீட்டார் போக்கு, ஒரு சாலைத் தோழரின் முடிவு என்பவையே பெருமளவு அங்கு ஆதிக்கம் செலுத்துவதை கடந்த சில ஆண்டுகளாக, குறிப்பாக, வட பகுதிகளில் அவதானிக்க முடிந்துள்ளது.. இத்தகைய பின்னணியில் க.பொ.த. உயர்தர வகுப்பிலே பயிலச் செல்வோர், அவ்வகுப்புக் கல்வி நெறியின் யதார்த்தப் போக்கினை உணர்வதற்கிடையில் காலம் ஓடி விடுகின்றது. விளைவு, மறுபடியும் தேர்வுக்குத் தோற்றுதல்!

தமிழ் மொழியினை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர் தொகையும் குறிப்பாக வட பகுதிகளில் குறைந்து வருகிறது. க.பொ.த. சாதாரண வகுப்பிலேயே தமிழ்ப் பாடம் வேண்டா வெறுப்பாகவே படிக்கப் படுகிறது. உயர்தர வகுப்பிலும் அவ்வாறே. எனில் பல்கலைக் கழக நிலை பற்றிக் கூறவும் வேண்டுமா? மாணவர் மட்டுமன்றி, பெற்றோரும்கூட, தமது பிள்ளைகள் தமிழ் மொழியினை ஒரு பாடமாகப் பயில்வதை வரவேற்பதில்லையே! காலப்போக்கில் தமிழ் இலக்கிய, கலை முயற்சிகள் வீழ்ச்சியடைவதற்கு இது வழிவகுக்குமல்லவா? மொழியறிவு குன்றும் போது பிற பாடங்களைக் கற்பதும் இலகுவன்று. (இங்கு விஞ்ஞான மாணவர் கவனத்திற் கொள்ளப்படவில்லை)

எயிட்ஸ் நோய் போன்று, மாணவர் சமுதாயத்திலே பாதிப்பினை ஏற்படுத்தி வருவது தனியார் கல்வி நிறுவனமாகும். பாலர் வகுப்பு (Nursary) தொடக்கம் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு வரை இத்தகு 'கிரக' ஆதிக்கத்திற்குட்பட்ட நிலை. ஐந்தாம் ஆண்டு (புலமைப் பரீட்சை வகுப்பு), க.பொ.த (உ.த) வகுப்பு என்பன இதன் விசேட இலக்குகளாகின்றன. தனியார் கல்வி நிறுவனம் மாணவ சமுதாயத்திலே ஏற்படுத்தும் விரிவான ஆய்வை வேண்டி நிற்பது; அதற்கேற்ற இடம் இதுவன்று. ஒரு விடயத்தை மட்டும் அழுத்திக் கூறலாம். மாணவரது சிந்தனை வளர்ச்சியை மழுங்கடிக்கிறது என்பதே அதுவாகும். இன்று, உயர் கல்வி கற்கும் மாணவர், குறிப்புகளை எதிர்பார்ப்பதும், எழுதிய விடைகளையே தேர்வுக்காக மனனம் செய்வதும் 'முற்பிறப்பு' வினையேயாகும்.

முடிவாக இரு விடயங்கள் குறிப்பிட வேண்டியனவாகின்றன. இன்றைய மாணவருலகம் பற்றி எடுத்துரைக்க இன்னும் சில விடயங்களுள்ளன. ஒன்று விரிவஞ்சி இடம் பெற்றவில்லை என்பது. மற்றொன்று, இக்கட்டுரை மாணவருலகினை முற்றிலும் எதிர்மறை நோக்கில் அணுகுகின்றதே எனில் அவ்வாறன்று. உண்மை இதுவே. அதே வேளையில், இத்தகைய மாணவருலகில் நம்பிக்கை நட்சத்திரங்களும் ஆங்காங்கே ஜொலிக்கின்றன என்பதும் பிரிதொரு உண்மேயேயாம்.

●

## எழுத்துப் பயிற்சி அரங்கு

கல்வி,கலை,இலக்கியத்துறைகளில் மலையகம் மிகவும் பின் தங்கி இருப்பது போல,எழுத்துத் துறையிலும் இதே நிலை தான். இதனை மாற்றி அமைக்க 'குன்றின் குரல் 'சஞ்சிகை ஒரு புதிய திட்டத்தை செயற்படுத்த எண்ணியுள்ளது. இதனை மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடாத்த திட்டமிட்டுள்ளது. எழுத்துத் துறையில் ஆர்வம் உள்ளவர்களும், எழுத்துத் துறையில் அக்கறை காட்டும் உயர்வகுப்பு மாணவ, மாணவிகளும் எழுத்துப் பயிற்சி அரங்கில் பங்கு பெறலாம்.இந்த பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புகிறவர்கள **"எழுத்துப்பயிற்சி அரங்கு ஆசிரியர், குன்றின் குரல், 30. புஸ்பதான மாவத்தை, கண்டி."** என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

# வாசகர் குரல்

## மனதை தொட்டது

'குன்றின் குரல்' இரண்டு இதழ்களையும் பார்தேன். காத்த ?ரமான விடயங்கள் இடம் பெற்று உள்ளன.மறைந்த மறந்து போன தியாகி சிவனுலெட்சுமணனை நினைவு கூர்ந்து இருப்பது பாராட்ட தகுந்தது.'அருமை அம்மா' கவிதை மனதை தொட்டது.இது ஒரு பொழுது போக்கு விடயங்களை கொண்ட சஞ்சிகை அல்ல. படித்து பாதுகாக்க வேண்டியது.

செ.மகேந்திரன்
32.புதிய பஸ் நிலையம்
வவுனியா.

## அங்கும், இங்கும்


'குன்றின் குரல்' இரண்டு இதழ் களையும் படித்தேன்.இங்கு உள்ள தோட்ட நிலைமைகளையே பிரதி பலிக்கப்படு கின்றன.உங்கள் தோட்ட நிலைமையும்......... அதை எல்லாம் நேரில் பார்க்க அங்கு வர எண்ணியுள்ளேன்.

மு.வரதராசு
கோலாம்பூர்
மலேசியா

## புதியவர்களுக்கு.....

'குன்றின் குரல்'புதியவர்களின் ஆக்கங்களுக்கும் களம் அமைத்து தர வேண்டும். ஒவ்வொரு இதழிலும் பெண் களின் படைப்புகள் இடம் பெற வேண்டும்.

இரா.புனிதா
ஸ்டேசன் வீதி
அப்புத்தளை.



# அனைத்து மனிதர்களும் அறிவு ஜீவிகளே

**பெ. முத்துலிங்கம்**

அனைத்து மனிதர்களும் அறிவு ஜீவிகளே எனக் கூறும் போது பொதுவாக பாரம்பரிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவு ஜீவிகள் மத்தியிலும் வாசகர் மத்தியிலும் குழப்ப நிலை ஏற்படலாம். அறிவு ஜீவிகள் (புத்தி ஜீவிகள்) எனக் கூறும் போது சமூகத்தில் படித்த ஒரு பிரிவினரே அறிவு ஜீவிகள் என பாரம் பரியமாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. ஏற்றுக் கொள்ளப்பட்ட இந் நிலைப்பாடு பொய்மையானது என இத்தாலிய புரட்சி யாளரும், சிந்தனை யாளருமான அன்தோனியோ க்ராம்சி தமது ஆய்வில் வாதிட்டுள்ளார். திரு. அன்தோனியோ க்ராம்சி முப்பதுகளிலேயே இவ்வாதம் பொய்மையானது என தமது சிறைக் குறிப் புகளில் வாதிட்ட போதிலும் எழுபது களிலேயே சர்வதேச ரீதியில் இக் கருத்து பிரபல்யமடைந்தது. திரு. அந்தோனியோ க்ராம்சியின் படைப்புகள் இத்தாலிய மொழியில் இருந்தமையே இதற்கான காரணமாகும்.

சமகால சமூக, அரசியல், கலாச்சார கற்கையில் பெரும் ஆளுமை செலுத்துகின்ற அன்தோனி க்ராம்சி சமூகத்தில் தனியான அறிவு ஜீவிகள் இல்லையெனக் கூறுவதுடன் மாறாக அனைத்து மனிதர்களும் அறிவு ஜீவிகள் எனக் கூறுகின்றார். "அனைத்து மனிதர்களும் அறிவு ஜீவிகள். ஆனால் அனைத்து மனிதர்களும் சமூகத்தில் அறிவு ஜீவி செயற்பாட்டினை கொண்டிருக் கவில்லை என ஒருவருக்குக் கூறமுடியும்" (சிறைக்குறிப்பு - ஆங்கிலம். ப. 09) க்ராம்சி தமது கூற்றினை நிலைப் படுத்துவதற்காக கீழ்க் காணும் உதாரணத்தைத் தொட்டுக் காட்டுகிறார். அதாவது ஒவ்வொருவரும் சில வேளைகளில் முட்டைகளை பொரித்துக் கொள்வதுண்டு. அல்லது கிழிந்த சட்டையைக் தைத்துக் கொள்வதுண்டு. ஆனால் நாம் ஒவ்வொருவரையும் சமையற்காரர் என்றோ அல்லது தையற்காரர் என்றோ கூறுவதில்லையென்கிறார். மேலும் அறிவு ஜீவிகள், அல்லாதோர் என ஒருவர் அடையாளம் காணுகையில் உடனடியாக குறிப்பிட்ட நபரது தொழிலை வைத்தே அடையாளம் காண முனைகிறார் என்கின்றார். இதனடிப்படையில் ஓர் குறிப்பிட்ட நபர் தமது செயற்பாடு அறிவு ரீதியானதாக இருந்தால் என்ன அல்லது உடலுழைப்பு ரீதியானதாக இருந்தால் என்ன அந்நபர் குறிப்பிட்ட செயற்பாடுகளை செய்வதற்கு முன்னர் அக்குறிப்பிட்ட விடயத்தினைப் பற்றிய கண்ணோட்டத்தை தமது நோக்கத்துக்கு ஏற்றவாறு கொண் டுள்ளார் எனக் கூறுகின்றார். எனவே இதன்படி ஒருவர் அறிவு ஜீவிகளைப்பற்றி பேசலாமே ஒழிய அறிவுஜீவிகளற்றோர் என்ற ஒரு பிரிவினரைப் பற்றி பேசமுடியாது. ஏனெனில் அவ்வாறான பிரிவினர் சமூகத்தில் இல்லை எனக் கூறுகிறார். இங்கு எதனை க்ராம்சி வலி யுறுத்த விரும்புகிறார் எனில் சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தாம் வாழும் சமூகத்தினைப் பற்றியும், உலகினைப் பற்றியும் ஓர் கண்ணோட்டத்தை தன்னகத்தே கொண்டுள்ளார் என்பதேயாகும்.

மேற்குறிப்பிட்ட வாதத்தின் அடிப்படையில் நோக்குவோமாயின், நாம் வாழும் சூழலில் தனியே உடலுழைப்பின் மூலம் ஜீவிக்கின்ற மனிதனை நெருங்கி தாம் வாழும் சமூகத்தைப் பற்றி அல்லது உலகத்தினைப் பற்றி என்ன நினைக்கின் றீர்கள் என வினவுவோமாயின் அக் குறிப்பிட்ட மனிதன் அறிவுக்கேற்றவாறு அதனைப்பற்றி விளக்கமளிக்கலாம். அவ்விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவோ அல்லது ஏற்க முடியாத தாகவோ இருக்கலாம். ஆனால் அக் குறிப்பிட்ட மனிதன் தாம் வாழும் உலகினைப் பற்றிய சிந்தனையைக் கொண்டுள்ளான் என்பதை அறிய முடியும். உதாரணத்திற்கு இன்றைய நிலையில் ஒரு மலையக தோட்டத் தொழிலாளியை நெருங்கி இன்றைய மலையகம் கல்வித் துறையில் முன்னேற வேண்டுமாயின் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என வினவினால் சில கருத்துக்களைத் தெரிவிக்கலாம். இதே வேளை கற்ற மலையக நபர் ஒருவரிடம் வினவினால் அவரும் கருத்துக்களைக் கூறலாம். இவ்விருவரினதும் கருத்துக்களில் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் இவ்விருவரும் குறிப்பிட்ட விடயத்தைப் பற்றி சிந்திக்கும் தன்மையை கொண்டுள்ளனர் என்பது புலனாகலாம். எனவே க்ராம்சியின் கூற்றுப்படி சமூகத்தில் அறிவுஜீவிகளற்றோர் என்ற ஒரு பிரிவினர் இல்லையென்பது ஊர்ஜிதமாகின்றது.

அனைவரும் அறிவு ஜீவிகள் எனக் கூறும் க்ராம்சி சமூகத்தில் அறிவு ஜீவி செயற்பாட்டினைக் கொண்ட பிரிவினர் யார் என்பதையும் அடையாளம் காட்டி யுள்ளார். வரலாற்று ரீதியில் பரிணமிக்கும் சமூகங்கள் தமது பொருளாதார உற்பத்தி செயற்பாட்டுடன் அறிவு ஜீவிகளையும் தோற்றுவிக்கின்றது என்கிறார். இவ்வாறு தோற்றுவிக்கப்படும் அறிவு ஜீவிகளில் இருவகை அறிவு ஜீவிகளை க்ராம்சி அடையாளம் காண்கிறார். பாரம்பரிய அறிவு ஜீவிகள் என ஒரு பிரிவினரையும், அங்கக (ஓர்கனிக்) அறிவு ஜீவிகள் என ஒரு பிரிவினரையும் அடையாளம் காட்டுகிறார்.

நிலப்பிரபுத்துவ சமூக கட்டமைப்புடன் இவ்வறிவு ஜீவிகளின் தோற்றம் பெரும்பாலும் ஏற்படுவதுடன் முதலா ளித்துவ சமுதாயக் கட்டமைப்பில் இரு வர்க்கத்தினரே இவ் அறிவு ஜீவிகளை கொண்டுள்ளனர். குறிப்பாக அங்கக அறிவு ஜீவிகளை முதலாளித்துவ வர்க் கத்தினரும், தொழிலாளர் வர்க்கத்தினருமே கொண்டுள்ளனர் எனக் கூறுகின்றார். முதலா ளித்துவம் தம்முடன் தொழில் நுட்பவிய லாளர்கள், அரசியல் பொருளாதார நிபுணர்கள், புதிய கலாச்சார மற்றும் சட்ட அமைப்பு முறைகளை உருவாக்கு வோரையும் தோற்றுவிக்கின்றது. இப்பிரிவினரையே க்ராம்சி பாரம்பரிய அறிவு ஜீவிகள் எனக் கூறுகின்றார். இப் பாரம்பரிய அறிவு ஜீவிகள் முதலாளித்துவ

செயற்பாடுகள் சுமுகமாக நடைபெற்று செல்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றும் இப்பிரிவினர் இன்னுமொரு சமூக கட்டமைப்பு அதாவது தொழிலாளர் வர்க்க கட்டமைப்பு தோன்றுமாயின் அக்கட்டமைப்பின் கீழும் முதலாளித்துவ கட்டமைப்பின் கீழ் மேற்கொண்ட செயற்பாட்டினை அதாவது குறிப்பிட்ட கட்டமைப்பின் ஆணைகளுக்கேற்ப மேற்கொள்வர் எனக் கூறுகின்றார். க்ராம்சி இங்கு எதனைக் கூறுகின்றார் எனில் குறிப்பிட்ட ஒரு கட்டமைப்பின் கீழ் தமது தொழில் தேர்ச்சி அல்லது நிபுணத்துறையில் நாடும் இப்பாரம்பரிய அறிவு ஜீவிகள் புதிய கட்டமைப்பின் கீழும் அக்கட்டமைப்பினை நடாத்திச் செல்வதற்காக செயற்படுவார் என்பதையேயாகும்.

ஆனால் அங்கக அறிவு ஜீவிகளின் செயற்பாடுகள் முற்றிலும் மாறுபட்டது எனக் கூறுகிறார். அங்கக அறிவு ஜீவிகள் குறிப்பிட்ட கட்டமைப்பின் நிலைத்தலுக்காக அல்லது புதிய கட்டமைப்பினை (தொழிலாளர் வர்க்க) உருவாக்குவதற்கான செயற்பாட்டிற்காக் சித்தாந்த ரீதியிற் செயற்படும் அறிவு ஜீவிகள் எனக் கூறுகின்றார். இவ் அங்கக அறிவு ஜீவிகளை தொழிலாளர் வர்க்கமும், முதலாளித்துவ வர்க்கமும் மாத்திரமே கொண்டிருக்க முடியும் என்கிறார். இவ் அங்கக அறிவு ஜீவிகள் எவ்வர்க்கத்திலிருந்து அதாவது விவசாயிகள், தொழிலாளர்கள், மத்திய தர வர்க்கத்தினர் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தினர் மத்தியிலிருந்து தோன்றிய போதிலும் இப்பிரிவினர் எவ் வர்க்கத் தினரின் நலனை, சித்தாந்தங்களை பிரதிபலிக்கின்றனர் அல்லது எவ்வர்க்க த்தினரின் நிலைத்தலுக்காக முன் நிற்கின்றனர் என்பதிலிருந்து இவ் அங்கத்துவ அறிவு ஜீவிகள் எவ் வர்க்கத்தினரை சார்ந்தவர்கள் என்பதை அடையாளம் காண முடியும் என க்ராம்சி கூறுகின்றார். (organic interlectuals - என்ற பதத்தினையே இங்கு அங்க அறிவு ஜீவிகள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.)

அன்தோனியோ க்ராம்சியின் இவ் வரைவிலக்கணத்தை மேலும் விளங்கிக் கொள்வதற்காக அண்மைய உலக நிகழ்வுகளை சற்று நோக்குவது வசதியாக அமையலாம். ஏழு தசாப்பதங்களாக தொழிலாளர் வர்க்க ஆட்சி நிலவிய சோவியத் யூனியன் முதன்மையாக கிழக்கைரோப்பிய நாடுகளது கட்டமைப்பு சிதைவுற்று அதனிடத்தே முதலாளித்துவ கட்டமைப்பை (முழுமையாக தற்போது இல்லாவிட்டாலும்) நோக்கிய வளர்ச்சி தோன்றியுள்ளது. இக்கட்டமைப்பு சிதைவுறுவதற்கு பல்வேறு காரணிகள் இருந்த போதிலும், வெளியிலிருந்து தோன்றக் கூடிய பலாத்கார சக்திகள் இம்மாற்றத்துக்கு காரணமாக அமையவில்லை. உள்ளக ரீதியாக எழுந்த சக்திகளே இதற்கு காரணமாக அமைந்தன. நிலவிய கட்டமைப்பிற்கு எதிராகத் தோன்றிய அங்கக அறிவு ஜீவிகளே இச் செயற்பாட்டில் முக்கிய பங்கு வகித்துள் ளனர். அதாவது நிலவும் கட்டமைப்பிற் கெதிரான பிரச்சாரத்தை மக்கள் மத்தியில் கொண்டு சென்றதுடன் அதனை தூக்கியெறிந்து அதனிடத்தே தாம் விரும்பும் முதலாளித்துவக் கட்டமைப்பினை உருவாக்குவதில் குறிப்பிட்ட அறிவு ஜீவிகள் வெற்றி கண்டுள்ளனர். இச் செயற்பாட்டில் சோசலிச அரசின் நிலைத்தலுக்காக முன்னின்ற அங்கக அறிவு ஜீவிகள் தோல்வி கண்டுள்ளமையைக் காணலாம். இவ்வாறான செயற்பாட்டினைக் கொண்டுள்ள அறிவு ஜீவிகளையே க்ராம்சி அங்கக புத்தி ஜீவிகள் என்கிறார்.

எனினும் தோல்வி கண்ட சோசலிச அங்கக அறிவு ஜீவிகள் தாம் இழந்த கட்டமைப்பை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான போராட்டத்தில் மீண்டும் ஈடுபட்டுள்ளமையைக் காண முடிகின்றது. தற்போது இந் நாடுகளின் புதிய அரசுகளுக்கெதிராகத் தோன்றிய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நல்ல சான்றாகும். ஆயினும் பாரம்பரிய அறிவு ஜீவிகள் என க்ராம்சி வரைவிலக்கணம் செய்த அறிவு ஜீவிகளின் செயற்பாடுகள் எவ்வாறானதாகக் காணப்படுகின்றது. இச் சோசலிச கட்டமைப்பில் பாரம்பரிய அறிவு ஜீவிகளாக செயற்பட்ட அறிவு ஜீவிகள் தற்போதைய புதிய கட்டமைப்பில் புதிய அரசின் கோட்பாடிற்கிணங்க தத்தமது தேர்ச்சித் துறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

எவ்வாறாயினும் க்ராம்சி தனது வரைவிலக்கணத்தை முன் வைக்கையில் நிலவும் முதலாளித்துவ அமைப்பு முறையினைத் தூக்கியெறியவுள்ள புரட்சிகர கட்சிகளைச் சார்ந்த அறிவு ஜீவிகளையே தொழிலாளர் வர்க்க அங்கக அறிவு ஜீவிகளாகக் கருதினார். எனினும் சோசலிச அமைப்புக்குள்ளும் முதலாளித்துவ அங்கக அறிவு ஜீவிகள் தோன்றக் கூடிய அபாயத்தை சோவியத் யூனியன் முதன்மையாக கிழக்கைரோப்பிய நாடுகளின் வீழ்ச்சி யதார்த்த பூர்வமாகிவிட்டது. (மறைந்த சீனத் தலைவர் மாவோ சேதுங் சோசலிசத்திற்கான போராட்டம் ஆட்சி பீடத்தை கைப் பற்றிய பின்னரும் தொடரும் எனக் கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது)

அறிவு ஜீவிகளைப் பற்றி இவ்வாறான வரைவிலக்கணத்தை முன் வைத்துள்ள க்ராம்சி நகர்ப்புற அறிவு ஜீவிகளினதும் கிராமப்புற அறிவு ஜீவிகளினதும் வித்தியாசமான நிலைகளைப் பற்றி கீழ்வருமாறு கூறுகின்றார். "நகர்ப்புற அறிவு ஜீவிகள் தொழிற் துறையுடன் வளர்ச்சியுற்றதுடன் அதன் நன்மையுடன் பிணைக்கப் பட்டுள்ளனர். அவர்களது நடவடிக்கையை இராணுவத்தின் கனிஷ்ட உத்தியோகத்தர்களுடன் ஒப்பிடலாம். ஒன்றினை நிர்மாணிப்பதற்கான திட்டத்தை சுயமாக ஆரம்பிக்க அவர்களுக்கு (கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கு) சுயாதீனம் கிடையாது. இவர்களது செயற்பாடு யாதெனில் அடிப்படை கட்ட வேலையைக் கட்டுப்படுத்தும் தொழிற்துறை ஜெனரல் (சிரேஷ்ட) உத்தியோகத்தர்களால் தீர்மானிக்கப்பட்ட திட்டங்களை உடனடியாக நடைமுறைப் படுத்துவதும், உற்பத்தியாளர்களுக்கும், உற்பத்தியில் ஈடுபடும் மக்களுக்குமிடையில் உறவை கட்டியெழுப்புவதாகும். மொத்தத்தில் சராசரி நகர்ப்புற அறிவு ஜீவிகள் மிகவும் வரையறைக்குட்படுத்தப் பட்டுள்ளனர், அதே வேளை உயர் நகர்ப்புற அறிவு ஜீவிகள் பெரும்பாலும் தொழிற்துறை ஜெனரல் (சிரேஷ்ட) உத்தியோகத்தர்களுடன் இனங் காணப்படுகின்றனர்.

"கிராமப்புற அறிவு ஜீவிகள் பெரும்பாலும் "பாரம்பரிய" அறிவு ஜீவிகளாவர். அதாவது இவர்கள் கிராம மக்களுக்கும் நகர (குறிப்பாக சிறு நகரம்) மத்தியதர வர்க்கத்திற்குமான இணைப்பாளர்கள் இவ்வாறான அறிவு ஜீவிகள் விவசாய மக்களை உள்ளூர் மற்றும் அரச நிர்வாகத்துடன் தொடர்பு படுத்துகின்றனர். (வக்கீல்கள், நொத்தாரிசுகள் முதலியோர்) இந் நடவடிக்கை காரணமாக முக்கியமான அரசியல் சமூக நடவடிக்கையை கொண்டுள்ளனர். அரசியலிலிருந்து தொழில் நிபுணத்துவ இடைத் தரகு தன்மையை பிரிப்பது கடினம். மேலும் கிராமப் புறத்தின் அறிவு ஜீவிகள் (மதகுரு, வக்கீல், நொத்தாரிசு, ஆசிரியர், வைத்தியர் முதலிய) சராசரி விவசாயியை விட மொத்தத்தில் ஆகக் கூடிய அல்லது ஆகக் குறைந்தத, வித்தியாசமான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ளனர்."

(சிறைக்குறிப்பு ப.14)

கிராமப்புற அறிவு ஜீவிகளினதும், நகர்புற அறிவு ஜீவிகளினதும் நடவடிக்கைகளை மேற்கூறப்பட்டவாறு விவரிக்கும் க்ராம்சி தத்துவ ஞானிகள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் போன்ற சிருஷ்டிகர்த்தாக்களை நகர்புற அறிவு ஜீவி பிரிவிக்குள்ளேயே உள்ளடக்குகிறார்.

அறிவு ஜீவிகள் பற்றிய புதிய விளக்கத்தை முன் வைத்துள்ள க்ராம்சி அங்கக அறிவு ஜீவிகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதுடன் புதிய அறிவு ஜீவியின் செயற்பாடு எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்பதையும் கூறியுள்ளார். "புதிய அறிவு ஜீவி சொல்லலங்காரம் கொண்ட பேச்சாளனாக தொடர்ந்து இருக்க முடியாது. இது வெளிப்படையாக உணர்ச்சிகளை உடனடியாகத் தூண்டுவதாக அமையும். மாறாக ஓர் புதிய அறிவு ஜீவி நடைமுறை வாழ்க்கையில் பங்கு கொள்வோனாக, நிர்மாணியாக, அமைப்பாளனாக, "நிரந்தர தூண்டு கோளானாக"" இருக்க வேண்டு மென்கிறார்.

க்ராம்சி மேற்கூறப்பட்ட வரைவிலக்கணத்தின் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக முன்னிற்கும் அறிவு ஜீவிகளே சமூகத்தில் முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றனர் என்பதை வலியுறுத்துவதுடன், நவீன காலகட்டத்தில் அவர்களது பங்கு எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்பதையும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

# பண்பாட்டுப் பார்வைகள்

## 'சாரல் நாடன்'

இலங்கை எழுத்தாளர்கள் உலக வாசக மட்டத்தை எட்ட வேண்டும் என்ற ஒரு கருத்தை மாண்புமிகு ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் மகியங்கனையில் நடைபெற்ற சாகித்திய விழாவில் வெளியிட்டுள்ளார்.

இந்தக் கருத்தை அடியொட்டி அபிப்பிராயம் தெரிவித்துள்ளவர்களில் முன்னாள் சாகித்திய மண்டலத் தலைவர்கள் பேராசிரியர் மினிவன். பி. திலகரட்ண, சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகப் பேராசிரியர் சுனில் ஆரியரட்ண, களனி பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சோமரட்ண பாலசூரிய, நூலாசிரியர் சோமவீர சேனநாயக்க போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

இவர்கள் அனைவருமே இந்த முயற்சிக்கு ஆங்கில மொழியின் அவசியத்தையும், ஆங்கில மொழிபெயர்ப்பின் மூலமே இலங்கை எழுத்தாளர்கள் சர்வதேச மட்டத்தை எட்ட முடியும் என்பதையும் விளக்கியுள்ளனர்.

வங்க மொழியில் எழுதிய தனது கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டதன் மூலமே நோபல் பரிசிற்குரியவராகத் தெரிவாவதற்கான வாய்ப்பை ரவீந்திரநாத் தாகூர் பெற்றுக் கொண்டார்.

### வரப்பிரசாதம்

ஆங்கிலமொழி அகிலமொழியாக விளங்குகிறது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் அகில உலக இலக்கியத்தையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். ஆங்கில அறிவு மிகுந்தவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

இலங்கை எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், வானொலிக்கலைஞர்கள், தொலைக் காட்சி நடிகர்கள், பத்திரிகாசிரியர்கள் என்ற பலதரப்பட்ட ஆக்க கலைஞர்கள் தமது படைப்புக்களை மிக முனைப்பாக சிங்களத்திலும், சிறிதாகத் தமிழிலும், அதனிலும் சிறிதாக ஆங்கிலத்திலும் செய்து வருகின்றனர். இவர்களில் கே. எஸ். சிவகுமாரன் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒருவராவார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆற்றல் மிகுந்த இவரது மிகச் சமீபத்தைய படைப்பு "ஸ்ரீலங்காவின் பண்பாடு மீதான பார்வைகள்" என்ற நூலாகும். (ASPECTS OF CULTURE IN SRI LANKA ) இந்த நூல் சிவகுமாரன் அவர்கள் ஜப்பானில் நாகசாக்கிப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் வீரோய் ரொபின்சன் என்ற அமெரிக்கருடன் நடாத்திய பேட்டியின் விளைவாகும்.

### பேட்டி

அறுபத்தெட்டு வயதினரான வீரோய் ரொபின்சன் இது வரையிலும் இலங்கையினரைப் பற்றி முப்பதுக்கும் மேற்பட்ட பேட்டியினைச் செய்துள்ளார். இந்தப் பேட்டிகளில் வேறு எதுவும் சாதிக்காத ஒன்றினைச் சிவகுமாரனின் பேட்டி சாதித்துள்ளது. அதுவே இந்நூலாகப் பரிணமித்துள்ளது.

இந்நூல் 119 பக்கங்களில் இலங்கையில் இடம் பெற்று வரும் சகல இலக்கியப் பரிணாம வளர்ச்சிகளை மிகத்தெளிவாகத் தொட்டுக்காட்டுகிறது. நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிங்கள தமிழ் சிருஷ்டிக் கர்த்தாக்கள் இந்நூலில் பேசப்படுகின்றார்கள். அதன் மூலம் அகில உலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்கள்.

சிவகுமாரன் இலங்கை வாழ் தமிழ் சிங்களக் கலைஞர்களின் பாராட்டுக் குரியவராகின்றார்.

### மொழிச்சிறை

இலக்கியம் என்பது மொழி வரம்புக்குள்ளாகி ஓர் எல்லைக்குள் சிறை வைக்கப்படுவதிலிருந்து மீட்டெடுக்கப்பட்டு மனிதவர்க்கம் முழுவதற்கும் சொந்தமாக்கப்படும் முயற்சிகள் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து வெற்றிகரமாகவே செயற்படுத்தப்படுகின்றது.

இதற்கு வேகமூட்டுவதைப் போல இலங்கையின் சகல மட்டங்களிலும் வேர் கொண்டு எழுந்துள்ள இலக்கிய, கலை முயற்சிகளைப் பற்றிய உண்மையான தகவல்களை நளினமான ஆங்கிலத்தில் சிவகுமாரன் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நூலைப் படிக்கும் ஆங்கிலம் தெரிந்த தமிழரும் சிங்களவரும் தம்மைக் குரோதத்தோடு ஒரு போதும் நோக்கார்.

தமிழில் படைப்புக்களை வெளியாக்கிவரும் சகலரும் மலையகத்தின் முன்னணிப் படைப்பாளர்கள் உட்பட இந்நூலில் பேசப்படுகின்றார்கள். நூறு ரூபா விலைக்கு விற்கப்படும் இந்நூல் வாங்கி வாசிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

(நூல் தேவையானோர் பூபாலசிங்கம் புத்தகசாலை, 340 செட்டியார் தெரு, கொழும்பு - 11. என்ற முகவரிக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்)

# சமகால மலையக கல்வி நிலைப்பாடும் அதன் வரலாற்றுப் பின்னணியும்

சோ. சந்திரசேகரம்
தலைவர்
கல்வி, சமூக விஞ்ஞான கல்வித் துறைபீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

மலையக சமூகத்தின் கல்வித் துறையிலான பெறுபேறுகளின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்வதே இந்த கட்டுரையின் பிரதான நோக்கமாகும். இத்தகைய இம் முயற்சி மலையக சமூகத்தின் முழுமையான வரலாற்று ரீதியான ஆய்விற்கும் ஒரு முன்னோடியாக அமையும்.

### காலனித்துவ கோட்பாடுகள்

19ம் நூற்றாண்டின் கால கட்டங்களிலும் பிரித்தானிய ஆட்சி கால கட்டத்திலும் காலனித்துவ தத்துவங்களை அடியொற்றிய கல்வி பாரம்பரியம் இந் நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்டது. அரசு சார்ந்த மற்றும் தனியார் துறையிலான அமைப்புகளுக்கான உத்தி யோகத்தர்களை ஆங்கில மொழியின் மூலம் தயார்படுத்துவதே இக் கல்வித் துறையின் நோக்கமாக இருந்தது. ஆங்கிலம் மாத்திரமே உத்தியோக பூர்வமான மொழியாக்கப்பட்டமையால் ஆங்கில மொழியில் அறிவுள்ளவர்கள் மாத்திரமே அரசாங்க தொழில் வாய்ப்புகள் பெறும் உரித்துடையவர் களானார்கள்.

ஆங்கில மூலமான, அதே சமயம் கல்வி கட்டணம் அறவிடப்படும் பாடங்களின் மூலமாக அறிமுகப்படுத்தப் பட்டதன் காரணமாக பொருளாதார ரீதியின் செல்வாக்குமிக்க சமூக அமைப்பினை சார்ந்தவர்களே இதன் பயன்களை பெறக் கூடியதாக இருந்தது.

ஆங்கிலம் உத்தியோக மொழியாக இருந்ததன் காரணத்தால் இயல்பாகவே அம்மொழியில் தேர்ந்தோரே அரசாங்க வேலைவாய்ப்புகளை பெறக் கூடியதாக இருந்தது. இதுவே பிரித்தானிய அமைப்பின் கீழான கல்வி நெறியாக இருந்ததன் காரணத்தினால் ஒரு வர்க்க சார்பான அமைப்பினை தமக்கு சாதகமாக பயன் படுத்திக் கொள்வது மலையக மக்களுக்கு கைகூடாத காரியமாயிருந்தது. இக் காலனித்துவ முறையின் தவிர்க்க முடியாத இரு அம்சமாகவே ஆங்கில மொழி மூலமான கல்வி அமைந்தது.

### ஆங்கில கல்வி முறை

19ம் நூற்றாண்டில் அப்போதிருந்த கல்வி முறை குறித்தும் அதனை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து சிபாரிசு செய்வதற்கென பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. இவ்வாணைக் குழுக்களின் அணுகுமுறை காலனித்துவ தேவைகளை பிரதிபலிப்பதாக இருந்ததின் காரணத்தினால் சமூகத்தில் பின்தங்கிய மக்களின் கல்வி வளர்ச்சியை இவை கவனத்திற் கொள்ளவில்லை. குறிப்பாக 1932ம் ஆண்டில் உருவாகிய கோல்புரூக் அறிக்கையினது ஆங்கில மொழியின் முக்கியத்தவத்தை வலியுறுத்தி சகல பாடசாலைகளிலும் தெரிவாகும் ஆசிரியர்கள் ஆங்கில மொழியில் படிப்பிக்கும் தகைமையை பெற்றிருத்தல் வேண்டு மென்பதை ஒரு நிபந்தனையாக வலியுறுத்தப் பட்டது.

மேலும் கோல்புரூக் பிரேரணைகள் சிங்களமும் தமிழும் கல்வி திட்டத்தில் சேர்க்கப்படுவதை அங்கீகரிக்கவில்லை. அப்போதைய காலகட்டத்தில் சிவில் நிர்வாக உத்தி யோகத்தர்களை வெளிநாட்டிலிருந்து தருவிப்பது செலவு கூடிய காரியமாயிருந்து. இதற்கு பிரதியீடாக உள்நாட்டு சிவில் உத்தியோகத்தர்களை கொண்ட ஒரு அதிகார வகுப்பினரை ஆங்கில கல்வியின் மூலம் தோற்றுவிப்பது காலனித்துவ நோக் கங்களுக்கு சாதகமாக ஒன்றாகயிருந்தது. கோல்புரூக்கின் பிரேரணைகள் 1932ம் ஆண்டில் புதிய கல்வி முறையின் அத்திவாரமாக அக்கால கட்டத்திலேயே இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் வரவும் ஆரம்பமாகியது. ஆனால் 19ம் நூற்றாண்டில் முழுமையான காலப்பகுதியில் தோட்டப்புற மக்களின் கல்வி தேவைகள் முற்றாக புறக்கணிக்கப்பட்டமை காணப்படுகிறது. கல்வித் தேவைகள் குறித்து நியமிக்கப்பட்ட சகல ஆணைக் குழுக்களுமே தோட்டப் புற மக்களின் தேவைகளைக் குறித்து முற்றாக மௌனம் சாதித்தனர்.

உண்மையில் பெருந் தோட்ட கலாசாரத்தின் ஒரு அம்சமாகவே கல்வி அங்கீகரிக்கப் படவேயில்லை, என்பதுடன் தோட்டப்புற குழந்தைகளின் வாழ்வின் தேவைகளுக்கென ஒரு நடைமுறை அம்ச மாக கல்வி அங்கீகரிக்கப்படவுமில்லை. ஒரு உண்மையான விடுதலையின் அடி ப்படை அம்சமாக கணிக்கப்பட வேண்டிய கல்வி தோட்ட துரைமாரை பொறுத் தவரையில் ஒரு ஆபத்தான அம்சமாக கணிக்கப்பட்டது. சிலர் மேலும் ஒருபடி சென்று கல்வியானது தோட்ட தொழிலாளரின் தொழில் திறமைகளை முடமாக்கிவிட கூடும் என்றும் கருதினர்.

### 1900ம் ஆண்டுகளில் அரசு சார்ந்த கல்வியின் நிலைப்பாடு

1901ம் ஆண்டில் சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் குடிசனக் கணக்கெடுப்பு துறையின் சிரேஷ்ட அதிகாரியாக இருந்த பொழுதே சமூகத்தில் பின் தங்கிய மக்களின் கல்வி தேவைகளைக் குறித்து வலியுறுத்தப்பட்டது. 1901ம் ஆண்டில் வெளியிடப்பட்ட பொன்னம்பலம் இராமநாதனின் அறிக்கையில் இலங்கையில் அப்போதிலிருந்து 8,60,000 பள்ளிகூடம் செல்லும் வயதுடைய பிள்ளைகளில் 6,80,000 சிறுவர்கள் அதாவது மொத்தத்தில் 3/ 4 பகுதியினருக்கு பாடசாலைகளுக்கு செல்லும் வசதிகள் இல்லை என்பதை சுட்டிக் காட்டியது. இந்த விபரங்களை ஆதாரமாகக் கொண்டு திரு. இராமநாதன் அவர்கள்

அரசாங்கத்தின் கல்வி கொள்கை பிரதானமாகக் கிராமப்புற தேவைகளை அடியொட்டியதாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்தியதோடு ஆங்கிலம் சார்ந்த நகர்புற உயர்மட்ட கல்வியானது தனியார் மற்றும் நகர சபை சார்ந்த நிறுவனங்களின் பொறுப்பில் விடப்பட வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டார். இதன் பின்னால் ஏற்பட்ட கல்வி சீர்திருத்தங்களுக்கு இக்கருத்து ஒரு கால்கோளாக அமைந்த பொழுதிலும் இச்சட்ட ஆக்கங்களின் மலையகத்தின் கல்வி சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இந்த குடிசன மதிப்பீட்டு அறிக்கையானது இலங்கையின் அரசு சார்ந்த கல்வி முறை குறித்து பிரித்தானிய பாராளுமன்றத்தில் பல கேள்விகள் எழுப்பப்படுவதற்கான காரணமாக அமைந்தது. ஒரு பிரித்தானிய பாராளுமன்ற அங்கத்தவர் கல்வி வசதிகள் கிராமப்புற சிறுவர்களுக்கு மாத்திரமன்றி தோட்டப்புற சிறுவர்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். இவரது இந்த பிரேரணைகள் ஏனைய பல பாராளுமன்ற அங்கத்தவர்களால் வலியுறுத்தப் பட்டமையும் குறிப்பிடத் தக்கது. பிரித்தானிய பாராளுமன்றத்திலும் சில மனிதாபிமான குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்தின் காரணமாகவே தோட்ட நிர்வாகங்கள் கல்வி குறித்த ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துத் தூண்டும்படி இலங்கை காலனித்துவ அரசாங்கத்தை நிர்பந்தித்த காரணிகளாகும்.

இதனைத் தொடர்ந்து 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோட்டப்புற கல்வி குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக முன்னாள் பொதுசன கணிப்பீட்டு அதிகாரியாகவிருந்த S.M. பரோவ்ஸ் என்பவர் நியமிக்கப்பட்டார். அவரது அறிக்கைகளால் தோட்டப்புற கல்வியில் பெரும் பகுதி லயத்துப் பள்ளிக் கூடங்கள் எனப்பட்ட அமைப்பின் மூலமே பெறப்பட்டன, என்பதையும் அவ்வாறு பெறப்பட்ட கல்வி நெறியும் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்தது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். ஆனாலும் தோட்ட தொழிலாளரைப் பொறுத்தவரையில் அந்த அமைப்பே பொருத்தமானதென்றும் மேலும் தாய் மொழி கல்வியே தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

1905ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட வேஷ் ஆணைக்குழு இலங்கையின் பொதுவான கல்வி அமைப்பின் கீழ் தோட்டப்புற கல்வி அமையக்கூடாது என்ற கருத்தை கொண்டிருந்ததுடன் லயன் முறை சார்ந்த கல்வி அமைப்பின் தொடர்ச்சியை ஆதரிக்கவும் செய்கின்றது. இக் கருத்தின்படி ஓரளவு அனுசரணையுடன் கூடிய தோட்ட நிர்வாகத்தின் கீழான கல்வி முறையே தோட்டப்புற மக்களுக்கு உகந்தது என்ற சிபாரிசு முன்வைக்கப்பட்டது. மேலும் ஒரு தோட்ட நிர்வாகி கல்வி தேவைக்காக ஒரு குறிப்பிட்ட அறையையோ அல்லது கட்டிடத்தையோ வழங்கியுள்ளதை அரசாங்கத்திற்கு நிரூபிக்க வேண்டும் என்றும் அப்படி இல்லாத பட்சத்தில் அரசாங்கமே அத்தகைய வசதிகளை வழங்கி அதற்கான செலவை தோட்ட நிர்வாகத்திடமிருந்து அறவிட வேண்டுமெனவும் இவ்வறிக்கை நிர்ப்பந்தித்தது.

கூட்டு மொத்தமாக 1907ம் ஆண்டிலான கிராம புற பாடசாலை கட்டிட அமுலாக்கத்தின் முன்னர் தோட்டப் புற பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட கல்விக்கான காரணங்கள் பின்வருமாறு :

1. **தோட்ட தொழிலாளர்களின் முனைப் பினால் உருவாக்கப்பட்ட "லயன், காம்பரா, பள்ளிகள்"**
2. **கிறிஸ்தவ மிஷன்களால் உருவாக்கப் பட்டவை.**
3. **ஏனைய தனியார் முயற்சிகளினால் உருவாக்கப்பட்டவை.**
4. **தங்களுடைய மதம் சார்ந்த அக்கறைகளை முனைப்பாக கொண்டு இந்து, பௌத்த சமய ஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டது.**

இதை தவிர பெரிய கங்காணிமாரும் தமது ஏனைய கடமைகளுக்கு புறம்பாக பாடசாலை பொறுப்புகளையும் கையாண்டதிற்கான ஆதாரங்கள் உண்டு. பொதுவாக பெரிய கங்காணிமாரும் தோட்ட உத்தியோகஸ்தர்களும் தமது பிள்ளைகளில் கூடிய அக்கறை காட்டியவாறு காண கூடியதாகவிருக்கிறது.

இப்பள்ளிக் கூடங்களில் வழங்கப்பட்ட கல்வி மிகவும் பின்தங்கியதாக இருந்த போதிலும் அக்கால கட்டத்தில் இதனை ஒரு பெறுபேறாகவே கருதப்பட வேண்டும். அரசாங்க பதிவுகளின் பிரகாரம் 1907ம் ஆண்டில் முழு மலையகத்திலும் 1979ல் லயன் காம்பரா இருந்த பள்ளிக் கூடங்கள் இருந்த அதே நேரத்தில் 120 தோட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட காம்பராக்களில் நடத்தப்பட்டன. இவற்றில் 60 பள்ளிக் கூடங்கள் மாத்திரமே அரசாங்க உதவியைப் பெற்றன. இவற்றில் பெரிய கங்காணிமாரின் கண்காணிப்பிலிருந்த பள்ளிக் கூடங்கள் அத்தகைய ஸ்தாபனங்களின் ஒருமைப்பாட்டினை காப்பதில் கூடிய அக்கறை செலுத்தின எனலாம். அதே நேரத்தில் கிறிஸ்தவ மிஷன்களால் நடத்தப்பட்ட பள்ளிக் கூடங்களும் தனியார்த் துறையை சார்ந்த பள்ளிக் கூடங்களும் குறிப்பிட்ட நிர்வாகத்தினரின் ஈடுபாட்டை பொறுத்தே தமது பங்களிப்பை அளித்தன.

20ம் நூற்றாண்டின் விடியலோடு ஆரம்பமாகிய இப்புதிய கல்வி சீர்த் திருத்தங்களின் போக்குகளின் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் 1961ம் ஆண்டளவிலேயே ஆரம்பமாகின எனலாம்.

இதைத் தொடர்ந்து 1970ம் ஆண்டிலிருந்து தோட்ட பாடசாலைகளை படிப்படியாக அரசாங்கம் கையேற்க ஆரம்பித்தது. இந்த பணி 1988ம் ஆண்டளவில் பூர்த்தியாகியது. ஆனால் அரசாங்கத்தின் இந்த தாராள கொள்கைக்கு வெளிநாட்டு உதவிகளை பெறும் நோக்கமும் பின்னணியாக இருந்தது எனலாம்.

ஆனால் இதே காலகட்டத்தில் தோட்டங்கள் அரசாங்க மயப்படுத்தப்படல் போன்ற காரணங்களினால் பல தோட்டப் பாடசாலைகளை மூட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. உதாரணமாக நுவரெலியா பிராந்தியத்தில் 1977ம், 1978ம் ஆண்டளவில் மாத்திரம் 18 தோட்டப் பாடசாலைகள் மூடப்பட்டன.

ஆனால் அரசாங்க மயப்படுத்தப்பட்ட காரணத்தினால் உடனடி முன்னேற்றங்கள் ஏற்பட்டன என கூற முடியாது. அரசாங்கத்தைக் காட்டி தோட்ட நிர்வாகங்கள் தமது பொறுப்புக்களை கைகழுவின. அரசாங்க கல்வித் துறையினரோ அசட்டையாக இருந்தது. ஆசிரியர் பற்றாக்குறை, போதிய வசதியின்மை போன்றவை தொடர்ந்தன. நிர்வாக சீர்குலைவால் ஆசிரியர் வரவும் தோட்டப் பாடசாலைகளில் கணிசமாகக் குறைந்தது. இப் பாடசாலைகளில் மாணவர்கள் ஆசிரியர்களால் கூலிகளைப் போல் நடத்தப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டும்

எழுந்தது. இக்கால கட்டத்தில் தோட்ட பாடசாலைகளில் 6% மானவையே இடை நிலைக் கல்விக்கான வசதிகளைக் கொண்டிருந்தன. இக்கால கட்டத்தில் கல்வியின் வளர்சிக்கு ஆதாரமாக இருந்தது வசதிபடைத்த பெற்றோரின் அக்கறை மாத்திரமே எனலாம்.

### கல்வியின் தராதரம்

இலங்கையின் கிராமப் புறங்களோடு ஒப்பிடும் போது மலையக கல்வி நிலை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. 1953ல் தோட்ட சனத்தொகையினரில் 60 % மானவர்கள் கல்வியறிவு அற்றவர்களாக இருந்தனர். 1963ல் இந்த விகிதம் 57% மும் 1973ல் 52% மும் குறைந்திருந்தாலும் இன்னும் கல்வியறிவின்மை ஒப்பீட்டளவில் கூடுதலாகவே இருக்கின்றது.

அடி மட்டத்தில் காணப்படுகின்ற கல்வியறிவின்மையின் பாதிப்பு மலையகத்தைப் பொறுத்தவரை இடை நிலைக் கல்வி மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் பிரதிபலிக்கச் செய்கின்றது.

பல தோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 6 வரை கல்வி போதிக்கப் பட்டாலும் அதற்கு மேல் கல்வியை தொடர்பவர்களின் தொகை குறைவாகவே உள்ளது. பொருளாதாரப் பிரச்சினை இதற்கு முக்கிய ஒரு காரணியாகும்.

தேயிலை தரகர்களுக்கான ஏஜென்ஸி கொமிஷனின் 1974ம் ஆண்டு அறிக்கையின்படி பாடசாலை செல்லக் கூடிய வகையில் உள்ள சிறுவர்களில் 100,000 பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருக்கின்றனர் என தெரிய வருகிறது. இது அடுத்த ஒரு தசாப்தத்திற்கு கல்வியில் மிகக் குறைந்த தகமை பெற்ற தோட்டத் தொழிலாளர்களை உருவாக்குவதற்கான அடிப்படையாக அமைகிறது. நாம் சுட்டிக் காட்ட வேண்டிய பிறிதொரு அம்சம் தோட்டச் சிறுவர்கள் வீட்டு வேலைகளுக்கும் ஏனைய வேலைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாகும். 1929ம் ஆண்டில் தோட்டத் தொழிலாளர்கள் 2,64,500 பேர் 10 வயதுக்கு குறைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது மொத்த தோட்டத் தொழிலாளர்களில் 36% வீதமமாகும்.

இத்தகைய காரணங்களில் தொடர்ச்சியாகக் கல்வியில் பின் தங்கிய நிலை மலையகத்தில் ஒரு வரலாற்று அம்சமாக தொடர்கிறது எனலாம்.

தோட்டப் புறங்களில் ஆரம்ப கல்விக்கும் இடைநிலைக் கல்விக்கும் இடையே இருக்கின்ற இடைவெளியின் காரணமாக நகர்புற பாடசாலைகளுக்கு செல்லும் தோட்டப்புற மாணவர்கள் பல நடைமுறை பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டி ஏற்படுகின்றது. அதே நேரத்தில் தோட்டப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வியை முடித்துக் கொள்ளும் சகல மாணவர்களும் இடை நிலைக் கல்வியைத் தொடரும் அளவிற்கான இடை நிலைக் கல்வி பாடசாலைகள் மலையகத்தில் இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மலையகத்தின் இடை நிலைக் கல்வியின் குறைந்த தராதரத்தை நோக்கும் போது பல்கலைக்கழக படிப்பிற்கு ஆயத்தம் செய்யும் வகையிலான உயர்மட்ட கல்வி பயிற்சிக்கான வாய்ப்பும் குறைவாகவே உள்ளன.

### பல்கலைக்கழக கல்வி

அண்மை காலம் வரை ஆரம்ப இடைக் கல்வி இலவசமாக வழுங்கப் பட்டாலும் பல்கலைக்கழகத்தில் இந்த உரிமை மலையக மாணவர்களுக்கு மறுக்கப்பட்டே வந்துள்ளது. அவர்களுக்கு பிரத்தியேகக் கட்டணம் அறவிடப்பட்டதுடன், ஏனைய மாணவர்களுக்கு வழுங்கப்படும் சலுகைகள் அனுமதிக்கப்படவில்லை.

1950ல் மொத்த பல்கலைக் கழக மாணவர்களில் 1.4% வீதத்தினரே தோட்டப்புறத்தைச் சார்ந்தவர்கள். 1977ம் ஆண்டு இது 0.1% வீதமாக வீழ்ச்சியடைந்தது. இன்னும் இதே விகிதாசாரம் மிகவும் கீழ் நிலையிலேயே உள்ளது.

தரப்படுத்தும் முறை அறிமுகப் படுத்தப்பட்ட போதும் இந்நிலை மிகவும் மோசமாகியது. உதாரணமாக 1970 / 71 ல் 18 மலையக மாணவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப் பட்டனர். தரப்படுத்தலின் பின்னர் இத்தொகை 11ஆக வீழ்ச்சியடைந்தது. ஆரம்ப இடைநிலை ஆகிய இரு மட்டங்களிலும் ஏற்படுகின்ற பாதிப்புகளின் காரணமாக மலையக மாணவர்கள் ஏனைய மாணவர்களுடன் பல்கலைக்கழக அனுமதிக்காக போட்டியிடுவது சிரமமான காரியமாகும்.

### பாடத்திட்டம்

1907ம் ஆண்டு தோட்டப் புறங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடத் திட்டமே மாற்றங்கள் ஏதுவுமின்றி நீண்ட நாட்களாக அமுலில் இருந்தது. இத்தோடு ஆசிரியர்களின் தகைமைக் குறைவும், ஆசிரியர் பற்றாக்குறையும் நடைமுறையில் இருந்த பாடத்திட்டத்தையும் செயலளவில் பயனற்றவையாக்கின எனலாம்.

### ஆசிரியர்கள்

1963ல் வெளியிடப்பட்ட கல்வி அதிகாரியின் நிர்வாக அறிக்கையின் பிரகாரம் மலையகத்தில் இருந்த 875 பாடசாலைகளை சார்ந்த 1197 ஆசிரியர்களில் 766 பேர் அதாவது 64% விகிதமானோர் சான்றிதழ் பெறாத தகுதியற்ற ஆசிரியர்களாவார். சான்றிதழ் பெற்றவர்களில் பலர் 8ம் வகுப்பு சித்தியை மட்டுமே பெற்று நீண்ட கால சேவையை அடிப்படையாகக் கொண்டு சான்றிதழ் பெற்றவர்களாவர். இவர்களில் சிலருக்கு ஆசிரியர் கலாசாலைக்கு செல்ல அனுமதி கிடைத்தும் பலர் இந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்த விரும்பவில்லை. ஆசிரியர் கலாசாலைக்கு போனவர்களோ தோட்டப்புற பாடசாலைகளுக்குத் திரும்பி வரவில்லை.

தோட்டப்புறங்களிலான ஆசிரியர், மாணவர் விகிதாசாரமும் அதிகமாகும். உதாரணமாக 1970/ 71 அரசாங்க பாடசாலைகளில் 24 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் சராசரியாக இருந்த போது தோட்டப்புறங்களில் 64 மாணவர்க்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை இருந்தது. 1975, 1976ம் ஆண்டுகளில் இந்த சராசரி முறையே ஒரு ஆசிரியர்க்கு 52:53 என்ற விகிதாசாரத்துக்கு இருந்தது.

### கல்வித் துறையின் சீர்திருத்தங்களும் அவற்றின் பாதிப்புகளும்.

1930ம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்தங்கள் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தியதோடு, கல்வித் துறையில் ஜனநாயக ரீதியான பரவலாக்கத்தையும் சாத்தியமாக்கின. பின் தங்கிய சமூக மட்டத்தைச் சார்ந்த சிறுவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்த ஏதுவாயிற்று. இச் சீர்திருத்தங்களாவன:

* **இலவச கல்வித் திட்டம்**
* **இடைநிலை கல்வி மட்டத்தில் தாய் மொழி மூலத்தின் அறிமுகம்.**

* ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒரு மத்திய கல்லூரியை நிறுவுதல்
* 1932ல் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமியமட்டத்திலான கல்வித் திட்டம்.
* அரசாங்க மானியம் பெற்ற பாடசாலைகளை 1961 –ம் ஆண்டு அரசாங்க மயப்படுத்தியமை.

ஆனால் துரதிஷ்டவசமாக இச்சீர் திருத்தங்களில் எவையுமே தோட்டப்புற பாடசாலைகளை சென்றடையவில்லை. தோட்டப்புற பாடசாலைகள் தேசிய கல்வி திட்டத்துக்கு அப்பால் புறம்பாக இயங்கி வந்தமையே இதற்கு காரணமாகும். இவர்களுக்கு ஏற்கனவே இலவசக் கல்வி வழங்கப்பட்டதுடன் தமிழ் மொழியிலேயே வகுப்புகள் நடத்தப்பட்டன. கிராமப்புற சிறுவர்கள் பயனடைந்த மத்திய கல்லூரிகளுக்கு இவர்களால் போக முடியாததோடு 1961ல் பாடசாலைகள் அரச மயப்படுத்தப்பட்ட போது தோட்டப்புற பாடசாலைகள் தொடர்ந்தும் தோட்ட நிர்வாகங்களின் கீழ் இயங்கி வர அனுமதிக்கப்பட்டன.

அத்தோடு கல்வி ஆணைக்குழு அறிக்கைகளிலும் 1930ல் அறிமுகப் படுத்தப்பட்ட கொள்கை அறிக்கையும் தோட்டப் பாடசாலைகளை முற்றாகப் புறக்கணித்தே வந்தன. அப்படி விதிவிலக்காக சிபாரிசுகள் செய்யப்பட்ட போதெல்லாம் அவை தோட்டப்புற கல்வியின் நலன்களுக்கு எதிரானவையாகவே இருந்தன. உதாரணமாக தேசிய கல்வி சபை, பிராந்திய ரீதியில் அமைந்த பாடசாலைகளில் தோட்ட சிறுவர்கள் அனுமதிக்கப்படலாம் என சிபார்சுகள் வழங்கப்பட்ட போதிலும் போதனா மொழி சிங்களமாகவே இருக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்தது. 1964ல் அறிமுகமாகிய வெள்ளை அறிக்கை தோட்டப்பாடசாலை அரச மயப் படுத்தப்படும் பட்சத்தில் போதனா மொழி உத்தியோக மொழியாகவே (அதாவது அன்றைய காலகட்டத்தில் சிங்களமாக) இருக்க வேண்டும் என சிபார்சு செய்தது.

1966ம் ஆண்டு வெள்ளை அறிக்கை உத்தியோக மொழி குறித்து ஒன்றும் கூறாத பொழுதும் தமிழ் மாணவர் சமூக ரீதியான ஒருங்கிணைப்பு சிங்கள மொழி மூலமான கல்வியின் மூலமே பெறப்பட முடியும் எனக் குறிப்பிட்டது. போதனா மொழியைப் பொறுத்தவரை இலங்கை தமிழருக்கு தமிழே போதனா மொழியாக இருக்க வேண்டுமென தேசிய கல்வி சபை சிபார்சு செய்தது. ஆனால் போதனா மொழி குறித்த மலையக மாணவர்கள் சம்பந்தப்பட்ட இந்த சிபார்சுகள் அறிமுகப்படுத்தப்படவில்லை.

முடிவாக பிரித்தானிய ஆட்சி யாளர்களின் அணுகுமுறை தோட்டப்புற கல்வி வளர்ச்சிக்கு அனுகூலமாக அமையவில்லை. தோட்டப் பாடசாலைகள் காலனித்துவ ஆட்சியின் நன்மையை நோக்காகக் கொண்டே அமைக்கப்பட்டன. தோட்டப்புற மக்களின் அபிலாஷைகள் முற்றாக புறக்கணிக்கப் பட்டதுடன் அறி முகப்படுத்தப்பட்ட முறைகளும் மிகவும் குழப்பமானவையாகவே இருந்தன.

ஒரு சாரார் கல்வி தோட்டப்புற மக்களுக்குத் தீங்கையே விளைவிக்கும் என கருதினர். மற்றொரு சாரார் மாறாக கல்வி காலனித்துவத் தேவைகளுக்கு நன்மை பயக்கும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என சிபார்சு செய்தனர். சமய ஸ்தாபனங்களின் சமய ரீதியான பொது பெறுபேறுகளுக்கு முதன்மை அளித்தன. கூட்டு மொத்தத்தில் அனைவரும் தங்கள் சுய நோக்கில் இருந்து மலையக கல்வியை நோக்கினார்களே ஒழிய தோட்டப்புற மக்களின் நன்மையை கருத்திற் கொள்ளவில்லை.

சுதந்திரம் அடைந்த மூன்று தசாப்பதங்களுக்கு தோட்டப்புறக் கல்வியைப் பொறுத்த வரை அரசு காலனித்துவ முறையையே பின்பற்றியது. தோட்டப்புறக் கல்வி தொடர்ந்தும் தேசிய கல்வி திட்டத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டது. தோட்டப்புறக் கல்வி தொடர்ந்தும் தோட்ட நிர்வாகத்தின் கையில் விடப்பட்டதால் சிறிய அளவிலேயே மாற்றங்கள் ஏற்பட்டன. மிக அண்மைக் காலத்தில் அந்நிய நிறுவ னங்களின் நிதி உதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்ட சீர் திருத்துங்களைத் தவிர தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட சீர்திருத்தங்கள் எவையுமே தோட்டப்புற மட்டத்தை எட்டவில்லை என்பது கவலைக்குரிய உண்மையாகும். தோட்டப்புறக் கல்வி மிக நீண்ட காலமாக ஆரம்பக் கல்விக் கட்டத்திற்குள்ளேயே மட்டுப் படுத்தப்பட்டு இருந்தது.

**(தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகம் 16.8.1992ல் நடத்திய கல்வி கருத்தரங்கில் ஆங்கிலத்தில் நிகழ்த்திய ஆய்வுரை)**

**தமிழில் : எல். சாந்திகுமார்**

ஆசிரியர் ஆவதற்கு அறிவுத் திறன் மட்டும் போதாது நூலுக்குப் பின்னால் ஒரு மனிதன் இருக்க வேண்டும்.

– எமர்சன்

## கையெழுத்தே தலையெழுத்தாகி

கம்யூட்டரில்
மூன்று வயதுக் குழந்தை
ஏடு தொடங்கி
பத்து வயதில்
பட்டம் பெறும்.

சட்டலைட்டில்
அமர்ந்த படி
மேற்குலக வாண்டுகள்
பூமி சாஸ்திரம்
படிக்கும்.

ஏவு கணைகள்
மிஞ்சி எரிச்சலில்
சூரியனுக்கு
வியர்த்து கொட்டும்.

மனித பாரம்
தாங்காமல்
நிலா இறங்கி
தரை முட்டும்.

விலங்குகள் கூடி
உலகப் பிரச்சனைகள்
குறித்து
மகா நாடு போடும்.

மலைப் பயல்களுக்கு
மட்டும்
கையெழுத்துப்
போடக் கற்றுக் கொள்ள
ஐந்து வருடங்களாகும்
தலையெழுத்து.

**சுப்ராமைந்தன்**

**தன் பிள்ளைகளை வீட்டு வேலைக்காரர்களாகவும் உணவு விடுதிகள், பலசரக்கு கடைகளுக்கு அனுப்புவதும் பிள்ளைகள் படிக்கும் காலத்தைத் தடைசெய்கிறது.**

# மலையகக் கல்வியைப் பாதிக்கும் காரணிகள்

*கோ. சேனாதி ராஜா (சட்டத்தரணி)*

இலங்கைத் தீவின் மேகங்கள் மூடிய மலைகளில் மழை, குளிர், பனி, வறுமை இனனோரன்னவற்றையும் பொறுமையாக சகித்துக் கொண்டு உழைத்து வரும் இந்திய தோட்டத் தமிழர்களின் துயரம் நிறைந்த வரலாறு இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் இன்னும் இத்துயரக் கதை தொடர்ந்து வருவதை முடிவில்லாத அத்தியாயமாக கொள்ளப் படலாமோ என்ற ஐயப்பாடு எழவே செய்கிறது. இலங்கையின் பொருளாதா ரத்துக்கு தோட்டத்துறை முதுகெலும்பாக விளங்கி வருகின்றதாயினும் தீவின் ஏனைய மக்களின் கல்வி, வாழ்க்கைத்ரம், பௌதீக வாழ்க்கைச் சுட்டெண் என்பன இம் மக்களைச் சென்றடையவில்லை என்று கூறலாம். நீண்ட நெடுகாலமாக புறக்கணிப்புகளுக்கும், அடக்கு முறைகளுக்கும் இம்சைகளுக்கும் இச் சமூகம் ஆளாகி வருகின்றது.

இச் சமூகத்தின் இழையோடும் நெடுந்தூர வரலாற்றினை நோக்குகின்ற போது, அவர்களது சமூகவியல், கலாசாரவியல், பொருளாதார அம்சங்கள் எவ்வகையான மனோபாவத்தை கல்வி சம்பந்தப்பட்ட துறையில் பாதித்தன என்பதை ஓரளவிற்கு தெளிவாகக் கூறுவதற்கு இக் கட்டுரை முயலுகிறது. வெள்ளையர்களினால் குடியேற்ற ஆதிக்க முறையின் கீழ் 19ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருவாய் உழைத்துத்தரும் உற்பத்திகளாக தென்னிந்தியாவில் இருந்து இங்கு கொணரப்பட்டனர். எனவே ஆரம்பத்தில் இச் சமூகம் கல்வியறிவு பெறவேண்டிய நிர்பந்தத்தை அல்லது அவசியத்தை சிறிதளவேனும் பெற்றிருக்கவில்லை. இவ்வாறான ஓர் நிலைமையினை இச் சமூகம் இன்றும் மாற்ற எண்ணியதில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. அதற்கான காரணம் தீவின் ஏனைய இனங்களோடு ஒப்பிடும் போது கல்வித்துறை மிக நெடுந் தொலைவில் இருக்கின்றமையாகும்.

1987ம் ஆண்டின் சமூக நிர்வாக அறிக்கைப்படி இலங்கைத் தீவின் படிப்பறிவு பெற்றோர் ஏறத்தாழ 88% (வீதமாக) இருக்கின்ற போது இச் சமூகத்தின் படிப்பறிவு வீதம் 64% (வீதமாக) இருக்கின்றது. மேலும் 12 வயது தொடக்கம் 19 வயது வரை பாடசாலைகளுக்கு போகாத பிள்ளைகள் தீவில் 6.1% என்கிற வீதத்தில் இருக்க இச்சமூகத்தில் ஏறத்தாழ 34%மாக உள்ளது. இத்தரவுகளின் அடிப்படையில் சில அம்சங்களை உணரக் கூடியதாக உள்ளது. அனேகமாக தோட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பிற்கு மேல் கல்வி கற்பிக்கும் பாடசாலைகள் மிகவும் குறைவாகவே உள்ளமை, 14 வயதிற்கு மேல் தோட்டத் துறையில் தொழில் கொள்வதற்கான அனுமதியை தோட்ட நிருவாகம் வழங்க முன் வந்திருக்கின்றமை என்பன பிரதான காரணங்களாகக் கொள்ள முடியும். எனினும் ஏனைய பல காரணங்கள் இக் குறைந்த புள்ளி விபரங்களுக்கு காரணமாகவுள்ளது. இக் காரணங்களில் மிக முக்கியமானது இச் சமூகத்தின் பல்வேறு வகையில் புரையோடியிருக்கின்ற வரவேற்றகத் தகாத மனோபாவ விழுமியங்களாகும்.

இங்கிலாந்தின் சமூகவியல் பேராசியரியர் ஜோன் நிக்ஸன் என்பார் சமூக கலாசார அம்சங்கள், பாரம்பரியங்கள் ஒரு குறித்த சமூகத்தில் அங்கத்தினராக இருக்கின்ற ஒருவனின் பிறப்பு தொடக்கம் இறப்பு வரையிலான காலப்பகுதியையும் அதன் பின்னர் தொடர்ந்து வரும் அவரின் சந்ததியினரையும் பின்னிப் பிணைந்து வரும் ஓர் அம்சம் என்கிறார். ஆகவே சமூக கலாசார அம்சங்கள் ஒரு மனிதனின் நாளாந்த கடமைகளில் பிரிக்க முடியாதபடி கலந்துள்ளன என்பது தெளிவு. எனின் இவ்வாறான அம்சம் சமூக, பொருளியல், உடற்கூறியல், உளவியல், கல்வி குற்றவியல் என்பவற்றிலும் அது போன்ற பல்வேறு துறைகளிலும் பின்னிப் பிணைந்தவையாகவுள்ளன. எனவே மனோபாவங்களும் அவரவர் சமூகத்தையொத்ததாகக் காணப்படும். மலையக மக்களின் சமூக கலாசார அம்சங்கள் தென்னந்திய தமிழர்களின் கலாசார பண்பாட்டு கோலங்களின் அம்சத்தை நன்கு தழுவி நிற்கிறது. அதே வேளை தீவின் ஏனைய சமூகங்களின் சமூக கலாசார பாரம்பரியங்களை விடவும் வேறுபாடுடையதாக கொள்ளவும் முடியும்.

இச் சமூகம் தம் முன்னோர்கள் தொழிலாளிகளாக இத் தீவிற்கு வந்ததை இன்றும் மனதில் நிறுத்தி வைப்பதற்கான மனோபாவத்தில் உள்ளதாக தோன்றுகிறது. பிள்ளைகளை படிக்க வைத்து என்ன செய்வது என்றோ அல்லது தோட்ட பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பு படித்தாலே போதும் என்ற மனோபாவமும் பெற்றோர்களின் குறைந்த கல்வி தரத்தினால் ஏற்பட்ட அனுபவமாகும். மேலும் இப்பள்ளி சிறார்கள் உழைக்கத் தொடங்கும் வயதினை எட்டும் போது அவர்களின் வயதையொத்த ஏராளமானோர் குறிப்பாக அதே தோட்டத்தில் தொழில் செய்கின்ற போது குறிப்பிட்ட சிறார்கள் தோட்டத் தொழிலில் ஈடுபடலாமென உழைக்க மனநிலை பக்குவப்படுகின்றது. மேலும் இத்தகைய நிலைமைக்கு பெற்றோர்களும் உந்து சக்தியாக இருந்து வருகின்றமை கவலையளிக்கும் விடயமாகும்.

இச் சமூக பெற்றோர்களின் மன நிலை வேறொருவிதமாக வாழ்ந்து வந்துள்ளதை குறிப்பிட வேண்டும். தன் பிள்ளைகளை வீட்டு வேலைக்காரர்களாக வசதி படைத்த வீடுகளுக்கு அனுப்புவதும், கொழும்பிலும் பிற நகரங்களில் இருக்கும் உணவு விடுதிகள், பலசரக்கு கடைகளுக்கு அனுப்புவதும் பிள்ளைகளின் படிக்கும் காலத்தை தடை செய்வதாக உள்ளது. இவ்வாறு நிலைமை குறித்த பிள்ளைகள் ஆரம்ப கல்வியை சரியான முறையில் கற்க முடியாத படியினால் பின்னர் கல்வியின் அவசியத்தை உணர்வதற்கான மனநிலையை அல்லது அனுபவத்தைப் பெறுவதில்லை. சில வேளை படித்த செல்வந்த குடும்பங்களில் வேலை பார்க்கும் பிள்ளைகள் ஓரளவிற்கு கல்வியின் அவசியத்தை உணரக் கூடியவர்களாக இருக்கின்றனர். இருப்பினும் பிள்ளைகள் தொழில் செய்யும் தோட்டக் காடுகளிலும், உணவு விடுதிகளிலும், வியாபார நிலையங்களிலும் உள்ள சமூக சூழ்நிலை, படிப்பறிவு குறைந்த மக்கட்குழு என்பனவற்றால் கல்வியைத் தொடரவோ சிந்திக்கவோ எவ்வித வாய்ப்பும் இல்லாமற் போகின்றது.

தோட்டத்துறை பெண் பிள்ளைகளின் கல்வி நிலை ஆண்களைவிட குறைந்த தரத்தில் இருப்பதான நிலை பெற்றோர்களின் மனோபாவம் அல்லது மனநிலை முக்கிய இடத்தை வகிக்கின்றது. பெண் பிள்ளைகள் ஆண்களுக்கு அடங்கியவர்கள் என்றும் கணவனுக்கு பணிவிடை செய்து குடும்பத்தை, கவனிக்க வேண்டிய முழுப் பொறுப்பும் அவர்களைச் சேர்ந்தது என்ற நிலைமை கல்வியை தொடர விடாது தடுக்கும் காரணிகளாக அமைந்து விடுகின்றது. மேலும் பெற்றோர்கள் வேலை தளத்திற்கு செல்லும் போது குறிப்பிட்ட பெண்ணின் அல்லது சிறுமியின் தம்பி தங்கைகளைக் கவனித்துக் கொள்ளவும் உணவு தயாரிக்கவும் இது போன்ற வேறு காரணங்களுக்காகவும் படிக்கின்ற வயதையுடைய பெண்பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாது தடுக்கப் படுகின்றனர் அல்லது கல்வி கற்கும் சூழ்நிலை இல்லாமல் செய்யப்படுகின்றது. இலங்கையில் பள்ளிக்குச் செல்லாத பெண் பிள்ளைகள் 6.7% வீதமாக இருக்க தோட்டத்துறை பெண்கள் 43% வீதமாகவுள்ளனர். இப் புள்ளி விபரம் தோட்டத் துறையில் பெண் பிள்ளைகளின் கல்வித்தரம் எத்தனை தூரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை கோடிட்டு காட்டுவதாக உள்ளது. மேலும் பெண்களின் கல்விநிலை வீழ்ச்சியடைவதற்கு துணை காரணிகளாக பெண்களை விடுதியில் சேர்த்து படிப்பிப்பதற்கு வாய்ப்பில்லாமை, "பெண் பிள்ளைகள் அதிகம் படித்து என்ன செய்யப் போகிறார்கள்" என்ற வளராத மனநிலை, இளம் வயதிலேயே திருமண உறவை ஏற்படுத்துதல் என்பனவாகும். மகாகவி பாரதியார் ஆண்களுக்கு சமமாக பட்டங்களையும், சட்டங்களையும் பெண்கள் பெற்று ஆள வேண்டும் என்ற கனவு இன்று தோட்டத்துறையில் வெறும் கனவாகவே உள்ளது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண வகுப்பிற்கு மேல் பயிலும் மாணவர்கள் மத்தியிலும் ஒரு வித்தியாசமான அணுகுமுறை கொண்ட மனோபாவத்தைக் காணலாம். கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் முதல் முறை சித்தியெய்தியதன் பின்னர் பெறுபேறு சிறப்பாக இல்லையாயின் இரண்டாம் முறை இப் பரீட்சை எழுதுவது மிகக் குறைந்தளவினதான மாணவர்களே. மேலும் இப் பரீட்சையை எழுதிய பின்பு படிக்கும் காலம் முடிந்து விட்டதாக அல்லது முற்றுப் பெற்றதாக சிந்திக்கும் மன நிலையினை உடையவர்களாய் உள்ளனர். மேலும் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை சித்தி பெற்று ஆண்டு, பன்னிரெண்டு, பதிமூன்றுகளில் கல்வி பயிலும் மாணவர்கள் திடீரென்று பாடசாலையில் இருந்து விலகிக் கொள்கின்றமையும் உயர்தர பரீட்சையில் குறிப்பிடக் கூடிய அளவிற்கு சித்தி பெற முடியாமைக்கான சில மனோதத்துவ காரணங்களையும் குறிப்பிடலாம். பொதுவாக மலையக மாணவர்கள் க.பொ.த. பரீட்சை எழுதியதும் அவர்கள் வியாபார ஸ்தாபனங்களில் சேர்ந்து விடுகின்றனர். அல்லது அவ்வாறு சேர்த்துக் கொள்வதற்கான மாணவர்களை படிக்கும் போதே செயல் படுத்துகின்றனர். மேலும் தோட்டப் பகுதிகளில் இலிகிதர், மேற்பார்வையாளர் போன்ற பதவிகளுக்காக விண்ணப்பித்து முடிவிற்காகக் காத்திருக்கின்றனர். இந் நிலைமை கல்வியை நன்கு ஊன்றி கற்பதற்கு தடையான ஓர் மனநிலையை அவர்களின் பால் தோற்றுவிக்கின்றது. எனவே பரீட்சை திறம்பட எழுதுவதற்கு குறிப்பிட்ட மாணவர்களிடம் போதிய திறன் இல்லாமல் போய்விடுகின்றது. இலங்கை தீவின் பள்ளிக்குச் செல்லாத பிள்ளைகள் வயது 15 – 19 வரை 6.5% வீதமாக இருக்க தோட்டத்துறை பிள்ளைகளின் வீதம் 33.2 ஆக உள்ளமை இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கதாகும். (வயது 15 முதல் 19 வயது வரை சாதாரண வகுப்பில் இருந்து உயர்தர வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவர்களின் வயதினைக் குறிக்கும்) மேலும் உயர்தர வகுப்பு பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெருமைக்கு ( கல்வி வசதிகள், பௌதீக காரணிகள், பொருளாதார காரணிகள் நீங்கலாக) பெரும்பாலான உயர் வகுப்பு மாணவர்களின் சிறந்த பெறுபேறு பல்கலைக் கழக நுழைவிற்கு வழிகாட்டும் என்பதையும், அவ்வாறு தெரிவித்துக் கொண்டாலும் பல்கலைக்கழக கல்வி சிறப்பான வாழ்க்கைக்கு வழிகாட்டும் என்பதை அறியாத மனோபாவமாகும்.

பல்கலைக் கழக பிரவேசம் தொடர்பான விடயத்தை நோக்குகின்ற போது பல்கலைக்கழக அனுமதி கிடைத்த மாணவர்களில் பல மாணவர் பல்கலைக் கழகம் செல்லாமை என்பதாகும். அண்மைக் காலமாக மலையகத்தில் வழங்கப்படும் ஆசிரியர் நியமனங்கள் குறிப்பிட வேண்டும். "அரசாங்க தொழில்" என்ற ரீதியில் ஆசிரியர் தொழிலின் பால் இம் மாணவர்களில் சிலர் ஈர்க்கப்படுதில் வியப்பில்லை எனலாம். எனவே பல்கலைக்கழக நுழைவையும் இவர்கள் கைவிட்டு விடுகின்றனர். மேலும் சமூக ரீதியாகவும் உறவு ரீதியாகவும் மலையக குடும்ப அங்கத்தினர்கள் யாவரும் நன்றாக கல்வி கற்றிருக்கின்ற நிலைமை காணல் அரிது. எனவே குறிப்பிட்ட குடும்ப அங்கத்தினரில் ஒருவர் உயர் கல்வியை பெற வழி ஏற்படும் போது குறிப்பிட்ட மாணவர் (அங்கத்தவர்) தனது இதர சகோதரர்கள் செய்யும் தொழிலின் பின் (வியாபாரம் போன்றவை) ஈர்க்கப் படுகின்றார். எனவே "தானும் படித்து என்ன செய்ய, உழைக்க வேண்டும்" என்ற மனோபாவத்தைப் பெறுகின்றார். மேலும் பல்கலைக்கழக கல்வியின் தாற்பரியத்தையும் அதன் இயல்புகளையும், அவசியத்தையும் உணர்த்தக் கூடியதாக "ஆலோசனைகளை" வழங்க உயர் கல்வி கற்ற குழு அல்லது அங்கத்தினர்கள் எனக் குறிப்பிடப் படுபவர்களில் பெரும்பான்மையோர் சமூக அங்கத்தினர்களிடம் தன் கல்வி அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள தயக்கம் காட்டுவது கவனிக்கத் தக்கதும் மனவருத்தம் அடையச் செய்யும் விடயமும் ஆகும்.

பல்கலைக்கழக கல்வியின் பின்னர் தொழில் தகைமையளிக்கும் பட்டங்களை (சட்டத்தரணி, வைத்தியம், பொறியியலாளர்கள், கணக்காளர்) பெற்றவர்கள் மீண்டும் தாம் பிறந்த, வாழ்ந்த மண்ணிற்கு வருவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். அவர்களின் கல்வி தராதரத்துக்கு ஏற்ற நண்பர்கள் கிடைக்காமையும், கௌரவ குறைவு என்ற மனநிலையும் இதில் முக்கிய இடம் வகிக்கின்றது. இதன் காரணங்களினாலும் இத்தகைய படித்தோர் மலையகத்தை வந்தடைவது மிகக் குறைவாக உள்ளது.

✪

## விமான நிலையத்திலிருந்து.....

அது ஒரு கண்ணீர், அது
விழுவதற்கென்றோர் இடமுண்டு
அது ஒரு கண்ணீர், அது
விழுவதற்கென்றொரு நேரமுண்டு
அது ஒரு கண்ணீர், தாயும் மகனும்
தழுவிப்பிரியும் கண்ணீர்
இரத்தக் கண்ணீர், அது அப்பாவித்
தென்றலென்று அலையும் கண்ணீர்
இறைவனின் மகனே, கதறாதே,
அவரின் தாலாட்டில் உறங்கு
என் குஞ்சே, உனைப் பார்க்க
வென்று வந்திடுவேன் விரைந்து
உனக்கென்று, பரிசில்கள் பல
அனுப்பிடுவேன் பாசம் சுமந்து
அம்மாவே, பொறுக்குமோ நெஞ்சம்
உன் வார்த்தைகளை மறந்து

தம்பியோடு நானும், சமமாய்
வளர்ந்தோம் உன் முலைப் பாலில்....
ஒரு வேளையெனினும், உன்
உணவால் உயர்வாய் வளர்ந்தோம்
தாயே, உன் தேகத்தில் இருந்து
எப்படித்தான் பிரிவதோ?
எப்படிப் பொறுப்பதாம், உன்னை
எங்கோ பாலைவனத்தில் இழந்து

அது ஒரு கண்ணீர், அப்பாவிப்
பாவத்தால் பிறந்த கண்ணீர்
இரத்தக் கண்ணீர், தாயும் மகனும்
தழுவிப்பிரியும் கண்ணீர்
மானுட இதயம் எப்படித்தான்
ஏற்றிடுமோ இத்துன்பங்களை
பேயாய் மாறுமோ, வரும் நாட்களில்
இந்த பூமியிலே

**பராக்கிரம கொடித்துவக்கு –**

**தமிழில் : மடுலுகிரியவிஜயரத்ன**

சிறுகதை

# பெரியசாமி பீ. ஏ. ஆகிவிட்டான்.

நூரளை சண்முகநாதன்

'நம்ம பெரியசாமி – அது தான் தொங்க காம்பரா செவனாண்டி ஊட்டு மகே ..... அவே டவுனுக்கு பெரிய படிப்பு படிக்க போனாயில்ல, அந்த படிப்புல அவே..... தேறிட்டானா....... இப்பதா கடதாசி வந்திருக்கு........'

அன்று காலையிலேயே அந்தத் தோட்டம் முழுவதும் இதே கதைதான்.

எப்பிடியும்...... செவனாண்டி கொடுத்து வெச்சவேதா....... பின்னே மகே பீ. ஏ. பாஸா கீட்டானா சும்மாவா.... நம்ம ஊட்டுலையினு...... ஒன்னு இருக்கே...... பொறுக்க தின்னுபுட்டு 'ரஸ்தியாதி' அடிச்சிகிட்டு.......

'நம்ம தோட்டத்துக்கே இது ஒரு பெருமை. பின்னே இருக்காதா என்ன? ஐஞ்சி ஆறு கிளாசோட படிப்புக்கு தோப்புக்கரணம் போட்டுக்கிட்டு மலையில பேரு பதியிறதுலையே நம்ம பயலுகட காலோ பொகுது. இப்பிடி கொஞ்சபேரு படிச்சாதாம்பா நம்ம சனங்களு உருப்படு. இப்ப பாரு ஒரு கூப்பன் புஸ்தோ போம் நிரப்ப, தந்தி ஒன்னு எழுத, இங்கிலீசுல காயுதம் எழுத எத்தனை பேருகிட்ட பல்ல காமிக்க வேண்டியிருக்கு.........'

அன்று 'மஸ்டரில்' கூட இப்படி பெரியசாமி பீ. ஏ. ஆகிவிட்ட கதையும், அந்தத் தாக்கம் அந்தச் சமூக உயர்வுக்கு மக்களின் உயர்வுக்கு எங்கனம் பயன்படப் போகின்றது என்பதைப்பற்றியுமே எல்லோரின் பேச்சுக்களும் உரைத்துக் கொண்டிருந்தன.

அன்று சிவணாண்டியின் குடும்பமும், தோட்டமும் எத்தகைய மகிழ்வை அடைந்து கொண்டிருக்கின்றதோ அதற்கு மூலகாரணம் என்று சொன்னால் அது கண்டாக்கையா முருகையா தான். அவர் மட்டும் இல்லாதிருந்தால் மற்றையத் தோட்டத்துச் சனங்களைப் போல தோட்ட ஸ்கூலோடே தன் எழுத்தறிவுக்கு 'தலையெழுத்து' என்று முழுக்குப் போட்டு விட்டு மம்மட்டியோ அல்லது மருந்து பம்பையோ தூக்கிக் கொண்டு, மலைக்குப் போய் தொங்கல் காம்பரா பெரிசாமியாகத்தான் அவனும் போய் இருப்பான். எல்லாமே அவர் முயற்சி தான். வேலை நேரத்தின் போது அந்த ஏழை ஜனங்களிடம் எத்தனை கண்டிப்போடும், கடுகடுப்போடும் அவர் நடந்து கொள்வாரோ, அந்த அளவு மதிப்பும் வாஞ்சையும் அந்தச் சனங்கள் மேல் அவருக்குண்டு. அவரைப் பொறுத்தவரை அவர்களுக்காக – அவர்களின் வாழ்வுத் தரத்தை உயர்த்துவதற்காக – தனிப்பட்ட முறையில் அவரால் எதையும் சாதிக்க முடியவில்லையாயினும் அச்சமூக உயர்வுக்காக ஏதாவது ஒரு சிறு தாக்கமாவது ஏற்படுத்த வேண்டும் என்கிற துடிப்பு அவர் உள்ளத்தில் உறுதியாகப் பதிந்திருந்தது.

"ஏய் நீ பழனி ஊட்டு மகே... இல்ல..... இங்க என்னு 'புள்ளையாரு' அடிச்சிகிட்டு இருக்கிறயா. அடி நல்லா அடி. இப்படியே அடிச்சிகிட்டிருந்தா நீயூ ஒங்க அப்பனாட்டோ மலையில மருந்தடிக்க வேண்டியதுதா. போயி லாம்பு வெச்சுவுட்டு பொஸ்தகத்த எடுத்துப்படி...... அப்பதா நீயூ தொரமாதிரி சூட்டு கோட்டு எல்லா போடலா........."எனத் தோட்டத்துப் பையன்களைக் காணும் போதெல்லாம் ஏதாவது 'நையாண்டி' யாகச் சொல்லி, அவர்களை எப்போதும் தட்டி விட்டுக் கொண்டே இருப்பார். இந்த நிலையில் சிவணாண்டியின் மகன் பெரியசாமியின் மேல் அவரின் பார்வை விழுந்து விட்டது. அதற்கேற்றால் போல் அவனது மூளையும் அமைந்து விட்டது.

ஒருநாள் முருகையாவோடு பேசும் போது தோட்ட ஸ்கூல் 'எட்மாஸ்டரும்'–

'இங்க பாருங்க பெரியசாமி படிப்புல எண்டா நல்ல ஆர்வமுள்ளவனாக இருக்கிறான். நான் கூட்டிக் கழிக்கிறதுக்கிடையில அவன் கூட்டிக் கழிச்சி பெருக்கியும் போடுறான் பாருங்கோ.... அவனுக்கிருக்கிற ஆர்வத்திக்கி கடைசி ஒரு ஆசிரியராக ஆவது அவன் வரணும். தோட்ட ஸ்கூலோடேயே அவனது படிப்பு முடிஞ்சி, மலைக்கு மம்மட்டி பிடிக்க போயிடுவானோ யார் கண்டது........'

'யார் கண்டது' என்ற கேள்வியோடேயே மாஸ்டர், முருகையாவிடம் இருந்து கழன்று விட்டார். இத்தோடு அவரது பிரச்சனையும் சரி. இதேபோல் எவ்வளவோ, நல்ல ஆர்வமுள்ள மூளைகளெல்லாம் தோட்டத்தின் கான் வழிப்பதுவும், மலையில் மருந்தடிப்பதும் மாஸ்டக்குப் பரிச்சயமாய்ப் போய் விட்ட ஓர் விசயமும் கூட. இதைவிட அவரால் எதைத்தான் கணித்துவிட முடியப்போகிறது. தோட்டம் கொடுக்கும் சம்பளத்தில் குடும்பத்தை ஓட்டுவதே பிரச்சினையாக இருக்கிறபோது இல்லாத பிரச்சினைகளையும் மாஸ்டர் தலையில் தூக்கிப் போட்டுக் கொள்ள விரும்பவில்லை.

மாஸ்டரின் இந்தப் பேச்சும் பெரியசாமியின் ஆர்வமும் நல்ல தன்மைகளும் இதை எப்படியாவது செயற்படுத்தியே ஆகவேண்டும் என்ற மன உறுதியைத்தான் அவருள் வளர்த்து வந்தது. அவர் செயலாக்க முனையப்போகிற செயலை தனித்து நின்று சாதிக்கும் தைரியம் அவருக்கில்லைத்தான். ஏனென்றால் அவரோ தோட்டத்தில் கையேந்தி நிற்கும் ஒரு லேபர் தானே? டவுன்புற முதலாளிகள் தெரிந்த சிலரைக் கண்டு பேசியதோடு, இதற்கான அத்திவாரத்தையும் வளர்த்து வந்தார் முருகையா.

'படிச்சி நாம என்னத்ததா காண போறோ சாமி...... இத்தோட தோட்டத்தில பேருபதிஞ்சிட்டா அவனு ஏதாவது சம்பாதிச்சா எனக்கு எவ்வளவோ செரமோ கொரஞ்ச மாதிரி இருக்கு சாமி'



மலையக சிறுகதைகள் நூலுருவில் வெளிவராத காரணத்தால் இன்றைய தலைமுறையினரின் பார்வையிலிருந்து படைப்புகள் தப்பி விடுகின்றன. மலையகத்தின் நுவரெலியாவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நூரளை சண்முகநாதன் எழுபதுகளில் நல்ல சிறுகளைகளைத் தந்தவர். இதுவரை 50 சிறுகதைகள் வரை எழுதியவர் இன்றும் அறியப்படாதவராகவே இருக்கிறார். இவரது சிறுகதைகள் மலையக மக்களின் பிரச்சனைகளையும், அவல வாழ்வையும் அடி நாதமாகக் கொண்டது.

என முருகையாவிடம் பெரியசாமியின் அப்பன் சொல்லும் போதெல்லாம் அவனுக்குப் புத்தி கூறி, பெரியசாமியின் படிப்புக்கு எந்தவித பாதகமும் ஏற்படாது கவனித்துக் கொண்டார். தோட்டத்திலிருந்து பஸ் ஏறி டவுன் சென்று கல்லூரியில் படிக்கத் தொடங்கி விட்டான் பெரியசாமி. எப்படியோ அரசாங்கப் பரீட்சையில் முதல் தரத்துடன் பாசாகிவிட்டான் பெரியசாமி.

ஆனால் அதற்குப்பின் அவனைப் படிக்கவைப்பதென்றால் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி யாக வேண்டும். ஆனால் அதற்குரிய வசதிகள், பணபலம் எல்லாம் முருகையாமுன் மலையாக நின்றன. இதை எப்படியும் சமாளித்தாக வேண்டும்.

அன்று தோட்டத்து ஸ்கூலில் இதற்கென்று தோட்டச் சனங்களையெல்லாம் கூட்டி ஒரு கூட்டமே கூட்டியிருந்தார் முருகையா.

"இது 'மஸ்டரில்ல' அத நாள நா ஏசுவேன்னோ......... கடுகடுப்பா இருப்பேன்னோ யாரு நெனைக்கபடாது. நம்ம தோட்டத்த நெனைச்சு பாருங்க. அது அன்னையவிட இன்னைக்கு எவ்வளவோ உயர்ந்திருக்கு. அது வாஸ்தவோ தா....... ஆனா அந்த உயர்வுக்கு காரணமா இருக்கிற நாம.. நம்மலோடை குடும்பம் அன்னைக்கிருந்த லயோ, கம்பளி, ஸ்கூல், இப்படியே நம்ம வாழ்க்க ஓடிக்கிட்டிருக்கு. நாமவாழ்ந்தது ஏதோ முடியப்போற ஒண்ணு. ஆனா நம்ம பின்னால இருக்கிற நம்ம இளசுகள், அதுகளையும் நாம போன பாதையிலேயே இட்டுக்கிட்டு போயி, அதுகளையும் மலை, மம்மட்டி, மருந்தடிப்பு, கொழுந்தெடுப்பு, ஒரு சாராருக்கு அடிமையாக இருந்து அவங்களு அவல வாழ்வதா வாழணுமா? அதுகளையும் நம்ம வழியிலேயே விட்டு ஏதோ சரிதான்னு இருந்திடுறதா.......? எல்லா கொஞ்சோ யோசிக்கணு. இப்ப இங்க நாம கூடியிருக்கிற காரணே குப்பிலாம்பு வெளிச்சத்தில படிச்சிகிட்டு இருக்கிற நம்ம சமூகத்து இளைய தலைமுறைகல்ல சிலதுகளையாவது நாம உயர்ந்த படிப்பு படிக்க வைக்க முயலணும். சிவணாண்டி போல ஏழை தொழிலாளிகளாலையோ அல்லது உங்களாலேயோ என்னாலேயோ தனித்து இதை சாதிக்க முடியாது. ஏனுன்னா நாமலே அன்றாடம் கஞ்சி தண்ணிக்கே பிரச்சனையாக நிக்கிறவுங்க. அதனாலேதா நாம எல்ல ஒண்ணுசேந்து இதுக்கு நடவடிக்கை எடுக்கணும். அதுக்குமொதல் படியா நம்ம செவணாண்டி மகே பெரியசாமிய யூனிவசிட்டிக்கி அனுப்பி படிக்க வைக்கனும். அதற்கு நாம எல்லா நம்மால முடிஞ்சத செய்யறது. இது தனிப்பட்ட ஒருத்தனுக்கு செய்யற உதவியா யாரும் நெனைக்கப்படாது. இது நமது வருங்கால தலைமுறைக்கு, நம்ம சமூகத்திக்கு, அதன் உயர்வுக்கு செய்யப்படுற உதவியாக இருக்கனும் எத்தனையோ பெரியசாமிகள் இந்தத் தோட்ட சமூதாயத்தில் இருந்து போயி, டாக்டரா, இன்ஜினியரா வரணும். அப்பதா நமக்கு நம்ம சமூகத்துக்கு விடிவு பிறக்கும்.

முருகையாவின் பிரசங்கத்தைக் கேட்ட தோட்ட மக்கள் எல்லோரும் ஏதோ தம்மால் இயன்ற உதவியைச் செய்யத்தவறவில்லை. அது செவணாண்டியின் மகனுக்காகச் செய்தார்களா அல்லது நாளைய சமுதாய விடிவிற்காகச் செய்தார்களா அல்லது கண்டாக்கையா முருகையாவிற்காகச் செய்தார்களா இது அவர்களுக்குத் தான் வெளிச்சம்."

ஒரு மாதிரி பெரியசாமி பல்கலைக் கழகத்திற்குப் பட்டப் படிப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டான். சில பெரிய கைகளின் உதவிகளோடு தான் நினைத்த காரியத்தைச் சாதித்து விட்டார் முருகையா. அன்று தோட்டத்தை விட்டுப்புறப்படுகையில் பெரியசாமி தன்னை வழியனுப்ப வந்திருந்த தன் தோட்ட சகாக்களைப் பார்த்து உணர்ச்சிவசப்பட்டுப் பேசிய பேச்சுக்கள் அந்த மலைகளை முட்டி எதிரொலித்தது.

'நான் இன்றைக்கு இத்தோட்டத்தை விட்டு நாளைய ஒரு சமூக விடிவிற்காக ஒளியேற்ற முடியும் என்ற நம்பிக்கையோடு போகிறேன். இந்தத் தோட்டம், நான் குடும்பமாக வாழ்ந்த தோட்ட ஜனங்களும், எனக்காக என் படிப்பிற்காக செய்த உதவிகளுக்கெல்லாம் நன்றி என்ற சொல்லோடு மட்டும் தான் இன்று விடை பெறுகிறேன். நாளை, அது நமது சமூகத்தின் கதிரவனாக இருக்க வேண்டும். நல்ல கல்வி அறிவு அவ்வறிவால் ஜனிக்கப்போகிற கலாச்சார மறுமலர்ச்சி, அம் மலர்ச்சியில் இந்தத் தோட்டத்தில் புதுப் புது அறிவு மலர்கள் மலர வேண்டும். அம்மலர்களை மலர்விக்கும் உரமாக என் பிற்கால வாழ்வு இருக்கும். இது தான் உங்களுக்கு, என் உயர்வுக்குப் பாடுபடும் பெரியவர் முருகையாவிற்கு, இச்சமூகத்திற்கு நான் செய்யக்கூடிய நன்றிக்கடன். இன்று இங்கிருந்து ஒரு பெரியசாமி தான் போகிறான். போகமுடிந்தது. இனிமேல் கூட்டம் கூட்டமாய், அம்மாசி மகனும், மாரியாயி மகனும், பட்டம் வாங்கப் போகவேண்டும். அதற்கு இந்துப் பெரியசாமி என்றைக்குமே முதல் ஆளாக நின்று உதவுவான்' என்று கூப்பிய கரத்தோடு தோட்ட மக்களின் மகிழ்ச்சியோடும் கரகோஷத்துடன் அவனை வழியனுப்பினர். முருகையா இக்காட்சியைக் கண்டு பூரித்து நின்றார்.

காலங்கள் தோட்டத்தைப் பொறுத்த வரை கவ்வாத்துக்களாக ஓடி மறைகின்றன. இன்று பெரியசாமி பீ. ஏ. ஆகிவிட்டான்.

பெரியசாமி வந்தவுடன் என் வீட்டில் விருந்து, என் வீட்டில் விருந்து என்று பெரிய கிளார்க் முதல் சின்னக்கங்காணி வரை நான் முந்தி நீ முந்தி என போட்டி போட்டுக் கொண்டு நின்றனர். எல்லாம் சுயநலம் தான். ஒரு பீ. ஏ. தம் மருமகனாக மாட்டானா என்கிற நப்பாசை தான்.

'அடேயப்பா நம்ம செவணாண்டி மகனுக்கு அடிச்சதுதா 'சுக்கிர தெசங்கிறது' நேத்து பய மூக்கொழுவிகிட்டு திரிஞ்சவே........ அவனுக்கு வந்த மதிப்பு. பெரிய கிளாக்கருல இருந்து கங்காணி அய்யாமட்டு அவனுக்காக இல்ல காத்திருக்காக........... ஏதோ நம்மலோட ஒன்னா பொலங்கிகிட்டு கெடத்தவே தா...... ஆனா இப்ப அப்படி ஏலுமா'

இப்படி பல பேச்சுக்கள் பெரிய சாமியைப் பற்றியே சுற்றி வந்தது. பெரியசாமி பீ. ஏ. பட்டதாரியாகி தோட்டத்திற்கு வந்து விட்டான். அவன் பீ. ஏ. மட்டும் ஆகிவிடவில்லை. ஆளே மாறிப்போய் இருந்தான்.

இறுகப் பிடித்த கால்சட்டை 'பட்டீக் சேட்' காதளவு நீண்ட சைட்பேண்ட், கையில் ஜேம்ஸ் பொண்ட் பேக்....... வேட்டியோடு, கண்டவர்களெல்லாம் வாயிலே கை வைத்திருந்தார்கள். 'டேய்.... மச்சான் என தோள் மேல் கை போட்டுப் பழகியவர்களிடம் எல்லாம் எதையோ காணக் கூடாததைக் கண்டுவிட்ட மாதிரி ஒதுங்கி நடந்தான்.


ஏதோ பெயருக்குப் பிறந்து வளர்ந்த லயத்துக்குச் சென்றான். ஆனால் அதிக நேரம் அவனால் அந்தப் பழகிய சூழ்நிலையில் இருக்க முடியவில்லை. மலத்தை மிதித்து விட்டவனின் நிலை.

அடுத்த, அடுத்த நாட்கள் பெரிய கிளார்க், சின்னக்கிளாக்கர் வீடுகளிலேயே கழிகின்றன. அவர்களோடு அவனால் ஒத்துப்போக முடிகிறது. வந்து ஒரு கிழமையாகி விட்டது. முன்பு யூனிவசிட்டியில் இருக்கும் போதே 'டிரை' பண்ணிய ஒரு கிளார்க் ஜொப் கொழும்பில் இப்போது கிடைத்துவிட்டதாகக் கூறி, கொழும்பிற்குப் புறப்பட்டு விட்டான் பெரியசாமி.

நாளைய ஒரு சமூக விடிவிற்காக ஒளியைத் தேடிப்போகின்றேன்............. என போகுமுன் பேசிவிட்டுப் போன பேச்சுக்கள் மகாவலி கங்கையோடே போய் விட்டது போலும்.

முருகையா இப்போது அதிகமாக எவரிடமும் கதைப்பது கிடையாது. இப்போது தோட்டப் பையன்கள் 'பிள்ளையார்' எட்புரூஸ் அடிப்பதைப் பார்த்து, 'அடிங்கடா இதுதா ஓங்களுக்கு லாய்க்கு. அப்பே மருந்தடிக்கிறா........ அடுத்தா நீங்க அடிங்க......... அப்பனோ ஒங்க மகேமாருங்க அடிப்பாருங்க அடிப்பானுக எல்லா....... ஒங்களோட தலைவிதிடா. எப்படியாவது போங்க நமக்கென்ன..........' என முருகையா முனங்குவதோடு சரி.

**மல்லிகை**



# பாரதியின் ஜாதிச் சாடல்கள்

'ஜய்ராம்ஜி'

சின்னஞ்சிறு வயதில் பிஞ்சு நெஞ்சங்களில் பதிய வைக்கும் எண்ணங்கள் -நல்லதோ கெட்டதோ- அவர்களிடம் நீடித்து நிலை பெறுகின்றன. எனவே தான் பாரதி, பாப்பா பாட்டில் பல அடிப்படை நீதிகளைச் சொல்லி, அவர்கள் மனதில் பதிய வைக்க முயல்கிறார்.

**'ஜாதிகள் இல்லையடி பாப்பா'**

என்ற இந்த வரிகள், இந்தியச் சமூதாயத்தின் அரிச்சுவடியாக அமைந்துள்ளதைக் காண்கிறோம். நம் முன்னோர்கள் செய்யக்கூடாததைச் செய்யாதே என்று சொல்லும் போது, அதனுடன் பாவ புண்ணியக் கணக்கைச் சேர்த்துக் கூறுவார்கள். பாரதியும் அதே பாதையில் பயணம் செய்கிறார். ஜாதிப்பிரிவுகள் கூறி உயர்வு தாழ்வு பார்ப்பது நமக்குத் தீமை தரும் என்பதைக் குறிப்பிடுவதற்கு,

**'ஜாதிகள் இல்லையடி பாப்பா–**
**குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'**

என்றார். குழந்தைகளின் மனத்தில் அரிச்சுவடியைப் புரியவைத்து விட்டால் அதுவே உயர்வு தாழ்வு அற்ற சமூதாயத்தின் அடித்தளமாக அமைந்து விடும்.

ஆனால் இன்று நம் நாட்டில் நடப்பதோ இதற்கு நேர் எதிர்மறை. 'நான் தாழ்த்தப்பட்டவன்' என்ற பெருமைப் பூரிப்போடு தான் நமது குழந்தைகள் பள்ளிப் படிகளை மிதிக்கின்றன. இந்தப் பறைசாற்றல் பிறரால் தாழ்த்தப்படும் நிலைமாறித் தன்னைத் தானே தாழ்த்திக் கொள்கிற நிலைக்கு, நமது இளம் பிஞ்சுகளின் நெஞ்சங்களைப் பக்குவப் படுத்துகிறது. அவர்கள் ஜாதிப் பாகுபாட்டில் பழக்கப்பட்டுப் போகிறார்கள்.

## 'நாலு வகுப்பும் ஒன்றே'

ஆதியில் நம் நாட்டில் ஜாதிகள் இல்லை. தொழில் செய்ய ஏற்பட்ட பிரிவுகள் நாளடைவில் நிரந்தர ஜாதிகளாகவே நிலை பெற்று விட்டன. இது பற்றி 'முரசு' என்ற தலைப்பில்,

**வேதம் அறிந்தவன் பார்ப்பான் பல வித்தை**
**தெரிந்தவன் பார்ப்பான்,**
**நீதி நிலை தவறாமல் – தண்ட நேமங்கள்**
**செய்பவன் நாய்க்கன்,**
**பண்டங்கள் விற்பவன் செட்டி – பிறர்**
**பட்டினி தீர்ப்பவன் செட்டி......**

என்று மூன்று ஜாதிப்பிரிவுகளின் வேலையைக் குறிப்பிட்டுக் கூறும் பாரதி, நான்காவதான ஏவல் செய்து பிழைக்கும் அடிமை ஜாதி இல்லை என்பதே,

**'சாதிப் பிரிவுகள் சொல்லி – அதில்**
**தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்'**

எனக் கூறி, இப்படிப் பிரிவினைச் செய்யாமல், ஒருவரோடு ஒருவர், அன்பு கொண்டு பழகினால் இந்த உலகம் செழிக்கும் என்பதை,

**"சாதிக் கொடுமைகள் வேண்டாம் – அன்பு**
**தன்னில் செழித்திடும் வையம்........"**

என்று ஆதரவுற்று வாழ்ந்து ஜாதிப்பிரிவினைகளை நீக்கி, ஆயிரம் தொழிலைச் சிறப்படையச் செய்வோம் என்கிறார். இந்த நாட்டில் பிறந்து விட்ட எவரும், வேறு எவருக்கும் தாழ்ந்தவர் இல்லை. அனைவரும் சமம்.

**'ஜாதி மதங்களைப் பாரோம் – உயர் ஜன்மம்**
**இத்தேசத்தில் எய்தினராயின் வேதியர்**
**ஆயினும் ஒன்றே – அன்றி**
**வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே......'**

என்று குலப் பாகுபாடு இல்லைமையை வலியுறுத்தும் பாரதி, ஈனப்பட்ட பிறவிகள் என்றால் கூட, அவர்கள் எல்லோரும் இங்கு ஒன்றாக வாழ்ந்திருப்பவர் தானே.

**'தொண்டர் என்றோர் வகுப்பு இல்லை'**

என்கிறார். இல்லாத ஒன்றைச் சேர்த்து, நான்காகக் கூறப்படும் போது, இந்த நான்கும் ஒரே ஜாதிதான் என்கிறார். பிறகு ஏன் இந்த நால் வகைப் பிரிவுகள்? இந்த நான்கில் ஏதாவது ஒன்று தாழ்ந்தால் கூட, இந்த மானுட இனம் முற்றிலும் வீழ்ந்து விடும் என்பதை இவ்வாறு,

**நாலு வகுப்பும் இங்கு ஒன்றே – இந்த**
**நான்கினில் ஒன்று குறைந்தால்,**
**வேலை தவறிச் சிதைந்தே – செத்து**
**வீழ்ந்திடும் மானிடச் சாதி**

என்று கூறுகின்றார். இப்போது பாரதி, ஜாதிப் பிரிவுகள் நீங்கிய ஒட்டு மொத்தமான ஒரே மனித ஜாதி பற்றிச் சிந்திப்பதைக் காணமுடிகிறது.

## 'அன்னியர் புகல் என்ன நீதி?'

தொடர்ந்து, பாரதியிடம் திடீர்க் கோபம். அது நாம் அனைவருக்கும் அடிமைப்பட்டுக் கிடந்த காலம். ஜாதிகள் இல்லை என்று சொல்லும் அதே நேரத்தில், 'எத்தனை ஜாதிகள் வேண்டுமானாலும் இருக்கட்டுமே அதனால் என்ன? அது எங்களுக்குள் உள்ள பிரச்சனை. அதில் அன்னியர்கள் வந்து தலையிட, அவர்களுக்கு என்ன உரிமை?' எனச் சாடுகிறார். அதன் மூலம், இந்தியர் அனைவரும் சண்டையிட்டாலும் சகோதரர் என்ற உணடமையை நிலை நாட்டுகிறார். பாடல் வரிகள் இதோ,

**ஆயிரம் உண்டிங்கு சாதி – எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி? – ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோர் – தம்முள் சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ?**

அன்னிய ஆதிக்கத்தில் உலவிய பாரதி, தனது கற்பனையில், நமது பாரத விடுதலையைக் கண்டு மகிழ்கிறார். விடுதலை பெற்ற பாரதம், எத்தகைய ஏற்றம் பெற்றிருக்கும் என்பதைத் தனது மனக்கண் முன் இப்படிக் கண்டு ரசிக்கிறார்.

**"ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை சாதியில்**
**இழிவு கொண்ட மனிதர் என்பர்**
**இந்தியாவில் இல்லையே......."**

என்று கூறிவிட்டுத் தொடர்ந்து, சுதந்திரப் பள்ளுப்பாடும் பாரதி,

**"..............நாம் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு"**

என்று உறுதி செய்கிறார்.

பாரத சமூதாயத்தை வாழ்த்திப் பாடும் போது, பிற்பாடு நம் நாட்டில் வரப்போகும் குடியரசை மனத்திற் கொண்டு, எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற கருத்தை வெளியிட்டு, மக்களாட்சியின் மாண்பை உணர்த்திப் பேசுகிறார். இந்திய மக்கள் 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம்', என்கிறார். இந்திய நாட்டிலிருந்து நீங்க வேண்டிய தீமைகளைக் கூறிப்போகின்ற பாரதத்தைச் சபித்துப் பாடும் போது, மறக்காமல்,

**"ஜாதி நூறு சொல்லுவாய் .........**
**போ.... போ...போ......"**

என்று ஜாதிகளை விரட்டியடிக்கிறார். ஒரு நாட்டின் தாழ்வுகளைப் பற்றி வேதனைப்படுபவர்கள் அந்த நாட்டின் அறிஞர்களும் கவிஞர்களும் தான். அந்த முறையில் பாரதி நமது பாரதச் சிறுமைகளை எண்ணிப் பார்த்துக் குமுறுகிறார். அவரது நெஞ்சு பொறுக்காமல் வேதனைகளைக் குமுறிக் கொட்டுகிறது. அதிலும் குறிப்பாக, இங்குள்ள ஜாதிப் பிரிவினைகளை எண்ணி,

**கொஞ்சமோ பிரிவினைகள் – ஒரு கோடி என்றால் அது பெரிதாமோ?**

என்று வினா எழுப்புகிறார். அத்துடன் நில்லாது, ஜாதிக்குள் ஜாதியாக, இங்குப் பிளவுபட்டுக் கிடக்கும், சைவ – வைணவப் பூசல்களை,

**'ஆத்திரம் கொண்டே இவன் சைவன் –**
**இவன் அரிபக்தன் என்று**
**பெரும் சண்டையிடுவார்'**

என்று வேதனைப்படுகிறார்.

## 'குரு கோவிந்தர்'

குரு கோவிந்தர் என்று ஒரு கவிதை. அதில் ஜாதி பற்றிய கருத்துக்கள் விரிவாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அதில் ஹிந்துக்கள் அனைவரையுமே 'ஆரியச் சாதி' என்று குறிப்பிடுகிறார். அதே போல் வேறு பல இடங்களில் தமிழ்ச்சாதி எனக் கூறி, பிரிவினைப்பட்டுக் கிடக்காத ஒட்டுமொத்த உருவையும் 'சாதி' என்றே கூறி அதன் குறை நிறைகளைச் சுட்டிக் காட்டி, அச்சாதியின் உயர்வை நிலை நிறுத்தத் தனது ஆதரவை வெளிப்படுத்துகிறார். இது போன்ற இடங்களில் 'சாதி' என்று அவர் குறிப்பிடுவது, ஒட்டுமொத்த மக்களைக் குறிப்பிடுவதே அன்றிப் பிளவுபட்ட ஜாதிகளைக் குறிப்பிடுவது அல்ல என்பதை நாம் நினைவில் நிறுத்த வேண்டும்.

குரு கோவிந்தர் தம் சீடர்களுக்குக் கூறுவதாக அமைந்த அடிகள் பல உள்ளன. எனினும் இந்திய நாட்டினர் அனைவருக்குமே அவற்றை ஒரு பொது நீதியாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

**'சீடர்காள் குலத்தினும்**
**செயலினும் அனைத்தினும்**
**இக்கணம் தொட்டு நீர்**
**யாவரும் ஒன்றே**
**பிரிவினை துடைப்பீர்,**
**பிரிதலே சாதல்,**

**பாகுபாடற்ற ஒரே மனித ஜாதியை வலியுறுத்தும் பாரதி, மேலும் பரந்த நோக்கில், காக்கை குருவி போன்றவற்றையும் அந்த ஜாதியில் சேர்த்து மகிழ்கிறார்.**
**'காக்கை குருவி எங்கள் சாதி – நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்'.**

## இரண்டு ஜாதிகள்

'இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்' என்று, ஜாதிகளை இரண்டாகப் பாகுபாடு செய்தாள் தமிழ் மூதாட்டி. அதை மேற்கோளாகக் காட்டும் பாரதி,

**'சாதி இரண்டொழிய வேறில்லை என்றே தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம்'**

எனப் பாடி, ஔவைக் கிழவி கூறியது எத்தனை உயர்வான பகுப்பு என வியக்கிறார். அத்துடன் நில்லாது அதே இரண்டு ஜாதிகளை தனது நோக்கில் மேலும் பரந்ததாக்கிப் புதிய பகுப்பை நிலைநிறுத்துகிறார்.

**'நீதி நெறியில் நின்று பிறர்க்குதவும்**
**நேர்மையர் மேலோர், மற்றவர் கீழோர்'**

என்று பிறர்க்கு இடுவது மட்டும் போதாது பிறர்க்கு எல்லா வகையிலும் உதவ வேண்டும் என்கிறார். நீதி நெறியில் நின்று நேர்மையோடு உதவுவதற்கு அழுத்தம் கொடுக்கிறார்.

வேறோர் இடத்தில் இதே இருவகை ஜாதிப் பகுப்பை இன்னும் சற்று விரிவாக்கி,

**'நீதி உயர்ந்த மதி கல்வி – அன்பு**
**நிறைய உடையவர்கள் மேலோர்'**

என இந்த நான்கு உயர் குணங்கள் இல்லாதவர்கள் அனைவரும் தாழ்ந்தவர்கள் என்பதைக் கூறாமல் கூறுகிறார்.

இப்படி பலவாறு எடுத்துக்கூறிய பிறகும் கூட, நம்மிடம் காணப்படும் ஜாதிப் பாகுபாடுகள் குறையாததை எண்ணி வேதனைப்படும் பாரதி, வெள்ளைய அதிகாரி ஒருவன், இந்தியனைப் பார்த்து, உங்களிடம் உள்ள,

**'சாதிச் சண்டைகள் போச்சோ – உங்கள்**
**சமயச் சண்டை போச்சோ.......'?**

என்று எள்ளி நகையாடுவது போல் பாடல் அமைத்து, நம்மை இடித்துரைக்கிறார். இந்த வரிகளை, ஒவ்வொரு இந்தியனையும் பார்த்து அவர் கேட்கும் கடுஞ்சொற்களாகவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

வேறொரு இடத்தில் புதிய கோணங்கியாக உருவெடுத்து நம் நாட்டில் இனி நடக்கப் போவது என்ன என்பதைச் சொல்லும் போது பலவாறு பிரிந்து கிடக்கும் நமது மக்கள் ஒன்று கூடிச் சண்டையைத் தவிர்த்து இனிது வாழப்போகிறார்கள் என்று நல்ல குறி சொல்கிறார்.

**'ஜாதிகள் குறையுது.............**
**சண்டை தொலையிது'**

எனப் பாடுகிறார். இப்பாடலின் இறுதியில்,

**'சாத்திரம் வளருது, சாதி குறையுது'**

என்றும் பாடுகிறார். ஆனால் பாரதியின் வாக்குப்படி, நம் நாட்டில் ஜாதிகள் குறைகின்றனவா இன்று? இல்லையே..... சாதிப்பாகுபாடுகள் மேலும் அல்லவா ஊக்கப்படுத்தப்படுகின்றன?

**நன்றி . தமிழ்மணி**

# மலையகம் வளர்த்த இலக்கியம்

- அந்தனிஜீவா

மலையகம் வளர்த்த இலக்கியம் பற்றிய வரலாற்றை ஆராய்வோமானால் மலையக மக்கள் என்று இனம் காணப்படும் மக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூன்றாம் தசாப்தத்திலிருந்து குறிப்பாக 1828ம் ஆண்டு முதல் இலங்கையில் குடியேறியவர்களில் தொடர் சந்ததியாவார்கள் ஆங்கிலேயர்கள் தங்களின் பெருந் தோட்டங்களில் வேலை செய்வதற்கென்றே இவர்களை கொண்டு வந்தனர்.

இவர்கள் இங்கு வரும்போது துங்களோடு தங்களின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் கொண்டு வந்தார்கள். அவர்கள் அவ்விதம் கொண்டு வந்தது, பழமை மிகுந்த வளம் நிறைந்த தென்னிந்திய கலாச்சாரமாகும் அதனையொட்டியே மலையக இலக்கியம் வளர்ந்துள்ளது.

மலையக இலக்கியம் ஆரம்ப காலங்களில் வெறும் வாய்மொழி பாடல் இலக்கியமாகவே இங்கு வளரத்தொடங்கியது. மலையகம் வளர்த்த இலக்கியம் பற்றி பரந்த அடிப்படையில் நோக்கினால் எப்போது இந்த மக்கள் இங்கு வந்து குடியேறினார்களோ அன்று தொட்டே இவர்களின் கலை இலக்கியப் பண்பாடுகள் வளரத்தொடங்கின.

இவர்களின் ஆரம்பகால வெளிப்பாடுகள் வாய்மொழி இலக்கியமாகவே அமைந்தன. கிராமியப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், தோட்டப் பாடல்கள், தெம்மாங்கு, குரவைப் பாடல்கள், தாலாட்டு ஒப்பாரி எனக் குறிப்பிடப்படும். இவ்வாய்மொழி இலக்கியப் பாடல்கள் மலையக மக்களின் அடிமன உணர்வுகளை அவர்களது ஆசாபாசங்களை அழகுற வெளிப்படுத்துகின்றது.

மலை சூழ்ந்த தோட்டங்களில் வாய்மொழி இலக்கியமான நாட்டார் பாடல்களுடன் ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி, ராஜா தேசிங்கு, நளமகாராஜன் கதை, விக்கிரமாதித்தன் கதை, மாரியம்மன் தாலாட்டு போன்றவற்றைப் பாடியும் படித்தும் வந்தார்கள். வாய்மொழி இலக்கியமான இவைகளில் இந்த சமூகத்தினரின் துன்ப துயரங்கள் சோகப் பெருமூச்சுக்கள் மாத்திரமன்றி அவர்களின் ஆசாபாசங்களையும் காதலுணர்வுகளையும் வெளிப்படுத்தியது.

கண்டி சீமைக்கு வருவதற்கு அனுபவித்த கஷ்டத்தையும், கங்காணிமார்களிடம் அனுபவித்த கொடுமையை, கோப்பி பயிரிடப்பட்ட காலத்தில் ஏற்பட்ட அவலத்தை அதன் பின்னர் தேயிலைப் பயிரிடப்பட்ட காலத்தில் இடம் பெற்ற மாற்றத்தையும் அவைகளில் காணலாம்.

1920ம் ஆண்டு வரை இந்த நிலையே நீடித்தது. அதன் பின்னர் அவர்களது உணர்வுகள் அச்சில் இடம் பெற்றன. சட்ட நிரூபண சபையிலும், அரசாங்க சபையிலும் பிரதிநிதித்துவம் வகித்த கோ.நடேசய்யர் முக்கிய பங்கு வகித்தார். மலையக மக்களிடையே ஓர் எழுச்சிக்கும் ஆக்க இலக்கிய முயற்சிக்கும் வித்திட்ட பெருமை கோ.நடேசய்யரையே சாரும். இலங்கை தமிழ் பத்திரிகை துறைக்கு பெரும் பணியாற்றியுள்ளார்.

தென்னிந்திய பிராமணரான கோ.நடேசய்யர் தஞ்சாவூரில் அரசாங்க பணியில் இருந்து விட்டு பின்னர் பத்திரிகை ஒன்றில் பணியாற்றி அப்பத்திரிகைக்கு சந்தா திரட்ட இலங்கை வந்துள்ளார். பின்னர் 1920ல் இலங்கை வந்து "தேசநேசன்" என்ற பத்திரிகையின் ஆசிரியராக பொறுப்பேற்றார். பின்னர் "தேசபக்தன்" என்ற பத்திரிகையும் நடாத்தியுள்ளார். பத்திரிகையாளராக பணியாற்றிய அய்யர் மலையக மக்களின் விடிவுக்காக தன்னை அர்ப்பணித்தது மாத்திரமல்லாமல் அம்மக்களுக்காக எழுதியும் பேசியும் மகாகவி பாரதியின் பாடல்களைத் தனது மனைவியார் மீனாட்சி அம்மாளின் இனிய குரலின் மூலம் பாட வைத்ததுடன், மலையக ஆக்க இலக்கியத்திற்கு வழிகாட்டியாக திகழ்ந்துள்ளார்.

ஆனால் இதற்குப்பின்னர் கோப்பிக் காலத்தில் கண்டி மாநகருக்கு அருகில் தெல்தோட்டையில் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் வாழ்ந்தார். இவரே மலையக கவிதை இலக்கியத் துறைக்கு முன்னோடியாவார். இவரை மலையக கவிதை இலக்கிய முதல்வர் என்று அனைவரும் ஏற்றுக் கொள்வர். மலையக தோட்டத் தொழிலாளர் மத்தியில் அப்துல் காதிர் புலவர் மதிப்பு பெற்று விளங்கினார். இவர் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அச்சேறாத நூல்கள் பல உள்ளன. செந்தமிழின் செய்யுள் மரபை உணர்ந்து மாலை, பதிகம், அந்தாதி, கலம்பகம், குறவஞ்சி, புராணம், சிந்து முதலிய வகைகளில் தன் ஆற்றலையும் புலமையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த மக்களிடையே ஆக்க இலக்கிய முயற்சியில் திருப்பம் ஏற்பட்டது. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலும், அதற்கு அடுத்த இரண்டு தசாப்தங்களிலும் இலங்கை அரசியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. அதனால் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. அது கால வரை அடிமைகளாக இருந்தவர்கள் அனாதைகள் ஆக்கப்பட்டார்கள். இந்த நிலைமையில் உருவான ஓர் ஒப்பற்ற இலக்கிய வாதியே சி.வி. வேலுப்பிள்ளை. இவரது கவிதைகளும், நாவல்களும், நடைச் சித்திரங்களும் இம்மக்களின் துன்ப துயரங்களை மிகத்துலாம்பரமாக வெளிப்படுத்துகின்றன.

ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதும் ஆற்றல் மிக்க எழுத்துக்களால் சி.வி. வேலுப்பிள்ளை மலையக மக்களின் துன்ப துயர வாழ்வை அகில உலகிற்கே வெளிச்சம் போட்டுக் காட்டினார் அவரது IN CEYLON TEA GARDEN என்ற கவிதை நூலே இந்த அரும் பணியைச் செய்தது. இதனை மலையகத்தின் மற்றும் ஒரு கவிஞரான சக்தி பாலையா "தேயிலை

தோட்டத்திலே" என்ற பெயரில் தமிழ் வடிவம் கொடுத்தார்.

"புழுதிப் படுக்கையின்
புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற்
புகல் மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர்
கல்லறை இல்லை
பிரிந்தவர் நினைவு நாள்
பகருவாரில்லை........

என தேயிலைத் தோட்டத்திலே என்ற நூலில் சி.வி. குறிப்பிட்டுள்ளார்.

அறுபதுகளுக்கு பின்னரே "மலையக இலக்கியம்" பற்றிய நாடளாவிய ரீதியில் அறிமுகம் கிட்டியது. 1963 ல் ஆசிய ஆபிரிக்க கவிதைகளின் முதலாம் தொகுப்புவெளிவந்த பொழுது இலங்கை, சீனா, கொங்கோ, இந்தியா, இந்தோனேசியா, கொரியா, சூடான், தங்கனிக்கா, ரஷ்யா, வியட்நாம் ஆகிய பத்து நாடுகளைச் சேர்ந்த எழுபது கவிஞர்களின் கவிதைகள் இடம் பெற்றன. இதில் இடம்பெற்ற ஒரே தமிழரின் கவிதை மலையக இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவரான மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளையின் படைப்பாகும்.

வாழும் சமுதாயத்தை நேரிடையாக வெளிப்படுத்துவதாக இலக்கியம் அமைய வேண்டும். மலையக எழுத்தாளருக்கு முன்னோடியாக விளங்கியவர் சி.வி.வேலுப்பிள்ளை. இவரின் பின்னால் ஒரு புதிய தலைமுறை உதயமாகியது. மலையக இலக்கியத்தில் புதிய பார்வையும், புதிய வீச்சும் கொண்ட படைப்புக்கள் வெளி வந்தன. இவர்களுக்குத் தூண்டுதலாக மலையக இயக்கங்களும், சஞ்சிகைகளும், தேசிய தினசரிகளும் உற்சாகமூட்டி உரமிட்டு வளர்த்தன.

மலையக இலக்கிய கர்த்தாக்கள் கடல் கடந்து நடைபெறும் இலக்கியப் போட்டிகளில் பங்கேற்று சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் எழுத்துக்களை வெளியிட்டு இலங்கை இலக்கியத்திற்கு பெருமை சேர்த்தனர். தமிழகத்து 'கல்கி' யில் வெளியான திருச்செந்தூரனின் "உரிமை எங்கே?" என்ற சிறுகதை இச்சிறப்பைப் பெற்றது. சி.வி. வேலுப்பிள்ளையின் "இனி படமாட்டேன்" என்ற நாவல் மதுரை அமெரிக்கன் கல்லூரியின் எம். ஏ. உயர் வகுப்பு பாடநூலாக உள்ளது.

பிறந்ததிலிருந்து இறக்கும் வரை துயரம் மிகுந்த மலையக மக்களின் வாழ்க்கை, இம் மக்கள் கல்வியால் வறியவர்கள், உழைப்பால் சுரண்டப்படுகிறவர்கள், ஊதியத்தால் வஞ்சிக்கப்படுகிறவர்கள், இவர்களுக்கு சொந்தமாக வீடில்லை, இவர்களுக்கு சரியான தலைமை இல்லை, இதனை இவர்களைப் பற்றிய இலக்கியங்களில் காணலாம். மனித நேயம் பாடுவதாக அமைந்த படைப்புக்களே அதிகம். இதனாலேயே பேராசிரியர் கைலாசபதி இலங்கை தமிழ் இலக்கியத்தில் மலையகம் புதிய இரத்தம் பாய்ச்சியது. எனக் கோடிட்டுக் காட்டினார்.

நன்றி , 'ஊவா இலக்கிய மலர்'

✪

## இராமனின் கேள்வி

மானே .................
மாயத்தனங் காட்டும்
மானே...............
என்
மனைவி முன்னா
நீ
பொன்நிறங்காட்டி
அவளை
மயக்கப் பார்க்கிறாய்?
அட
மாரிஸ மானே.........
கட்டிய சேலையோடு
என்னுடன்
கானகம் வந்த இவள்
மாற்றுடை யின்றி
இருக்கும் போது
நீயோ..........
பொன்நிற வடிவாகி
இப்பெண் முன்னால்
நிற்கிறாயே........?
எங்கிருந்து
நீ
பொன் பெற்றாய்
எவரை சுரண்டி
உன் மேனி அழகுற
பொன் முலாம்
பூசிக் கொண்டாய்
சொல்..........உடனே
எடுத்ததை – அவர்களிடமே
திருப்பிக் கொடு
இல்லையேல்
என்
அம்புக் குறி
தப்பாது

மல்லிகை சி. குமார்

படித்துச் சுவைத்தவை

### பொய்

மண் பொய் சொல்வதில்லை
மிதிக்கிறோம்
மரம் பொய் சொல்வதில்லை
வெட்டுகிறோம்
மந்திரி பொய் சொல்கிறார்
மாலை போடுகிறோம்

கந்தர்வன்

நன்றி 'சிறைகள்'

✪

மராட்டியக் கவிதை

## அன்றும் இன்றும்

சந்திரகாந்த் பண்டரிநாத்

முப்பாட்டன்
எங்கு பிறந்தானோ
அங்கே
பாட்டன் பிறந்தான்

அப்பன்,
மகன்,
பேரன்,
பிறந்தனர்

அதே குடிசை,
அதே ஒழுக்கு;
அதே நாற்றம்;
அதே இருட்டு.

அதே சுலோகம்:
"அன்று அடிமைப்பட்ட
நாம்
இன்று உரிமையோடு
உள்ளோமா?

ஆங்கில மூலம்
தமிழாக்கம்
கு. இராமச்சந்திரன்

✪

இந்த நாவலின் மிக முக்கியமானதாக எனக்குப்படுவது அதன் தலைப்புத்தான்" என்று கார்த்திகேசு சிவத்தம்பி செங்கை ஆழியான் எழுதிய 'இந்த நாடு உருப்படாது' முன்னுரையில் குறிப்பிடுகின்றார். எனினும் மீரா வெளியீடு கடைசியில் இந்த நாவலை 'மண்ணின் தாகம்' என்ற தலைப்பில் தான் வெளியிட்டுள்ளது.

## குன்றின் குரல்



குறிஞ்சி மலரோ ?
குளுமை நிலவோ ?
கரும்பின் சுவையோ ?
கனிவாய் அமிழ்தோ ?
அரும் ஸ்ரீ பாத கல்வி
அறிவியற் பீடம்
அரும்பும் நாளில்
பெருமித மகிழ்வோ - ?

ஸ்ரீ பாத கல்வியற் கல்லூரி 23 - 8 - 1992 அன்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மலையக மக்களின் கல்வி நிலை பாலர் கல்விப் பருவத்திலிருந்து புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் என்பது பலரின் எண்ணம். அதற்காக ஆரம்பக் கல்வி ஊட்டும் ஆசிரியர்களின் பணி பெரிதும் வேண்டப்படுகின்றது.

ஸ்ரீ பாத கல்வியற் கல்லூரி பெருந்தோட்டப் பகுதிக்கான ஆரம்பக் கல்வி ஆசிரியர்களையும் மற்றும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களையும் வழங்கும் நிலையமாக இனி இயங்கப் போகின்றது.

இந்திய வம்சாவளி மக்கள் மலையகத்தில் ஒரு பல்கலைக்கழகம் இருந்தும் அதைச் சரிவர அனுபவிக்க முடியாத நிலை.

சியன்னே, மாவலி, பஸ்தும் ரட்ட, ஹாப்பிட்டி கம, சாருபுத்த, நில்வளா, ஊவா என கல்வியற் கல்லூரிகள் 1986 ல் இருந்து பெரும்பான்மையினரால் அனுபவிக்கப்பட்டு வருகின்றன. காலங்கடந்தாவது தமிழ் மொழி மூலம் பத்தனையில் ஒரு கல்வியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் அதனையும் முழுமையாக அனுபவிக்க முடியாதமை துரதிர்ஷ்டமாகும்.

இந்த ஸ்ரீ பாத கல்வியற் கல்லூரி தனியே தமிழ் மொழி மூலம் ஆசிரியர்களுக்கு மட்டும் அமையுமானால் இன்னும் சரியாக தேசிய பிரவாகத்தில் கலக்க முடியாத மலையக மக்கள் கல்வி துரிதமாக உயர்த்துவதற்கான வழி முறைகளை நோக்கியே கலைத்திட்டங்களைக் கொண்ட அவசியமான கல்லூரியாக அமைய முடியும். அப்போதுதான் இது சிறந்த கல்வியற் ஆய்வு நிறுவனமாகவும் தனித்து செயற்பாடு கொண்டதாகவும் இயங்க முடியும்.

இரு மொழி மூல கல்லூரியாக இருப்பதால் தேசிய கல்விக்கு சார்பாக இது இயங்க வேண்டி இருப்பதால் பின்தங்கிய மலையக தமிழ் கல்வி நிலைக்கென விஷேட கவனம் செலுத்த முடியாது போய்விடும். உரியவர்கள் இதற்கான அக்கறை எடுப்பது அவசியமாகும். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் தேவையில்லை தானே !

http :\\ www. thamizham. net